அக்டோபர் 2024

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்


இந்தியா

www.rotarynewsonline.org

Vol.7, Issue 5 | Annual Subscription ₹ 480
Rotary News, October 2024, Chennai



Rotary

Rotary
District 3212

THE MAGIC OF ROTARY



# PROJECT FOCUS

## Goal Setting / Effective Public Speaking

**Project Focus is a pioneering project of Rotary Club of Virudhunagar (RID 3212), which aims at helping the school and college students, the former to achieve their goals and the latter to overcome their fear of public speaking.**

### *Goal Setting*
### For school students

**Size: Minimum 50 Students – Maximum 500 Students**
**Duration: 2 Hours**
**Medium of Training: Tamil & English**
**Audience: Government, Government Aided and Private school students**

This programme guides the school children to fix their goals and focus on them to taste success and contentment in their lives. Through this initiative, JCI Area Trainer, Rtn. M.A.P.R. Rengasamy, facilitates the students to develop action plans and work towards realizing their dreams. Through mentorship, educational resources and other forms of support, this transformative initiative is dedicated to helping students achieve their full potential.

### *Effective Public Speaking*
### For college students

**Size: Minimum 20 Students – Maximum 60 Students**
**Duration: 6 Hours**
**Medium of Training: Tamil & English**
**Audience: Government and Private college Students**

This programme empowers the youth to come out of their fear, hesitation and anxiety in public speaking. It emphasizes the importance of effective communication skills in their personal, professional and family life. It regulates their pattern of speaking, delivery skills, presentation tactics and content drafting. Overall, it equips the college students to crack their placement interviews with confidence.

LEKHA ads/Oct 24/ Rotary/FIW

| Total no.of occurrences of Project Focus | Project Focus | Within RID 3212 No. of occurrences | Beyond RID 3212 No. of occurrences | No. of beneficiaries |
|---|---|---|---|---|
| 95 | Goal Setting Schools | 26 | 10 | 5989 |
| | Effective Public Speaking – Colleges | 27 | 32 | 2833 |

**IDHAYAM**
PROMISE OF HEALTH AND HAPPINESS



Faculty
Rtn.M.A.P.R. Rengasamy
99444 11961

Do you want to conduct Project Focus in your Town/City/District?
We are waiting to partner with you.

ADVT.

# உள்ளே




12

ரோட்டரி இதயங்களின் ராஜா!



24

நைஜீரிய மருத்துவர்களுக்கான கண் பராமரிப்பு பயிற்சி



28

சிறைக் கைதிகளுக்கான எழுத்தறிவுத் திட்டம்



32

பால்கரின் பழங்குடியினருக்கு உதவும் மும்பை ரோட்டேரியர்கள்



40

லக்கிம்பூரில் அன்னபூர்னா மையம்



42

பசுமைக் களத்தில் ரோட்டேரியன்கள்



48

ஆந்திர, தெலங்கானா வெள்ள நெருக்கடியில் உதவிய ரோட்டரி



Rotary

A publication of Rotary Global Media Network


## மின்னிதழ் கட்டணம் குறைப்பு

ஜூலை 1, 2024 முதல் எங்கள் மின் பதிப்பு சந்தா ₹420-லிருந்து **₹320**-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## ரோட்டரி நியூஸ் வடிவமைப்பு மாற்றங்களுக்கான பாராட்டுக்கள்

*புதிய தோற்றம் கொண்ட இதழில் உள்ள எழுத்துரு தேர்வுகள் தனித்துவ மானவை, மேலும் அவை முழு பத்திரிகையையும் தனித்து நிற்கச் செய்கின்றன. ஆகஸ்ட் இதழில் உள்ள அட்டைப் படம் கண்களைக் கவரும் காட்சியாக இருந்தது. காட்சியமைப்பு மிகவும் ஆக்கப்பூர்வமாகவும் வியக்கத்தக்கதாகவும் இருந்ததால் பத்திரிகையை என்னால் படிக்காமல் இருக்க முடியவில்லை. மேலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தியது. ரோட்டேரியர் அல்லாத அதிகமானோர் இந்த இதழை அணுக முடியும் என்பதால், மின் பதிப்பின் விலை குறைப்பு பயனுள்ளதாக இருக்கும்.*

*ஜிதேந்திர குல்கர்னி,* RC *ஜபல்பூர் வெஸ்ட்* — D 3261



*ஆகஸ்ட் மாத இதழின் அட்டைப்படம் சிறப்பாக, கவர்ச்சிகரமாக மற்றும் ஈர்க்கக்கூடியதாக இருந்தது. மேலும், கிளப் மேட்டர்ஸின் புதிய வடிவமைப்பு மிகவும் ஆக்கப்பூர்வமானது மற்றும் இந்த மாற்றம் மிகவும் வரவேற்கத்தக்கது. நான் கண்டறிந்த மற்றொரு புதிய அம்சம் தலைப்புகளின் புதுமையான வடிவமைப்பு மற்றும் பயன்படுத்தப்படும் எழுத்துருவில் மாற்றம்.*

*பியூஷ் தோஷி,* RC *பேலூர்* — D 3291

*கட்டுரைகளின் அமைப்பில் புதிய பாணி மற்றும் ரோட்டரி செய்திகளில் புதிய மற்றும் வித்தியாசமான எழுத்துருக்களின் பயன்பாடு மிகவும் நன்றாக உள்ளது. பாராட்டுக்கள்*

*வீரய்யா,* RC *சிங்காரகொண்டா* — D 3150

*ரோட்டரி நியூஸைப் பெற்றுக்கொண்ட உடனேயே இரண்டு மணி நேரம் செலவிட்டு படித்து முடித்து விடுவேன். குறைந்த பட்ஜெட்டில் எந்தவொரு சங்கத்தாலும் செயல்படுத்தக்கூடிய சேவை திட்டங்கள் பற்றிய யோசனைகளை இந்த இதழ் வழங்குகிறது. எனது சங்கம் சில அரசுப் பள்ளிகளைத் தத்தெடுத்து விளையாட்டு வசதிகளை நிறுவியுள்ளது. ரோட்டேரியர்கள் தங்களைத் தாங்களே புதுப்பித்துக் கொள்ள அற்புதமான தகவல்களை இந்த இதழ் தருகிறது.*

Dr B K *ஜா,* RC *ராஞ்சி மிட் டவுன்* — D 3250

மார்பகப் புற்றுநோயைக் கண்டறிதல் பற்றிய உங்கள் கட்டுரை (செப்டம்பர் இதழ்) சுவாரஸ்யமாக இருந்தது, மேலும் பெண்களை சோதனை செய்ய ஒரு புதிய சாதனம் உள்ளது என்பது எனக்கு புதியச் செய்தி. இந்தச் சாதனம், அதன் கிடைக்கும் தன்மை மற்றும் விலையைப் பற்றி மேலும் அறிய விரும்புகிறேன், ஏனெனில் எனது சங்கத்தாலும் இந்த கண்டறிதலை செயல்படுத்தமுடியும். டாக்டர் இந்திரா மற்றும் டாக்டர் கீதா மஞ்சுநாத் ஆகியோரின் தொடர்பு விவரங்களை எனக்கு வழங்கவும்.

Dr K S ராமலிங்கம்
RC தூத்துக்குடி — D 3212

அவர்களின் தொடர்பு விவரங்கள் எங்களிடம் இல்லை, ஆனால் நீங்கள் *www.niramai.com* என்ற இணையதளத்திற்குச் சென்று உதவி கேட்கலாம். அல்லது திட்டப் பொறுப்பில் இருக்கும் RC பெங்களூர் லேக்சைட்டின் உறுப்பினரான காஷிநாத் பிரபுவை அழைக்கலாம். (98456 83875). இந்தத் திட்டத்தை நீங்கள் செயல் படுத்தும் போது எங்களுக்குத் தெரியப் படுத்துங்கள், நாங்கள் அதை வெளியிட விரும்புகிறோம்.

— **ஆசிரியர்**

ஜெய்தீப் மாளவியாவின் (செப்டம்பர் இதழின்) கடிதத்தில் அவரது யூகம் சரியானது. ரோட்டரி நியூஸைப் பார்த்த கொச்சியின் பிரசிடென்சி ஹோட்டலின் உரிமையாளர், RC கொச்சியைச் சேர்ந்த ரோட்டேரியர் - பிலிப் மேத்யூ.

ஜோசப் மாலிக்கல்
RC கொச்சி — D 3201

### ஒரு மாற்றமளிக்கும் திட்டம்

செப்டம்பர் மாத இதழின் அட்டைப் படத்தில், RC பரூச் தொடங்கிய சகி திட்டத்தின் மூலம் வாழ்க்கை மாற்றம் அடையும் பாலியல் தொழிலாளர்களின் மறைக்கப்பட்ட முகங்கள் மனதைக் கவர்கின்றது.

DEI-ஐ உண்மையில் செயல் படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கும் ஆசிரியரின் குறிப்பு கண்களைத் திறப்பவை; சமீபத்தில் கொல்கத்தாவில் ஒரு மருத்துவரின் மரணம், மல்யுத்தப் பெண்கள் மற்றும் மலையாளத் திரையுலகில் உள்ள பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் போன்றவற்றை அவர் அடிக்கோடிட்டுக் காட்டி யுள்ளார். 2026–27-ம் ஆண்டிற்கான RIPN-ஆக தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கூ யுனுக்கு வாழ்த்துகள்.

RI தலைவர் ஸ்டெஃபனி அர்ச்சிக் தனது குடும்பத்துடன் சமீபத்தில் ஸ்லோவாக்கியாவில் அனுபவித்த சில பொன்னான தருணங்களை விவரிக்கிறார். RID அனிருதா ராய்சௌத்ரி, உலகத்தை சிறந்த இடமாக மாற்றுவதற்கு அனைத்து மக்களுக்கும் கல்வி கற்பிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். TRF தலைவர் மார்க் மலோனி ரோட்டரியின் வழங்கும் பாரம்பரியத்தில் கவனம் செலுத்துகிறார், அதே சமயம் TRF அறங்காவலர் பரத் பாண்டியா TRF-க்கு இரண்டாவது அதிக பங்களிப்பாளர்களாக ஆவதன்

மூலம் இந்திய ரோட்டேரியர்கள் எவ்வாறு இந்த பாரம்பரியத்தை நிரூபித்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

சகி திட்டம் தவிர, வயநாட்டில் பாதிக்கப் பட்டவர்களுக்கு ரோட்டரி உதவி, மார்பக புற்றுநோய், மொரீஷியஸில் கண் பராமரிப்பு மற்றும் RC பெங்களூரின் 90 ஆண்டுகள் பற்றிய பிற கட்டுரைகள் அனைத்தும் தகவல் தருவதாக இருந்தன. அனைத்து புகைப்படங்களும் வண்ணமயமாக இருந்தன.

பிலிப் முலப்போன்
M T, RC திருவனந்தபுரம்
சப்அர்பன் — D 3211

பாலியல் தொழிலாளிகளின் வாழ்வியலை மாற்றிய ரோட்டேரியர்கள் என்ற கட்டுரையை ஆர்வத்துடன் படித்தேன். RC பரூச்சின் ரிஸ்வானா ஜமீன்தாரால் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் ஒரு புதுமையான யோசனை. அவர் பாராட்டுக்குரியவர்.

வறுமையின் காரணமாக பாலியல் தொழிலில் தள்ளப்பட்ட பெண்களின் வாழ்க்கையைப் புதுப்பித்துள்ளனர். இப்போது அவர்கள் கல்வியைப் பெறலாம் மற்றும் திறன் மூலம் வேலை பெறலாம், இதற்காக CSR நிதியுதவி பெற சங்கம் கார்ப்பரேட்களை அணுகலாம். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செய்த RC பரூச் உறுப்பினர்கள் பெரும் பாராட்டுக்குரியவர்கள்.

S மோகன், RC மதுரை
வெஸ்ட் — D 3000

இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, வயநாட்டில் உள்ள சூரல்மலா மற்றும் முண்டக்கை கிராமங்களை விழுங்கியுள்ளது. இந்த இக்கட்டான நேரத்தில், RID 3204-ல் உள்ள ஐந்து ரோட்டரி சங்கங்கள் மற்றும் அண்டை சங்கங்களைச் சேர்ந்த ரோட்டேரியர்கள் அரசு இயந்திரத்துடன் கைகோர்த்து, அனைவராலும் பாராட்டத்தக்க சேவையை செய்துள்ளனர்.

VRT துரைராஜா, RC
திருச்சிராப்பள்ளி — D 3000

செப்டம்பர் இதழில் “சிறப்புக் குழந்தைகளை திருப்பதிக்கு அழைத்துச் சென்ற RID 3233” என்ற கட்டுரைப் படிக்க சுவாரஸ்யமாக இருந்தது. தினமும் பக்தர்கள் கூட்டம் அலைமோதுவதாலும், நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருப்பதாலும், சாதாரண மக்கள் கூட பாலாஜியை தரிசனம் செய்வது மிகவும் கடினம். எனவே, சென்னையில் இருந்து திருமலைக்கு அதிக அளவிலான சிறப்புக் குழந்தைகள் அழைத்துச் செல்லப்பட்டு, பத்திரமாக வீட்டிற்கு திரும்பியது மகிழ்ச்சியாக இருந்தது.

இது போன்ற ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அவர்களின் உன்னத சிந்தனைக்கு DG மகாவீர் போத்ரா மற்றும் அவரது மாவட்டத்திற்கு நன்றி.

N ஜெகதீசன்
RC ஏலூர் — D3020

**நடமாடும் இதய பராமரிப்பு, கிராம மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம்**

இதழின் புதிய தோற்றத்திற்காக ஆசிரியருக்கும் அவரது குழுவினருக்கும் வாழ்த்துக்கள்.

RID 3212, தமிழ்நாட்டின் கிராமப்புற வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, அந்த பகுதி கிராமங்களில் வழக்கமான பரிசோதனை முகாம்களை நடத்த ரோட்டரி ஹார்ட் கேர் பேருந்தை வழங்கியுள்ளது. இது குறிப்பிடத்தக்கது. ரோட்டரி கிளப் ஆஃப் லாஸ் வேகாஸ் வோன், RID 5300 உடன் இணைந்து, இந்த மனிதாபிமானப் பணியைச் செய்திருக்கும் அவர்கள் உயர்ந்த பாராட்டுக்கு தகுதியானவர்கள். இதன் மூலம், தமிழக முன்னாள் முதல்வர் K காமராஜரின் துணிச்சலான கனவை நனவாக்கும் பாதையில் செல்கின்றனர்.

ஜெய்ஸ்ரீயின் எத்தியோப்பியாவில் கழுதை நூலகங்கள் மற்றும் கிரண் ஜெஹ்ராவின் பிங்க் ஆட்டோக்கள் பற்றிய கட்டுரைகள் இரண்டும் நன்றாக இருந்தது. RID 3233-க்கு வாழ்த்துக்கள். மனநலம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிலையான வாழ்வாதாரத் திட்டம் என்ற ரஷீதாவின் கட்டுரை சிறப்பாக இருந்தது. RID 3132 மற்றும் RC மியாமி ஏர்போர்ட், RID 6990 ஆகியவற்றின் மனிதாபிமானப் பணிகள் மிகவும் பாராட்டப்பட வேண்டியவை.

டேனியல் சிட்டிலப்பில்லி
RC கலூர் — D 3201

**அட்டையில்:** சண்டிகர் பாரதிய வித்யா பவனில் PRIP ராஜேந்திர சாபூ
**புகைப்படங்கள்:** ரஷீதா பகத்

Have you read **Rotary News Plus?**

Every month we bring out the online publication **ROTARY NEWS PLUS** to feature your projects. This is sent by mid-month to every subscribing member whose email ID we have.

Read **Rotary News Plus** on our website *www.rotarynewsonline.org*

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் **Rotary News Plus** என்னும் இதழில் காணலாம்.

# RI தலைவரிடமிருந்து...





*பிட்ஸ்பர்க்கில் போலியோ நிதி திரட்டும் நிகழ்ச்சியில் RI தலைவர் ஸ்டெஃப்னி உர்சிக்.*

Portrait by Lucy Hewett; Stadium by John Hewko

## எல்லாரும் சேர்ந்து செய்யவேண்டிய பணி

24 அக்டோபர் அன்று, உலக இளம்பிள்ளைவாத நாள். நாம் உலகெங்கும் இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைப்பதற்குக் கைகோக்கிற இந்த நேரத்தில், நான் பெருமையுடன் ரோட்டரிக்குக் குரல் கொடுக்கிறேன்.

ஜூலை மாதத்தில், பிட்ஸ்பர்க் பைரேட்ஸ் MLB அணியின் இல்லமாகிய PNC பூங்காவில் நடைபெற்ற “போலியோவை ஒழிப்போம்” நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் பெருமை எனக்குக் கிடைத்தது. டெல்மன்ட்-சலெம் ரோட்டரி சங்கம் நடத்திய இந்த நிகழ்ச்சி போலியோப்ளஸ்ஸுக்கு $1.3 மில்லியன் திரட்டியது.

கோடைக்காலத்தின் பிற்பகுதியில், ஒரு இரு சக்கர வண்டிப் பயணத்தை ஆதரிப்பதற்காக நான் ரோட்டரி குடும்ப உறுப்பினர்களுடன் இணைந்தேன். ஃபேலிபெ மெஜா சாவெஜ் மற்றும் அவருடைய குழுவினர் மெக்சிகோ-வில் உள்ள சியுடாட் ஜுவாரெஜிலிருந்து எவான்ஸ்டனில் உள்ள ஒன் ரோட்டரி மையம்வரை பயணம் செய்து பணம் திரட்டினார்கள், விழிப்புணர்வைப் பரப்பினார்கள். இந்த 12 நாள் பயணத்தின்போது ஃபிலிபெ-யும் அவருடைய குழுவினரும் இளம்பிள்ளைவாதத்துக்கு எதிரான போருக்கென 100,000க்குமேல் திரட்டினார்கள். நாங்கள் எவான்ஸ்டனில் அவர்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைந்தோம்.

2024 பாரிஸ் ஒலிம்பிக்ஸின்போது, “இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைப்போம்” அணியினர் பன்னாட்டளவில் இதுபற்றிய விழிப்புணர்வைப் பரப்பியதைக் கண்டு நான் மகிழ்ந்தேன். தடகள வீரர்கள், பன்னாட்டுத் தலைவர்கள், இளம்பிள்ளைவாதத்தை முடித்து வைக்கும் ஆதரவாளர்கள் ஒன்றாகச் சேர்ந்து, இளம்பிள்ளைவாதத்தால் தன்னுடைய வாழ்க்கை முடங்கிவிடுமோ என்கிற அச்சம் எந்தக் குழந்தைக்கும் வராத ஓர் உலகத்துக்கெனக் குரல் கொடுத்தார்கள்.

ஆகஸ்ட் மாதத்தில், உலக சுகாதார அமைப்பில் இளம்பிள்ளைவாதத்தை முடித்து வைக்கும் பிரிவின் இயக்குநர் ஐடன் ஓலியாரி மரண மடைந்த செய்தியைக் கேட்டு ரோட்டரி உலகம் அதிர்ச்சியடைந்தது. நான் ஐடனை அறிவேன், அவருடன் நேரடியாகப் பணியாற்றியுள்ளேன். அவருடைய பணிகளுக்காகவும் அன்புக்காகவும் நாம் அவரை எப்போதும் நினைவுகூர்வோம்.

ஐடனுடைய நினைவைப் பெருமைப்படுத்துவதற்கு மிகச் சிறந்த வழி, அணியாகத் திரண்டு, இளம்பிள்ளைவாதத்தை இப்போதே முடித்துவைக்கிற நம் இலக்கை எட்டுவதுதான். உலகக் குழந்தைகளுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் நாம் ஒரு வாக்குறுதியை அளித்துள்ளோம். இந்த அச்சுறுத்தலை நிரந்தரமாக முடித்துவைக்கவேண்டிய பொறுப்பு நம்முடையது, நம் பன்னாட்டுக் கூட்டாளர்களுடன் சேர்ந்து நாம் இதைச் சாதிக்கவேண்டும்.

**ஸ்டெஃப்னி A அர்ச்சிக்**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்.



# கொடுப்பதில் மகிழ்ச்சி!

பரிசைப் பெறுவதில் மகிழ்ச்சியடையாத ஒரு மனிதன் இருக்க முடியாது. ஆனால், இந்த இதழுக்கான ஒரு கட்டுரைக்காக விவரங்களைச் சேகரித்தபோதும், பாம்பே வியூ ரோட்டரி சங்கத்தின் தலைவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோதும் அதற்கு நேர்மாறாக இருந்தது. அதுதான் “கொடுப்பத்தில் மகிழ்ச்சி”. நீங்கள் ஒரு பெரிய தொகைக்கான பணத்தைக் கொடுப்பதோ அல்லது பூமியில் விலை உயர்ந்ததை கொடுப்பதிலோ மகிழ்ச்சி இல்லை. ஆனால், முன்பின் தெரியாத ஒருவருக்கு நடுத்தரமாகப் பரிசு கொடுப்பது மகிழ்ச்சியானது.

மும்பைக்கு அருகில் உள்ள பால்கர் மாவட்டத்தில் சில ஆதிவாசி கிராமங்களில் ரோட்டரி சங்கம் செய்து வரும் பலவேறு திட்டங்கள் குறித்து நாங்கள் விவாதித்தோம். அவற்றில் ஒன்று ஆதிவாசி தம்பதி களுக்கான குழு திருமணம். ஒவ்வொரு தம்பதிக்கும் வீட்டிற்குத் தேவையான அத்தியாவசிய சாமான்கள் மற்றும் மளிகைப் பொருள்கள் திருமணப் பரிசாக வழங்கப்பட்டன. இதுபோன்ற நல்வாழ்வு திட்டங்களுக்கு பணம் திரட்டுவது எளிதாக இருந்ததா? அல்லது கஷ்டமாக இருந்ததா? என்று நான் கேள்வி எழுப்பியபோது, சங்கத்தின் தலைவர் சிரித்துக் கொண்டே “நிதி ஒரு பிரச்னையே அல்ல, இதுபோன்ற திட்டங்களுக்கு சங்க உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் அள்ளிக் கொடுக்கிறார்கள்” என்று சொன்னார்.

பின்னர் அவர், தனது சங்கத்தில் உறுப்பினராக இல்லாத ரோட்டேரியன்களிடமிருந்தும் எப்படி பணம் கொட்டுகிறது என்பதையும் உற்சாகத்துடன் விவரித்தார். திருமணப் பரிசு தொகுப்புக்கான நிதிக்காக மும்பை ராயல்ஸ் ரோட்டரி சங்க உறுப்பினராக இருக்கும் எனது மைத்துனரை அணுகினேன். உடனே அவர் இந்த தகவலை “வாட்ஸ் ஆப்” மூலம் தமது குழுவினருக்கு அனுப்பிவைத்தார். உடனடியாக அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. மக்கள் உண்மையில் போட்டி போட்டுக்கொண்டு பணம் கொடுக்க முன்வந்தனர். ஒரு சிலர் பாத்திரங்கள் வழங்க முன்வந்தனர். வேறு சிலர் மளிகைப் பொருள்கள் உள்ளிட்ட தொகுப்பை வழங்க முன்வந்தனர். ஒரு ரோட்டேரியன் பட்டியலில் முதலிடத்தில் இருந்தார். திருமணப் பரிசுப் பொருள்களை வாங்க கணவருடன் கிளம்பிவிட்டார். அவரிடம் தேவையான பொருள்களின் பட்டியல் இருந்தது. ஆனாலும் அவர் பட்டியலில் இல்லாத மேலும் சில பொருள்களை வாங்க விரும்பினார்.

“நான் எனது கணவருடன் இருக்கிறேன். அவரே எல்லாவற்றுக்கும் பணம் கொடுப்பார். எனவே நான் அதிகம் வாங்க விரும்புகிறேன்” என்றார்.

அந்தப் பெண்ணின் தாராளமனப்பான்மையை எண்ணிப் பாருங்கள்! அவள் தனக்காக ஷாப்பிங் செய்யவில்லை. இது அவருக்கு மகிழ்ச்சியான தருணம். மற்றவர்களுக்கு உதவ மனமகிழ்ச்சியுடன் செல்கிறார். வாழ்க்கையில் மகிழ்ச்சியை உண்மையிலேயே அனுபவிக்கிறார். அதுவும் முன்பின் தெரியாதவர்களின் முகத்தில் மகிழ்ச்சியை வரவழைப்பதற்காக!

ஆனாலும், மற்றவர்கள் முகத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என ஒருசில நல்ல எண்ணம் கொண்டவர்கள் நினைத்தாலும் வேறு சிலர் எந்தவித தயக்கமும் இல்லாமல் மக்களிடம் பிடுங்கித் தின்பதிலேயே குறியாக இருக்கிறார்கள். ஆப்கானிஸ்தானில் உள்ள தாய்மார்கள், தங்கள் குழந்தைகள் போலியோ போன்ற தீராத நோய்களிலிருந்து விடுபட்டு ஆரோக்கியமான இளைஞர்களாக வளர்வார்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கும் நேரத்தில், ஆப்கானிஸ்தானில் ஆட்சி நடத்திவரும் தலிபான்கள் வீடு வீடாகச் சென்று போலியோ சொட்டு மருந்து போடுவதற்கு தடை விதித்துள்ளதாக ஐ.நா. வெளியிட்டுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன. மசூதிகள் உள்ளிட்ட ஒரு சில இடங்களிலாவது போலியோ சொட்டு மருந்து கொடுக்க அனுமதி பெறுவது குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருவதாக சமீபத்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு பலன் கிடைக்குமா? அல்லது தோல்வியில் முடியுமா? என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ஆப்கானிஸ்தானில் போலியோ தாக்குதலுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக உலக சுகாதார நிறுவனம் (WHO) தெரிவிக்கிறது. 2023-ல் 6 பேர் மட்டுமே போலியோவால் பாதிப்புக்கு உள்ளான நிலையில் இப்போது அந்த எண்ணிக்கை 18 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. போலியோ இல்லாத உலகத்தை உருவாக்க வேண்டும் என்ற கனவை நனவாக்க நாம் இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும்.




ரஷீதா பகத்

# Membership Summary

Source: RI South Asia Office

As on September 1, 2024

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 139 | 5,886 | 5.64 | 54 | 69 | 32 | 254 |
| 2982 | 91 | 3,928 | 5.63 | 27 | 361 | 90 | 188 |
| 3000 | 148 | 6,249 | 11.97 | 60 | 740 | 231 | 217 |
| 3011 | 139 | 5,365 | 31.00 | 63 | 1,324 | 209 | 41 |
| 3012 | 163 | 4,038 | 24.17 | 52 | 671 | 103 | 61 |
| 3020 | 84 | 4,961 | 8.12 | 32 | 640 | 114 | 351 |
| 3030 | 100 | 5,592 | 16.18 | 54 | 819 | 488 | 387 |
| 3040 | 98 | 2,344 | 14.59 | 32 | 555 | 55 | 214 |
| 3053 | 75 | 3,124 | 16.93 | 23 | 331 | 39 | 131 |
| 3055 | 83 | 3,395 | 12.58 | 44 | 653 | 55 | 379 |
| 3056 | 87 | 3,753 | 25.15 | 18 | 140 | 98 | 201 |
| 3060 | 102 | 5,046 | 15.87 | 49 | 1,856 | 73 | 148 |
| 3070 | 116 | 3,069 | 15.25 | 32 | 179 | 59 | 63 |
| 3080 | 109 | 4,434 | 13.35 | 54 | 1,309 | 173 | 127 |
| 3090 | 134 | 2,695 | 7.16 | 19 | 345 | 355 | 173 |
| 3100 | 117 | 2,264 | 10.87 | 13 | 57 | 35 | 151 |
| 3110 | 137 | 3,704 | 11.77 | 15 | 88 | 69 | 112 |
| 3120 | 90 | 3,750 | 15.81 | 37 | 450 | 31 | 57 |
| 3131 | 141 | 5,636 | 34.99 | 106 | 1,932 | 283 | 185 |
| 3132 | 97 | 3,793 | 14.58 | 26 | 299 | 120 | 217 |
| 3141 | 119 | 6,298 | 27.95 | 106 | 1,777 | 185 | 244 |
| 3142 | 115 | 4,066 | 23.00 | 52 | 1,467 | 123 | 99 |
| 3150 | 108 | 4,031 | 12.60 | 79 | 1,178 | 115 | 130 |
| 3160 | 79 | 2,545 | 9.86 | 24 | 105 | 95 | 82 |
| 3170 | 145 | 6,673 | 15.24 | 86 | 1,016 | 176 | 182 |
| 3181 | 88 | 3,707 | 10.90 | 37 | 366 | 92 | 122 |
| 3182 | 85 | 3,664 | 10.64 | 45 | 211 | 104 | 104 |
| 3191 | 95 | 3,434 | 19.34 | 64 | 1,521 | 138 | 36 |
| 3192 | 89 | 3,605 | 21.44 | 49 | 1,188 | 148 | 40 |
| 3201 | 170 | 6,598 | 9.99 | 96 | 1,454 | 105 | 95 |
| 3203 | 97 | 5,051 | 7.27 | 32 | 495 | 133 | 39 |
| 3204 | 81 | 2,633 | 8.17 | 18 | 100 | 14 | 14 |
| 3211 | 161 | 5,199 | 8.83 | 7 | 52 | 23 | 135 |
| 3212 | 122 | 4,641 | 10.71 | 79 | 405 | 206 | 153 |
| 3231 | 94 | 3,672 | 7.38 | 26 | 276 | 39 | 417 |
| 3233 | 87 | 2,999 | 18.04 | 41 | 1,072 | 47 | 63 |
| 3234 | 95 | 3,589 | 23.93 | 54 | 1,353 | 85 | 41 |
| 3240 | 99 | 3,557 | 16.76 | 35 | 557 | 47 | 244 |
| 3250 | 112 | 4,404 | 23.25 | 29 | 386 | 58 | 192 |
| 3261 | 109 | 3,506 | 24.90 | 17 | 90 | 27 | 45 |
| 3262 | 115 | 3,858 | 15.73 | 80 | 733 | 645 | 288 |
| 3291 | 144 | 3,805 | 27.33 | NA | NA | 84 | 763 |
| **India Total** | **4,659** | **174,561** | | **1,866** | **28,620** | **5,401** | **7,185** |
| 3220 | 70 | 1,948 | 16.12 | 77 | 3,034 | 136 | 77 |
| 3271 | 111 | 1,471 | 21.07 | 102 | 419 | 275 | 28 |
| 0063 (3272) | 85 | 1,170 | 20.60 | 47 | 295 | 23 | 49 |
| 0064 (3281) | 283 | 5,889 | 18.07 | 190 | 1,001 | 118 | 211 |
| 0065 (3282) | 149 | 2,988 | 9.24 | 166 | 1,115 | 24 | 47 |
| 3292 | 159 | 5,477 | 19.39 | 154 | 4,816 | 118 | 139 |
| **S Asia Total** | **5,516** | **193,504** | **16.00** | **2,602** | **39,300** | **6,095** | **7,736** |



# RI இயக்குனர் செய்தி

# வாழ்க்கையை மாற்றும் சக்தி

இந்த ரோட்டரி ஆண்டில் நாம் முன்னேறும்போது, நமது சமூகங்களில் நாம் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து நான் பெருமையுடனும் நம்பிக்கை யுடனும் நிரம்பியிருக்கிறேன். நீங்கள் ஒவ்வொரு வரும் ரோட்டரி பேணும் சேவை உணர்வை உள்ளடக்கி இருக்கிறீர்கள், நாம் ஒன்றாக இணைந்து பலர் வாழ்வை மேம்படுத்தி, நிலையான மாற்றத்தை உருவாக்குகிறோம். நம் கூட்டு முயற்சிகள் நம் கனவை நிஜமாக மாற்றுகின்றன. மேலும் ஆண்டின் அடுத்த கட்டத்திற்கு நாம் செல்ல, நம் கவனம் மிகவும் முக்கியமான பகுதிகளில் ஒன்றிற்கு மாறுகிறது: பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாடு.

பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாடு என்பது மக்கள் தங்களை கண்ணியத்துடன் நிலைநிறுத்து வதற்கான வாய்ப்புகளை உருவாக்கு வதாகும். பல நூற்றாண்டுகளாக வறுமை நம் நாட்டைப் பீடித்துள்ள நிலையில், நமது நீடித்த தேசிய உணர்வு மெதுவாக ஆனால் நிச்சயமாக நம்மை நமது கடந்தகால மகிமைக்கு அழைத்துச் செல்கிறது. தெருக்களில் காய்கறிகள், பழங்கள், தின்பண்டங்கள் விற்பது, மொபைல் பழுதுபார்ப்பது, துணிகளைத் தைப்பது, கையால் செய்யப்பட்ட பொருட்களை உருவாக்குவது போன்ற வியாபாரங்களால் நிரம்பி வழிகிறது. குறைந்த வளங்கள் இருந்தபோதிலும், வாழ்வாதாரத்தை உருவாக்க பாடுபடுபவர்களின் நெகிழ்ச்சித் தன்மைக்கு இவை ஒவ்வொன்றும் சான்று.

பல நூற்றாண்டுகளாக, இந்தியா ஞானம், அறிவு மற்றும் தத்துவங்களை வழங்கி உலகை வடிவமைத்துள்ளது. இன்று, நமது மக்கள் உலகளாவிய நிறுவனங்களை நிர்வகித்து, உலகெங்கிலும் உள்ள பொருளாதாரங்களுக்கு பங்களிக் கின்றனர். தொழில்முனைவோர் மனப்பான்மையின் மறுமலர்ச்சியைக் கண்டாலும், இன்னும் நம் நாட்டில் பலர் வறுமையிலிருந்து மீள போராடு கிறார்கள். இதை மாற்றும் சக்தி ரோட்டேரியர்களாகிய நம்மிடம் உள்ளது. நாம் உருவாக்கும் ஒவ்வொரு வாய்ப்பும் ஒரு தனிநபரை வறுமையிலிருந்து மீட்டெடுப்பது மட்டுமல்லாமல், அவர்களின் முழு குடும்பத்தையும் மாற்றுகிறது.

மாவட்டங்கள் மற்றும் சங்கங் களுக்குச் சென்ற போது ரோட்டேரி யர்களின் திறமை, இரக்கம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை நான் நேரில் கண்டிருக்கிறேன். இந்த வகையான உலகளாவிய தாக்கத்தை வேறு எந்த நிறுவனத்தாலும் கோர முடியாது.

ப்ராஜெக்ட் பாசிட்டிவ் ஹெல்த் என்பது நடைபயிற்சி, உடற்பயிற்சி மற்றும் சரியான உணவு உண்பதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு தேசிய முயற்சியாகும். இந்த ஆரோக்கியமான பழக்கவழக்கங்களைத் தழுவி, உங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் மத்தியில் அவற்றை ஊக்குவிக்க உங்கள் அனைவரையும் நான் ஊக்குவிக்கிறேன். நமக்கு மற்றொரு முக்கியமான கவனம் DEI-பன்முகத் தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம். நாம் பன்முகத்தன்மை கொண்ட தேசமாக இருந்தாலும், சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தில் இன்னும் கவனம் தேவை. இந்த மதிப்புகளை நம் சங்கங்கள் மற்றும் சமூகங்களில் உட்பொதிக்க வேண்டுமென்றே நடவடிக்கை எடுக்கும் நேரம் இது.

இறுதியாக, உங்கள் ஆதரவுக்கு எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ரோட்டரியின் தாக்கம் உலகம் முழுவதும் உணரப்படுகிறது, இதை உங்கள் அர்ப்பணிப்புதான் சாத்தியமாக்குகிறது. இந்த ஆண்டை குறிப்பிடத்தக்க சாதனைகள் மற்றும் நீடித்த மாற்றங்களில் ஒன்றாக மாற்றுவோம், மேலும் ரோட்டரியின் மாயாஜாலத்தை தொடர்ந்து உருவாக்குவோம்.■

**ராஜு சுப்ரமணியன்**
RI இயக்குனர் 2023–25

# உலகளாவிய அமைதிக் கூட்டம்

கால்கரியில் நடைபெறும் ரோட்டரி சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்வது அமைதியை ஆதரிப்பதற்கான ஒரு சிறந்த வழியாகும். நீங்கள் ஹவுஸ் ஆஃப் ப்ரேண்ட்ஷிப்பில் நடந்து, சக உறுப்பினர்களைச் சந்தித்து, மற்ற சங்கங்களைப் கவலைகளைப் பற்றி அறிந்துகொள்ளும்போது, சர்வதேசப் புரிதலை அதிகரிக்கிறீர்கள். பீஸ் பார்க் கண்காட்சியில் உள்ள அமைதி மரத்தில் தொங்கவிடப்பட்ட காகித கிரேன்களில் தங்கள் நம்பிக்கையை எழுதி உறுப்பினர்கள் அமைதியைப் பரப்புவர். ரோட்டரி அதன் ஆரம்ப நாட்களிலிருந்தே அமைதியை ஊக்குவித்துள்ளது: முதலாம் உலகப் போருக்கு ஒரு மாதத்திற்கு முன்பு 1914-ல் ஹூஸ்டனில் நடந்த ஐந்தாவது மாநாட்டில், உறுப்பினர்கள் சர்வதேச அமைதி இயக்கத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.



மே மாதம் சிங்கப்பூரில், ரோட்டரி அமைதி மையத் திட்டத்தை அறிவித்து 25 ஆண்டுகள் நிறைவுற்றதை கொண்டாடியது.

2009-ல் ஐக்கிய நாடுகளின் அமைதித் தூதரும் பாதுகாவலருமான ஜேன் குடால் உள்ளிட்ட முக்கிய பேச்சாளர்களை இதுபோன்ற மாநாடுகள் செயல்பட தூண்டு கின்றன. நிறவெறியை எதிர்த்த தற்காக அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற பேராயர் டெஸ்மண்ட் டுட்டு, அந்த ஆண்டு மாநாட்டிற்கு முந்தைய அமைதி கருத்தரங்கில் பேசினார்.

ரோட்டரி அதன் மாநாட்டை அமைதியைக் கட்டியெழுப்பும் அடையாளமாகக் கொண்டிருப்பதைப் போல, கால்கரியில் சிவப்பு உலோகத்தால் ஆன அமைதிப் பாலம் உள்ளது, அங்கு ஆயிரக்கணக்கான கனடியர்கள் மற்றும் பார்வையாளர்கள் ஒவ்வொரு நாளும் செல்ஃபி எடுப்பதற்காக நடந்தோ அல்லது சைக்கிளிலோ வருகிறார்கள்.

மாநாட்டின் உள்ளே, அமைதிக் கான ரோட்டரி நடவடிக்கை குழுவின் அமைதி பூங்கா சிந்தனைக்காக ஒரு சோலையை வழங்கியது. மேலும், சிங்கப்பூரில் அமைதிக் கம்பங்கள் மற்றும் காகிதப் பூக்களின் தோட்டத்தில் இது ஒரு சிறந்த முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. மிகவும் அமைதியான உலகத்திற்கு பங்களிக்க கால்கரி 21–25 ஜூனை தேர்வு செய்யவும்.

**மேலும் தெரிந்துகொள்ள பதிவு செய்ய:**
convention.rotary.org

**உலக ரோட்டரி எண்ணிக்கை**

| | | | |
|---|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | 36,635 | ரோட்டரியினர் | 1,163,664 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | 8,938 | ரோட்டராக்டர்கள் | 118,727 |
| இன்டராக்ட் சங்கங்கள் | 15,195 | இன்டராக்டர்கள் | 349,577 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | 13,588 | | |

*As on September 17, 2024*

**ஆளுநர் குழு**

RID 2981 பாஸ்கரன் S
RID 2982 சிவகுமார் V
RID 3000 ராஜா கோவிந்தசாமி R
RID 3011 மகேஷ் திரிகா
RID 3012 பிரசாந்த் ராஜ் ஷர்மா
RID 3020 வெங்கடேஸ்வர ராவ் M
RID 3030 ராஜீந்தர் சிங் குரானா
RID 3040 அனீஷ் மலிக்
RID 3053 ராகுல் ஸ்ரீவஸ்தவா
RID 3055 மோகன் பராஷர்
RID 3056 ராக்கி குப்தா
RID 3060 துஷார் ஷா
RID 3070 பர்மிந்தர் சிங் குரோவர்
RID 3080 ராஜ்பால் சிங்
RID 3090 சந்தீப் சௌஹான்
RID 3100 தீபா கண்ணா
RID 3110 நீரவ் நிமேஷ் அகர்வால்
RID 3120 பரிதோஷ் பஜாஜ்
RID 3131 ஷீத்தல் ஷரத் ஷா
RID 3132 சுரேஷ் ஹேரலால் சாபூ
RID 3141 சேட்டன் தேசாய்
RID 3142 தினேஷ் மேத்தா
RID 3150 சரத் சௌத்ரி கட்ராகட்டா
RID 3160 சாது கோபால கிருஷ்ணா
RID 3170 சரத் பாய்
RID 3181 விக்ரம்தத்தா
RID 3182 தேவ் ஆனந்த்
RID 3191 சதீஷ் மாதவன்
RID 3192 மகாதேவ பிரசாத் N S
RID 3201 சுந்தரவடிவேலு N
RID 3203 சுரேஷ் பாபு S
RID 3204 சந்தோஷ் ஸ்ரீதர்
RID 3211 சுதி ஜப்பார்
RID 3212 மீரான் கான் சலீம்
RID 3231 ராஜன்பாபு M
RID 3233 மகாவீர் போத்ரா
RID 3234 சரவணன் N S
RID 3240 சுக்மிந்தர் சிங்
RID 3250 பிபின் சாச்சன்
RID 3261 அகில் மிஸ்ரா
RID 3262 யக்ஞன்சிஸ் மோஹாபத்ரா
RID 3291 கிருஷ்ணேந்து குப்தா

அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| T N ராஜு சுப்ரமணியன் RI இயக்குனர் மற்றும் RNT தலைவர் | RID 3141 |
| அனிருதா ராய்சௌத்ரி RI இயக்குனர் | RID 3291 |
| Dr பரத் பாண்ட்யா TRF அறங்காவலர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**RI Directors-elect**

| | |
|---|---|
| முருகானந்தம் M | RID 3000 |
| நாகேஷ் K P | RID 3191 |

**செயற்குழு உறுப்பினர்கள்** (2024–25)

| | |
|---|---|
| மகாதேவ பிரசாத் N S தலைவர், ஆளுநர் குழு | RID 3192 |
| அகில் மிஸ்ரா செயலாளர், ஆளுநர் குழு | RID 3261 |
| ராஜா கோவிந்தசாமி R பொருளாளர், ஆளுநர் குழு | RID 3000 |
| ராக்கி குப்தா ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3056 |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.



# போலியோ ஒழிப்பு நாயகரை நினைவில் கொள்வோம்



*மார்க் மலோனி (இடது) ஜான் செவரின் மனைவி ஜெரேனுக்கு (நடுவில்) போலியோ இல்லாத உலகத்திற்கான சர்வதேச சேவை விருது வழங்கினார். வலதுபுறத்தில் ஐககஇ தலைவர் மைக்கேல் மெக்கவர்ன் உள்ளார்.*

உலக போலியோ தினம், அக்டோபர் 24 அன்று, முன்னேற்றத்தைக் கொண்டாடுவதற்கும், நோயை நிரந்தரமாக ஒழிக்கும் பணிக்காக நம்மையே அர்ப்பணிப் பதற்கான ஒரு நேரமாகும். இந்த உன்னதமான நோக்கத்திற்காக போராடிய எண்ணற்ற ரோட்டேரியர்கள் மற்றும் ரோட்டராக்டர்களை போற்றுவோம். அப்படிப் பட்ட ஒரு நாயகர் தான் ஜான் செவர்.

கடந்த ஏப்ரல் மாதம், தனது 92 வயதில் இறந்த செவர், மேரிலாந்தில் உள்ள RC பொட்டோமாக்கின் உறுப்பினராக இருந்தார். U.S. நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஹெல்த்தில் தொற்று நோய் நிபுணராக இருந்த செவர், 1979-ம் ஆண்டில் பிலிப்பைன்ஸில் தேசிய தடுப்பூசி பிரச்சாரமாக தொடங்கியதை விரிவுபடுத்தி, போலியோ ஒழிப்பை உலகளாவிய இலக்காக மாற்றுமாறு பரிந்துரைத்தார்.

செவரின் பல தசாப்தகால தலைமைத்துவம், நிபுணத்துவம் மற்றும் பரிந்துரைத்தல் இல்லாமல் இன்று நாம் எங்கு இருப்போம் என்பதை கற்பனை செய்வது கடினம். ஆகஸ்ட் மாதம், போலியோ இல்லாத உலகத்திற்கான சர்வதேச சேவை விருதையும், செவரின் பெயரில் ஒரு படிக அங்கீகார பதாகையையும் அவரது குடும்பத்திற்கு வழங்கியதில் நான் பெருமைப்பட்டேன்.

அவர் தொடங்குவதற்கு உதவிய போலியோபிளஸ், ரோட்டரியில் ஒரு செயல் திட்டத்தை செயல்படுத்து வதற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அவராலும் மற்றும் எண்ணற்றவர்களின் தன்னார்வத் தன்மை மற்றும் தாராள மனப்பான்மையாலும் போலியோ வழக்குகள் 1988 முதல் 99 சதவீதத்திற்கும் மேலாக குறைந்துள்ளன.

நம் இலக்குக்கான பாதையை கணிக்க முடியாது மற்றும் எதிர்பார்த்ததை விட அதிக நேரம் ஆகலாம். சில நேரங்களில் பின்னடைவுகளும் ஏற்படலாம், இந்த ஆண்டு பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் வழக்குகள் அதிகரித்ததை போல.

ஆனால் நாம் மீண்டும் எழுவோம். இந்த ஆண்டு, மலாவி மற்றும் மொசாம்பிக் ஆகிய நாடுகளில் 2021-ல் பாகிஸ்தானில் இருந்து பரவிய போலியோவைரஸ் பரவலை முடிவுக்குக் கொண்டுவந்தோம், மேலும் மாறுபட்ட போலியோவைரஸ் வழக்குகளைக் குறைத்தோம்.

வலுவான சுகாதார அமைப்புகள் மற்றும் சமூகங்களைக் கொண்ட போலியோ இல்லாத உலகத்தை வழங்குவது எதிர்கால சந்ததியினருக்கு ஒரு சிறந்த முதலீடும் ஆகும். உலகிற்கு ரோட்டரி வழங்கும் மிகப்பெரிய பரிசாக இது இருக்கும்.

*rotary.org/donate*-ல் எண்ட் போலியோ நவ்விற்கு நன்கொடை அளிக்கவும். உங்கள் சங்கம் அல்லது மாவட்டத்தில் போலியோபிளஸ் சொசைட்டியில் சேரவும் அல்லது தொடங்கவும். வரலாற்றில் இரண்டாவது முறையாக ஒரு மனித நோயை எப்படி ஒழிப்போம் என்பது குறித்து உங்கள் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.

**மார்க் மலோனி**
TRF அறங்காவலர் தலைவர்



முன்னாள் RI தலைவர் ராஜேந்திர சாபூ அவரது பாரதிய வித்யா பவன் அலுவலகத்தில்.

# ரோட்டரி இதயங்களின் ராஜா!

*ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் ராஜா சாபூ 90 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நிலையில், மெகா ரோட்டரி திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதிலும், ரோட்டேரியன்களை வழிநடத்துவதிலும், தலைவர்களை உருவாக்குவதிலும் அவரது பங்களிப்பை ரோட்டரி நியூஸ் உற்றுநோக்குகிறது.*

**ரஷீதா பகத்**



ரோட்டரியுடன் தொடர்புடைய பயணமாக சண்டீகருக்கு வரும் யாராக இருந்தாலும் RI தலைவர், RI இயக்குநர், மாவட்ட ஆளுநர் அல்லது சங்கத்தின் தலைவர் என்ற வகையில் மட்டுமல்ல அவரது இளமைக்காலத்தை பற்றியும் கேள்விப்பட்டிருக்க வேண்டும்.

மேலும் சண்டீகரில் ஏதாவது ஒரு திட்டம் அல்லது நிகழ்வுக்காக அங்கு நீங்கள் இருந்தால், சமீபத்தில் 90 வயதைக் கடந்த அவரை நிச்சயமாக சந்தித்திருக்க முடியும். ரோட்டரியுடன் தொடர்புடைய எந்த ஒரு விஷயத்தையும் நேசிக்கும் அவரது அன்பு, கனிவு, ஆர்வம் இவற்றுக்கு எதிலும் குறைவில்லை. சண்டீகர், மொஹாலி மற்றும் பஞ்ச்குலா என்னும் மூன்று நகரங்களிலும் ரோட்டரி பல்வேறு வழிகளில் மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது. அவை தொடர்கிறது. அவரது சங்கத்தின் உறுப்பினர்கள் அவர் மீது வைத்திருக்கும் பாசம், மரியாதையையும் அவரது ஆதரவையும் ஒப்புதலையும் எதிர்நோக்கி காத்திருப்பதையும் நேரில் பார்க்கலாம்.

கடந்த பத்து ஆண்டுகளில் மேற்குறிப்பிட்ட மூன்று நகரங்களிலும் கல்வி மற்றும் சுகாதாரம் தொடர்பான சமூக சேவைத் திட்டங்களை கருத்தாக்கம் செய்து, ஆதரித்து முன்னின்று நடத்துவதன் மூலம் ராஜேந்திர சாபூ, சண்டீகரில் உள்ள ரோட்டேரியன் களை குறிப்பாக அவரது சங்கத்தை எப்படி மாயாஜாலமாக செயல்படுத்தி வந்தார் என்பது பற்றி நான் நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். மேலும் 90 வயதான நிலையிலும் அவர் ஊரில் இருந்தால் ரோட்டரி சங்கத்தின் ஒரு கூட்டத்தையும் தவறவிடமாட்டார். மேலும் அறிய நான், ஆகஸ்ட் மாதத்தில் வெப்பமான ஒருநாளில் அங்கு இறங்கினேன். அவரிடம் கேட்க வேண்டிய பல கேள்விகள் என் மூளையை துளைத்துக் கொண்டிருந்தன. நீண்டகாலம் தொழிலில் ஈடுபட்ட பிறகு அவரது மாயாஜாலத்தையும், அவரது முத்திரை பதித்த திட்டங்கள் பற்றியும், அவரது சங்கத்தின் உறுப்பினர்களை சந்தித்ததையும் ஒரு பத்திரிகையாளரின் நிலையான தோழனாக சாபூ எவ்வாறு இருந்தார் என்பதையும் நான் சொல்லித்தான் ஆக வேண்டும்.

பரபரப்பான அந்த இரண்டு நாட்களில், ரோட்டரி மாவட்டம் 3080-க்கு உட்பட்ட சண்டீகர் ரோட்டரி சமீபத்தில் நிறைவேற்றிய சில திட்டங்களையும் நாங்கள் பார்வையிட்டோம். முன்னாள் தலைவரான சாபூ, இந்த வயதிலும் துடிதுடிப்பாகச் செயல்படுகிறார். ஒரு சிறிய குழுவினருடன் சாபூ வேகமான நடைப்போட்டு என்னை அழைத்துச் சென்றபோது எனக்கு மூச்சு வாங்கியது. அவர் தலைமையின் கீழ் அமைந்த பாரதீய வித்யாபவனின் மூன்றாவது பள்ளியின் தாழ்வாரங்களில் நடந்து சென்ற

போதும் சரி மொஹாலியில் உள்ள, டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் மருத்துவ அறிவியல் கழகத்தில் கரடுமுரடான பாதைகளில் நடந்து சென்றபோதும் சரி அவர் எந்தவிதமான சோர்வும் இல்லாமல் வேகமாக நடந்து சென்றார். நாங்களும் பின்தொடர்ந்து சென்றோம். இந்த மருத்துவ மனைக்கு சாபூ அளித்த ஊக்கம் மற்றும் ஆதரவுக்கு நன்றி. சண்டீகர் ரோட்டரியின் தேர்ந்தெடுக் கப்பட்ட தலைவரான அபா சர்மா, செயலாளராக இருந்தபோது கண்ட கனவு, கடந்த ஆண்டு சங்கத்தின் IPP-ஆன அனில் சத்தாவால் நிறைவேறியது.

இதன் விளைவாக அமைந்ததுதான் நவீன வசதிகள் கொண்ட தாய்ப்பால் வங்கி. இதற்கு மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் பவனீத் பாரதியின் ஆர்வமும், உறுதிப்பாடும் முக்கிய காரணமாகும். அபா சர்மா கொடுத்த ஊக்கத்தால் பாரதியும் ரோட்டரியில் இணைந்தார். தாய்ப்பால் வங்கி அமைய இருவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டனர். (இந்த தாய்ப்பால் வங்கி திட்டம் தொடர்பான செய்தியை அடுத்து வரும் இதழ்களில் காணலாம்.) ஆனால், PRIP சாபூ மற்றும் PDG மதுகர் மல்ஹோத்ரா ஆகியோரின் உதவி இல்லாமல் இது சாத்தியமில்லை என்கிறார் அபா சர்மா.

மாடிப்படிகளில் ஏறி, இறங்கும் போது அவருக்கு ஆதரவுக்கரம் நீட்ட பலர் முன்வந்தும் அவற்றை மறுத்து ஒரு இளைஞனுக்கான உற்சாகம் மற்றும் ஆற்றலுடன் அவர் செயல்பட்டார். 1978 முதல் தொடர்புடைய மற்றும் 1996-ம் ஆண்டு முதல் அதன் தலைவராக இருந்த சாபூ, பாரதீய வித்யா பவனை எனக்கு சுற்றிக்காட்டினார். பின்னர் நாங்கள் மூன்றாவது பாரதீய வித்யாபவன் பள்ளி அமைந்திருந்த புதிய சண்டீகருக்குச் சென்றோம். இந்த பள்ளி அமைய காரணமாக இருந்தவர்கள் ராஜேந்திர சாபூவும் அப்போது அமைப்புச் செயலாளராக இருந்த PDG மல்ஹோத்ராவும்தான். அவர்களின் கடுமையான ஊழப்பின் பலன்தான் 5 ஏக்கர் பரப்பளவில் அமைந்த பாரதீய வித்யாபவனின் மூன்றாவது பள்ளியாகும். பல்வேறு நவீன வசதிகள் கொண்ட







**மேலே:** *சாபூ தனது* My life journey, a personal memoir *புத்தகத்தில் கையெழுத்திடுகிறார்.*

**கீழே:** *கொல்கத்தாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அன்னை தெரசாவை சாபூ வரவேற்கிறார்.* PRIP *ராபர்ட் பார்த் வலதுபுறம் உள்ளார்.*








**மேலே:** *PRIP சாபூ PDG மதுகர் மல்ஹோத்ராவுடன்;* **(வலமிருந்து மூன்றாவது)** *தொழுநோயாளியர் காலனியில்.* **இடது:** *தாய்ப்பால் வங்கியில் IPP அனில் சத்தா* **(இடது),** *பாவ்னீத் பாரதி (வலமிருந்து மூன்றாவது) மற்றும் PDG மல்ஹோத்ரா வுடன்.* **கீழே:** *பவன் வித்தியாலயா பள்ளியில் மாணவர்களுடன் PRIP சாபூ.*





# உஷா சாபூ விதைத்த பல விதைகள்!



PRIP சாபூ மற்றும் உஷாவின் திருமண புகைப்படம்.

சண்டீகரில் உள்ள அழகான வீட்டில், உஷாவிடம் சுதந்திரமாக உரையாடிக் கொண்டிருந்த போது RI முன்னாள் தலைவர் K R ரவீந்திரன் கூறியது போல், இந்த தம்பதி தேசியத் தலைவர்கள் மற்றும் சர்வதேச அளவில் ரோட்டரியின் மூத்த தலைவர்கள் மட்டுமல்ல, நூற்றுக்கணக்கான சாதாரண ரோட்டேரியன்களிடமும் அன்புடனும், கருணையுடனும் நல்ல விருந்தோம்பலுடன் மகிழ்வித்துள்ளனர். ராஜேந்திர சாபூவின் ரோட்டரி பயணத்தில் அவர் ஆற்றிய பங்குபற்றி அவரிடம் கேட்டபோது, "ஒரு சிறிய விதையில் அல்லது யோசனையில் தான் அன்பான விஷயங்கள் தொடங்குகின்றன" என்று புன்னகை மலர கூறினார். ஒருநாள் இருள் சூழ்ந்த மாலைப் பொழுதில் காரில் இருந்து இறங்கிய போது நடந்த கதையை தொடர்புபடுத்தி அவர் விவரித்தார். "கிழிந்த ஆடைகளுடன், புண்களிலிருந்து இரத்தம் வழிந்த நிலையில் தொழுநோயாளி ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவருடைய கண்களை மட்டுமே நான் பார்க்க நேர்ந்தது". நான் அதிர்ந்து போனேன். செஞ்சிலுவை சங்கம், இன்னர்வீல் சங்கம் மற்றும் என்னுடன் தொடர்புடையவர்கள் மற்றும் சண்டீகரில் உள்ள உயர் அதிகாரிகளிடம் இதுபற்றி விவாதித்தேன்.

பின்னர் அந்த தொழுநோயாளியைப் போல் 80 முதல் 90 பேர் அருகில் உள்ள நதிக்கரையில் பாழடைந்த குடிசைகளில் வாழ்ந்து வருவதும், பிழைப்புக்காக பிச்சை எடுத்துவருவதும் தெரியவந்தது. அவர்களில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளும் அடங்குவர். அவர்களின் நிலைகண்டு அதிர்ச்சி அடைந்த நான், ராஜாவிடம், "இவர்களுக்கு ரோட்டரி ஏதாவது செய்ய வேண்டும்" என்று கூறினேன்.

1971-ம் ஆண்டில் விதைக்கப்பட்ட இந்த யோசனையின் விளைவாக அவர்களுக்கு என தொழுநோயாளிகள் காலனி அமைக்கப்பட்டது. இப்போது அதில் 172 பேர் வசித்து வருகின்றனர். தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர்கள் நீண்டகால சிகிச்சையில் குணமடைந்துள்ளனர். இவர்களின் வாழ்வாதாரத்திற்காக சண்டீகர் ரோட்டரி சங்கம் மூலம் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இங்குள்ளவர்கள் காலனிக்குள்ளேயே ஒரு கோயிலையும் உருவாக்கியுள்ளனர். இப்போது அவர்கள் தரமான வீடுகளில், முழு ஆரோக்கியத்துடன், குழந்தைகளுடன் வசித்து வருவதைக் காணும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது.

இதேபோல எண்ணற்ற ரோட்டரி திட்டங்கள் சின்ன சின்ன யோசனைகளிலிருந்து பிறந்தவைதான் என்று உஷா குறிப்பிட்டார். நீண்ட காலத்துக்கு முன்பு நாங்கள் சண்டீகரில் உள்ள PGIMER-ஐ பார்வையிட்ட போது, நோயாளிகளின் உறவினர்கள் மருத்துவமனையின் தாழ்வாரத்திலோ அல்லது மரத்தடியிலே படுத்திருப்பதைக் கண்டோம். நான் ராஜாவிடம், "நீங்கள் ஏதாவது ஒரு புதிய திட்டத்தை எதிர்நோக்கி இருந்தால், என்னிடம் ஒரு நல்ல திட்டம் இருக்கிறது என்று கூறினேன். அந்த யோசனையின் உருவானதுதான் PGI சராய் (1986). நோயாளிகளின் உறவினர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட தங்கும் இடம்.

செஞ்சிலுவைச் சங்கம், இன்னர்வீல் சங்கத்தில் பணியாற்றியதால், தாமாக முன்வந்து எவரும் இரத்த தானம் செய்யாத நேரத்தில், மக்கள் இரத்தம் கிடைக்காமல் இறப்பதை உஷா அறிந்திருந்தார். "மக்கள் இரத்த தானம் வழங்கவே பயந்தார்கள். எனவே 1973-ம் ஆண்டு சண்டீகரில் முதல் மாவட்ட மாநாடு நடந்தபோது, விருப்பமுள்ளவர்கள் இரத்த தானம் அளிக்கும் வகையில் நாங்கள் ஒரு வேன் ஏற்பாடு செய்திருந்தோம்". இப்போது ரோட்டரி இரத்த சேமிப்பு மையம் செயல்பட்டு வருகிறது. இது சண்டீகர் ரோட்டரியின் பெருமைக்குரிய ஒரு திட்டமாகும்.

சங்கத்தின் மற்றொரு பெரிய திட்டம் Gift of life: Rotary Heartline இதுவும் எங்கள் யோசனையில் உதித்ததுதான். "ஒருநாள் வீட்டு வேலை செய்யும் பணியாள் என்னிடம், தில்லியில் இருக்கும் தமது மகள் மூச்சு பேச்சு இல்லாமல் கிடப்பதாகக் கூறினார். நான் அவரிடம், "ஏன் அவளை சண்டீகருக்கு அழைத்துவரக் கூடாது" என்று கேட்டேன். பின்னர் சண்டீகர் மருத்துவ மனையில் அவளை பரிசோதித்த போது இதயத்தில் ஓட்டை இருப்பது தெரியவந்தது. இதை சரிசெய்வதற்கான அறுவைச்சிகிச்சைக்கு ரூ.40,000 செலவாகும் என்றனர். அப்போது இது மிகவும் பெரியதொகை. ஆனாலும்,

*நான் அவர்களுக்கு கொடுத்து உதவினேன்'' என்று உஷா நினைவு கூர்ந்தார்.*

*இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பிவந்த அந்த நபர், தமது மகனுக்கு இதே பிரச்னை இருப்பதாகக் கூறினார். அவருக்கும் நாங்கள் ஒருமுறை உதவி செய்தோம். ''நாங்கள் இலவச அறுவைச்சிகிச்சைக்கு ஏற்பாடு செய்கிறோம்'' என்ற செய்தி பரவியதை அடுத்து குழந்தை நோயாளிகள் எங்கள் வீட்டு வாசலில் வரிசையாக நிற்கத் தொடங்கினர். நான் ராஜாவிடம், ''கடவுள் ஏன் இவர்களை நம்மிடம் அனுப்புகிறார்? இதற்கு ஏதோ காரணம் இருக்கிறது'' என்றேன். இந்த விஷயத்தை இன்னர்வீல் சங்கத்துக்கு எடுத்துச் சென்றார். அவர்கள் அங்கும் இங்குமாக ஒருசில அறுவைச் சிகிச்சைகளுக்கு ஏற்பாடு செய்தனர். ஆனால், எங்களிடம் பணம் அதிகம் இல்லை. மேலும் மற்ற திட்டங்களும் பாதிக்கப்பட்டன. இறுதியில் ரோட்டரி இதை கையிலெடுத்துக் கொண்டது. அப்போது உருவானதுதான் ''ரோட்டரியின் இதயம் காக்கும்'' திட்டம். ஆப்பிரிக்காவில் இந்த பிரச்னை அதிகம் இருந்ததால் அங்கு சென்றோம். இதைத் தொடர்ந்து ஆப்பிரிக்க குழந்தைகள் இங்கு வந்து சிகிச்சை பெறத் தொடங்கினர். இதேபோல பாகிஸ்தானிய குழந்தைகளுக்கும் இதயம் காக்கும் அறுவைச் சிகிச்சைகள் நடைபெற்றன.*

*''அன்பாக இருப்பது, கொடுப்பது, மற்றவர்களின் ஆதரவைப் பெறுவது என்பது விதைகளிலிருந்து செடியாகி மரமாக வளர்வதாகும். உங்களிடம் தணியாத ஆர்வம் மற்றும் நேர்மை இருந்தால் மற்றும் உங்கள் மனதும், இதயமும் விசாலமாக இருந்தால் ஆதரவுக்கு எந்த குறையும் இருக்காது. ராஜா, சொந்த முயற்சியில் எதையும் செய்யவில்லை. ஆனால், அவரது சங்க உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவாக இருந்தனர். அதனால்தான் விதைகள் அனைத்தும் நல்ல திட்டங்களாக மலர்ந்தன. அதற்காக அவர்களுக்கு நன்றி'' என்று மகிழ்ச்சி பொங்க கூறினார் உஷா.*



*ஹாலிவுட் நட்சத்திரம் ஆட்ரி ஹெப்பர்னுடன்.*

இந்தியாவிலேயே சிறந்த பள்ளிகளில் ஒன்றாக அது திகழ்ந்து வருகிறது. இப்போது அங்கு ஒரு நீச்சல்குளம் கட்டப்பட்டு வருகிறது.

ஆனால், சாபூ, பவனில் படிக்கும் 60-க்கும் மேலான சிறப்புக் குழந்தைகளுடன் கலந்துரையாடினார். அவர்களுடன் பேசும்போது சாபூவின் முகத்தில் மகிழ்ச்சியையும் பூரிப்பையும் பார்த்தேன். குழந்தைகளும் அவரிடம் அன்புகலந்த மரியாதையுடன் பேசி மகிழ்ந்தனர். இதே போன்றுதான் இந்தியாவிலும், ஆப்பிரிக்காவிலும் மருத்துவக் குழு சேவையாற்றியபோது அவருடன் பணியாற்றிய ரோட்டேரியன்களும் அன்பு மற்றும் நேசத்துடன் செயலாற்றினர்.

குழந்தைகளுடனான இந்த மாயாஜால சந்திப்பு பற்றி நான் கருத்து தெரிவித்தபோது, மூன்று பவன் பள்ளிகளின் மூத்த முதல்வர் வினீதா அரோரா, நான் சொல்வதை ஆமோதிப்பதுபோல் பேசினார். ஆமாம், ''இந்த குழந்தைகள் மக்களிடமிருந்து உண்மையான அன்பதைத்தான் விரும்புகிறார்கள்'' என்றார். பவன் மற்றும் அதன் பள்ளிகளுக்கு சாபூவின் பங்களிப்பு எப்படி என்பதை சுருக்கமாக கூறமுடியுமா என்று கேட்டதற்கு, சாபூவின் ரோட்டரி மற்றும் வாழ்க்கை



*ஜெர்மனியின் அதிபர் டாக்டர் ஹெல்மட் கோலுடன்.*

பயணம் இரண்டிலிருந்தும் பவனைப் பிரித்துப் பார்க்க முடியாது'' என்று ஒரே வரியில் பதில் சொல்லி விட்டார்.

விமானநிலையத்திலிருந்து ஹோட்டலுக்கு செல்லும் வழியில் தொழுநோயாளிகளுக்கான காலனியை நாங்கள் பார்வையிட்டோம். சாபூவின் முக்கியத் திட்டங்களில் இதுவும் ஒன்று. அவர், தனது ஆரம்ப காலத்தில் உருவாக்கி வளர்த்த திட்டம் இது. அவரின் பெரும்பாலான திட்டங்களைப் போலவே இந்த திட்டத்துக்கும் விதைவிதைத்து அவரது மனைவி உஷாதான். (உஷாவின் பங்களிப்பு தனியாக பெட்டிச் செய்தியாக உள்ளது.)

ஆனால், ராஜேந்திர சாபூ நிறைவேற்றிய மிகப்பெரிய திட்டங்களில் ஒன்று ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் ரோட்டரி மருத்துவக் குழுவினர் நடத்திய 30-க்கும் மேற்பட்ட மருத்துவ முகாம் திட்டமாகும். இந்த திட்டத்துக்கும் மூலகாரணமாக இருந்தவர் உஷாதான். அவர் சொல்வதைப் போல் ரோட்டரி வாழ்க்கையில் வெற்றிடத்தை நிரப்பும் வகையில் எவான்ஸ்டனில் இரண்டு ஆண்டுகள் உள்வரும் மற்றும் RI தலைவராகவும் அதன் பின்னர் TRF தலைவர் மற்றும் அறங்காவலராகவும் பணியாற்றினார்.

அவர் இந்தியா திரும்பிய பிறகு, PDG மாதவ் பொராடே, சபூவை புனேயில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் கலந்துகொள்ள அழைப்புவிடுத்தார். அங்கு போலியோ முகாமை நடத்த அமெரிக்காவிலிருந்து ஒரு மருத்துவர்கள் குழு வந்திருந்தது. அவரின் TRF தலைவர் பதவிக்காலம் முடிவடையும் நிலையில், நான் அவரிடம், "நீங்கள் இதுபோல் செய்தால் என்ன கேட்டேன். அதற்கு சாபூ, "அதுபற்றி யோசிக்கிறேன்'' என்றார். ஆண்டுதோறும் புனேயில் போலியோ முகாம் நடத்தவரும்






சாபூ மற்றும் உஷாவை ஓவல் அலுவலகத்தில் வரவேற்கிறார் முன்னாள் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் H W புஷ்.





ஆப்பிரிக்காவில் ஒரு மருத்துவ முகாமில்.



மேலே: PRID O P *வைஷ்டன்* PRIP *சாபூ.*

கீழே: *உஷா மற்றும்* PRIP *சாபூ தங்கள் பேரக் குழந்தைகளுடன்.*



அமெரிக்க மருத்துவர்கள் குறித்து அவர் கூறிய போது, எங்களிடம் மருத்துவர்களுக்கு பஞ்ச மில்லை. அதே நேரத்தில் ஆப்பிரிக்காவில் பசி பட்டினி தலைவிரித் தாடுவதாகவும், அங்கு போலியோ, எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் இருப்பதாகவும் செய்திகள் வருகின்றன. நாம் அவர்களுக்கு ஏன் உதவக்கூடாது? என்று உஷா நினைவுகூர்ந்தார். அமெரிக்க மருத்துவர்கள் குழுவில் இருந்தவர்களில் ஒருவர் இந்திய வம்சா வளியைச் சேர்ந்தவர். அவரது பெயர் நந்தலால். அவருக்கு உகாண்டாவில் சிலருடன் தொடர்பு இருந்தது. இந்திய ரோட்டரி மருத்துவர்களுக்காக அங்கு ஒரு மருத்துவ முகாமுக்கு தம்மால் ஏற்பாடு செய்ய முடியும் என அவர் தெரிவித்தார். “புனே மாநாட்டில் எப்படி ஒரு யோசனை பிறந்தது. அதைச் செயல்படுத்த எப்படியெல்லாம் ஒன்று சேர்ந்தோம் பாருங்கள்” என்று புன்னகையுடன் தெரிவித்தார் உஷா.

ஆனால், “தொழுநோய் காலனி, மருத்துவ முகாம்கள், இரத்த சேகரிப்பு மையம், (PGI செராய், இதய மையம், அமைதிக்கான நினைவுச்சி ன்னம், தீபாவளி கொண்டாட்டத்தில் ஜவான்களுக்கு இனிப்பு வழங்குதல்) போன்ற அனைத்து சேவைத் திட்டங்கள் இருந்தாலும், ரோட்டரியில் அவரின் சேவைகள் குறித்து குழந்தைகளும் குடும்பத் தினரும் பெருமைப் பட்டாலும் ரோட்டரி சங்க உறுப்பினர்களின் ஆதரவு இல்லாமல் எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்தி இருக்க முடியாது. எங்கள் சங்கம் ஒரு நல்ல சங்கம். நீங்கள் தெரிவிக்கும் யோசனைகளை அவர்கள் தீவிரமாக பரிசீலிக்கிறார்கள். இப்போது ஒவ்வொரு மாதமும் காச நோயாளி களுக்கு 125 உணவுப் பொட்டலங்கள் வழங்குவதற்கான திட்டத்தை செயல்படுத்த தொடங்கியுள்ளோம். நான் தனிப்பட்ட முறையில் இரண்டு தடவை அங்கு சென்றிருக்கிறேன். எங்கள் ரோட்டரி சங்கம்

# சாபூவை பற்றி PRIP-க்கள் பானர்ஜி மற்றும் ரவீந்திரன்



சென்னையில் நடந்த மண்டல மாநாட்டில் PRIP K R ரவீந்திரன் (இடது) மற்றும் PRIP கல்யாண் பானர்ஜி ஆகியோருடன்.

மூத்த பதவிகளில் பணியாற்றியபின் ரோட்டரியில் RI தலைவராக ராஜேந்திர சாபூ பணியாற்றியதைப் பற்றித்தான் பெரும்பாலான ரோட்டேரியன்கள் கவனம் செலுத்தினர். ஆனால், முன்னாள் RI தலைவர் கல்யாண் பானர்ஜி, 1965–1985-க்கு இடைப்பட்ட காலத்தில் ராஜாவின் பங்களிப்பு மகத்தானது என்று குறிப்பிட்டார். ஏன் அதன் பின்னர்கூட அதாவது அடுத்த பத்து ஆண்டுகளில் ரோட்டேரியன்களும் ஒருங்கிணைந்து ஒன்றாக செயல்பட உதவினார். அந்தக் காலத்தில் சகாக்களும் இருந்தனர். போட்டியாளர்களும் இருந்தனர். இருதரப்பினரையும் அரவணைத்து வழிநடத்திச் செல்வதில் ராஜா முக்கிய பங்காற்றினார். அவர் அப்போது தலைவராகத் தேர்ந்தெடுக் கப்படவில்லை. தன்னைச்சுற்றி பலர் இருந்தபோதும் அவர் ரோட்டரியின் அடையாளமாகத் திகழ்ந்தார்.

சரியான நபர்களைத் தேர்ந் தெடுப்பதில் ராஜேந்திர சாபூ வல்லவர். "ராஜாவுக்கு மக்களை நன்றாகத் தெரியும். மக்களுக்கும் ராஜாவை நன்கு தெரியும். இலங்கை முழுவதும் K R ரவீந்திரனை முழுமையாக அறிந்திராத நிலையில், PRIP ஆன அவர் (K R ரவீந்திரன்) TRF அறங்காவலராக தேர்ந்தெடுக்கப்பட முக்கிய காரணமாக இருந்தவர் சாபூ. அவரும் மற்றவர்களும் சட்டரீதியான அல்லது பிற சவால்களை எதிர்கொண்டபோது, இதற்கு யார் காரணம் என்பதைக் கண்டறிந்து ரோட்டரி அமைதியாகச் செயல்பட உதவினார்."

ரவீந்திரன் கூறுகையில், "வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர் ராஜேந்திர சாபூதான்". ராஜா தொலைநோக்கு பார்வை கொண்டவர், பெரிதாக கனவு காண்பவர். எதையும் கட்டமைக்கும் திறன்பெற்றவர். அறிவுத்திறன் கொண்டவர். அவரிடம் உள்ள தாராள குணம், சிறப்பான தலைமைப் பண்பு, மற்றவர்களைக் கவர்ந்தது. அவரது நீண்ட பயணத்தின் மூலம் இவை தெளிவாகத் தெரிந்தது. எந்தவிஷயத்திலும் சமரசம் செய்து கொள்ளாமல், வாக்குறுதிகளை கடைப்பிடித்து, நேர்மையாக இருக்கும் ஒருவர் வாழ்க்கை, வர்த்தம் மற்றும் ரோட்டரியில் முன்னிலைக்கு வரமுடியும் என்பதற்கு சரியான உதாரணம் ராஜேந்திர சாபூ.

பானர்ஜி மேலும் கூறுகையில், ரோட்டரியின் அமைதித் திட்டம், ஒருவேளை இன்று உலக அமைதிக்கு ரோட்டரியின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்திருக்கலாம். இந்த திட்டம்கூட ராஜாவின் மூளையில் உதித்த திட்டம்தான். கடந்த கால் நூற்றாண்டுகளில், மக்களை ஒன்று சேர்ப்பதில் ரோட்டரியின் நீடித்த பங்களிப்பாக இது இருந்தது என்று நான் நினைக்கிறேன்" என்றார்.

உண்மைகளையும் கட்டுக் கதை களையும் பின்னிப் பிணைத்து புராணக் கதைகள் சொல்லப்படுவதுண்டு. ஆனால், நிஜவாழ்க்கையில் ராஜாவாகத் திகழ்ந்தவர். அவர் எனக்கும் மற்றவர்களுக்கும் மட்டுமல்ல எல்லோருக்கும் விசுவாசமாக இருந்தார். விதிவிலக்கான தலைமைப் பண்புகளுக்கு அவர் ஒரு உதாரணமாகும் என்றார் ரவீந்திரன்.■

மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து ரோட்டரி சங்கங்களும் சமூக சேவை செய்து வருகிறது. ஏனெனில் அதற்கான தேவை உள்ளது. உங்கள் கண்கள், காதுகள், மனது, இதயம் ஆகியவற்றை திறந்துவைத்தால் எல்லா இடங்களிலும் சேவை செய்வதற்கான வாய்ப்புகள் நிறைய உள்ளன.''

உஷா ஒரு ரோட்டேரியனாக இல்லாவிட்டாலும் ரோட்டரிக்கு பலவகையில் பங்களித்திருக்கிறார். ஒவ்வொரு முறையும் ''எங்கள் சங்கம்'' என்று அவர் குறிப்பிட்டது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. உஷா சிரித்துக்கொண்டே, ''ரோட்டரியில் சேரவேண்டிய அவசியம் எனக்கு இருந்ததில்லை. நான் இதயத்திலும் மனதிலும் ரோட்டேரியனாக இருக்கிறேன். உண்மையாக கூறினால், எந்த திட்டத்தை எங்கள் சங்கம் செயல் படுத்த விரும்பினாலும் பணம் வசூலிப்பது முதல் நேரம் கொடுப்பது மற்றும் திட்டத்தை செயல்படுத்துவது வரை எதுவாக இருந்தாலும் GSE குழுவினர் என்னிடம் வருவார்கள். நான் எப்போதும் ரோட்டரிக்காவே இருக்கிறேன்'' என்று கூறினார்.

சாபூவின் நல்ல குணம் என்னவெனில் அவர் எதைச் செய்தாலும் முழுமனதுடன், நேர்மையான முறையில் செய்கிறார். அவர் 1966 இல் ரோட்டரி உறுப்பினர் ஆனதிலிருந்தே ரோட் டரியை மதிக்கிறார். எதைச் செய்தாலும் நேர்மையாகவும் ஒருங்கிணைப்புடனும் செய்கிறார் என்றார் உஷா. ''அந்தக் காலங்களிலும் இப்போதும், தேர்தல் விவகாரங்களுக்கு இந்தியா பெயர்போனது. ''ஆளுநர் பதவிக்கு அவர் போட்டியிட்ட போதுகூட எங்கள் சங்க உறுப்பினர்களிடம், ''நீங்கள் சங்க அலுவலகத்துக்கு அடிக்கடி செல்லலாம். ஆனால், மாவட்ட மாநாட்டின்போது இலவசமாக அறைகள் வழங்குவது அல்லது லஞ்சம் கொடுப்பது அல்லது ஏதேனும் தவறு செய்வது தெரியவந்தால், நான் போட்டியிலிருந்து விலகி விடுவேன்'' என்று குறிப்பிட்டிருந்தார். நேர்மையை கடைப்பிடிப்பதில் அவர் உறுதியாக இருந்தார். இயக்குநர் மற்றும் தலைவர் பதவி தேர்தலிலும் இதே நிலையைத்தான் அவர் பின்பற்றினார்'' என்றும் உஷா குறிப்பிட்டார்.



''வாழ்க்கை, வர்த்தகம், குடும்பம் மற்றும் ரோட்டரி என எதுவாக இருந்தாலும் பின் விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் சரியான



*RC சண்டிகரின் முன்னாள் தலைவர்களுடன் PRIP சாபூ. PDGs மதுகர் மல்ஹோத்ரா (வலமிருந்து இரண்டாவது) மற்றும் பிரவீன் கோயல் (வலமிருந்து நான்காவது) அவர்களும் உள்ளனர்.*

பாதையில் செல்வது அவரின் இயல்பான குணமாகும்'' என்று உஷா மேலும் கூறினார்.

**சேவை செய்வதில் ஆர்வம் கொண்டவர் சாபூவுக்கு சங்கத் தலைவர்கள் பாராட்டு**

PDG மதுகர் மல்ஹோத்ரா, PRIP ராஜேந்திர சாபூவுடன் பல ஆண்டுகள் நெருங்கி பணியாற்றியவர். திட்டமிடுதல், மருத்துவ முகாம்களை செயல்படுத்துதல் அல்லது செயலாளராக – (சாபூ பாரதிய வித்யாபவனின் தலைவராக இருந்தபோது) சாபூவை ஒரு அற்புதமான மனிதராகவே பார்க்கிறார். எதைச் செய்தாலும் நன்றாகச் செய்ய வேண்டும், முழு மனதுடன் செய்ய வேண்டும் என்ற அவரின் எண்ணம் என்னை வெகுவாக கவர்ந்தது. RI தலைவராக அவர் பதவி வகித்தபோதுதான் – ‘‘உங்களுக்கு அப்பாலும் பாருங்கள்'' அல்லது ‘‘சுயநலம் இல்லாத சேவை'' என்னும் கொள்கையை கொண்டுவந்தார். அதன்படி அவர் செயல்பட்டார். ‘‘நான் எப்போதும் ஆமாம் போடும் சாமியல்ல. எனக்கும் அவருக்கு கருத்துவேறுபாடு வருவதுண்டு. ஆனால், ஒருவரை பார்த்த உடனேயே, ‘‘இந்த வேலையை அவருக்கு கொடுக்கிறேன். அவர் அதிலேயே மூழ்கி நன்றாக வேலை செய்வார்'' என்று முடிவு செய்வதில் வல்லவர் சாபூ என்றார் மல்ஹோத்ரா.

அவருடன் பணியாற்றுவது மிகவும் மகிழ்ச்சியானது என்றாலும் வேலை வாங்குவதில் கண்டிப்பானவர் என்பதை அவரே தெளிவுபடுத்துகிறார். மருத்துவ முகாம் பணிகளின்போது காலை 5 மணிக்கே எழுந்து நடைப்பயிற்சிக்கு அழைப்பார். அவருக்கு அபரிமிதமான ஆற்றல் இருந்தது. அவருக்கு ஈடுகொடுத்து வேகமாகச் செல்வது கடினமாக இருந்தது.

பவன் பள்ளிகளின் செயலாளராக சாபூ இருந்தபோது அவருக்கு இருந்த ஈடுபாடு குறித்து PDG கூறுகையில், ‘‘சாபூ எனக்கு RI இயக்குநர் பதவி பெற்றுத்தருவதில் ஆர்வம் காட்டினார். ஆனால், நான் அவரிடம், எனக்கு இதில் விருப்பம் இல்லை. நான் குடும்பத்தினருடன் அதிக நேரம் செலவிட விரும்புகிறேன்'' என்று கூறியதை அடுத்து, ‘‘சரி பவன் பள்ளி சேவையில் ஈடுபடுங்கள். அங்கு நீங்கள் வாரத்தில் இரண்டு நாட்கள் சென்றுவந்தால் போதுமானது'' என்று கூறினார். நான் இப்போது அங்கு முழுநேரத்தையும் செலவிடுகிறேன். இது எனக்கு 13-வது ஆண்டு என்றார் மல்ஹோத்ரா.

IPP அனில் சத்தா கூறுகையில், ‘‘சாபூ ஒரு தொலைநோக்குப் பார்வை கொண்டவர். ஒட்டுமொத்த ஆதரவு அளிப்பவர். நீங்கள் அவரிடம் கொண்டுவரும் எந்த ஒரு பிரச்னைக்கும் தீர்வுகாணும் திறன் படைத்தவர். அதை அவர் எப்படிச் செய்கிறார் என்று எனக்குத் தெரியாது. ஆனால், எதையும் அனுபவ ரீதியாகவும், புதிய கண்ணோட்டத்துடனும் அணுகி செயலுக்கு கொண்டுவந்துவிடுவார். உதாரணமாக தாய்ப்பால் வங்கி திட்டம் இரண்டு ஆண்டுகாளாக



*PRIP சாபூ மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தையுடன் பாரதிய வித்யா பவனில்.*

கிடப்பில் இருந்த நிலையில் அதை கடந்த ஆண்டு சத்தாவின் தலைமையில் செயல்படுத்தினார். “அனில், இதை நாம் செய்து முடிக்கிறோம் என்று சொன்னார். நாங்கள் அதை செய்துமுடித்தோம்’’. இதுதான் அவரது தலைமை.’’

சாபூவுடன் தொழில் முறையில் இணைந்து பணியாற்றிய மற்றொரு முன்னாள் தலைவர் சரண்ஜித் சிங். அவர் கூறுகையில், “அவர் மக்களுக்கு தேவையானதைச் செயல்படுத்துகிறார். எந்த ஒரு விஷயத்தையும் கலந்து விவாதிக்கிறார். அதற்கு முடிவு காணவும் உதவுகிறார். அவரிடம் தொலைநோக்குப் பார்வை இருப்பதால், மக்களின் தேவைகளை அவரால் கற்பனைசெய்து பார்க்க முடிகிறது. ஆரம்ப காலகட்டத்தில் அவரிடம் கோபம் அதிகமாக இருந்தது. சில சமயங்களில் நிதானத்தை இழந்து பேசிவிடுவார். அதற்கு காரணம், தன்னுடன் பணியாற்றுபவர்கள் எந்த காரியத்தைச் செய்தாலும் அதை சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார்.

RI தலைவராக வருவதற்கான அவரது பயணத்தின்போது, அவர் சில சவால்களைச் சந்திக்க நேரிட்டது. “ஒருநாள் அவருடைய அறைக்கு நான் சென்றபோது அவரது கையெழுத்துடன் ஒரு துண்டுச் சீட்டை கண்டேன். இது அவரின் வேண்டுகோளாக இருக்கலாம் என்று நினைத்தேன். ஆனால், அதில் அவர் சுவாமி விவேகானந்தரின் வார்த்தைகளை மேற்கோள் காட்டியிருந்தார். “எனது பணிக்கான சக்தியைக்  கொடுங்கள்’’ என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் அவ்வாறு எழுதியிருந்தது என்னை வெகுவாக ஈர்த்தது. அதுதான் அவரின் வாழ்க்கை மற்றும் ரோட்டரி இரண்டிலும் வெற்றிக்கு முக்கியமாக இருந்ததாக நான் கருதுகிறேன்’’ என்று சிங் நினைவுகூர்ந்தார்.

PDG பிரவீண் கோயல், சாபூவின், “நேர்மை, அர்ப்பணிப்பு மற்றும் கடினமான உழைப்பை பாராட்டுகிறார். நாம் ஒருவருக்கு ஏதாவது வாக்குறுதி அளித்தால், அதை காப்பாற்ற வேண்டும் என்பதை அவரிடமிருந்துதான் நான் கற்றுக்கொண்டேன்’’ என்கிறார் அவர்.



(இடமிருந்து) *சங்கத் தலைவர் ஜதிந்தர் கபூர், PRIP சாபூ மற்றும் பவன் முதல்வர் வினிதா அரோரா சிறப்பு குழந்தைகளுடன்.*

சங்கத்தின் தலைவர் ஜதிந்தர் கபூர் கூறுகையில், “1978-ல் சாபூ, ஒரு ரோட்ராக்டராக இருந்தபோது சந்தித்தேன். அதன் பிறகு சங்கத்தின் செயலாளர் மற்றும் தலைவராக இருந்தபோது அவருக்கு நான் கடிதம் எழுதுவதுண்டு. அப்போது மின்னஞ்சல் வசதி இல்லை. அவரிடமிருந்து உடனடியாக பதில் வந்துவிடும். அவர் சங்கத்தின் ஒளிவிளக்காக இருந்தார். இப்போது சங்கம் மதிப்பும் மரியாதையுடன், மிகப் பெரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது என்றால் அதற்கு அவர் முக்கிய காரணம். அவர் மிகவும் எளிமையானவர். எல்லோரிடமும் பணிவாக பழகுவார். சங்கத்தின் ஒவ்வொரு கூட்டத்திலும் தவறாமல் பங்கேற்பார். சீக்கிரமாக செல்ல வேண்டியிருந்தால், அனுமதி பெற்றுத்தான் வெளியேறுவார்’’ என்றார்.

“சாபூவிடமிருந்து பணிவை நான் கற்றுக்கொண்டேன்’’ என்கிறார் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜஸ்பால் சிங் சித்து. டினா விர்க், “அவரை ஒரு முன்மாதிரியாகக் காண்கிறார். அவர் தனது இருப்பு மற்றும் அர்ப்பணிப்பு மூலம் சேவை எப்போதும் சாத்தியம் என்பதை நிரூபித்துள்ளார். மேலும் வயது மற்றும் உடல்நலக்குறைவால் அவரது சேவை தடைபட்டதில்லை. எங்கள் சங்கம் சேரிப் பகுதியில் உணவு வழங்குகிறது என்றால், அவரே வந்து சேவை செய்கிறார். நான் கடந்த ஆண்டை பற்றித்தான் பேசுகிறேன். அவரது ஆற்றலும் ஊக்கமும் என்னை வெகுவாக கவர்ந்துள்ளது’’ என்றார்.

கோவிட் தொற்றுக்காலத்தில் சாபூ எவ்வளவு சுறுசுறுப்பாகச் செயல்பட்டார் என்பதை சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட அபா சர்மா விளக்கமாக கூறினார். “நான் அப்போது சங்கத்தின் செயலாளராக இருந்தேன். தினமும் காலை 7 மணிக்கு அவர் எங்களை அழைத்து, நீங்கள் என்ன திட்டமிட்டுள்ளீர்கள், இன்று நிவாரணப் பணி எங்கு நடக்கிறது என்று கேட்பார். அவர் நாள் முழுவதும் அதை கண்காணிப்பார். அவர் எல்லா விவரங்களையும் கேட்பார். எதையும் பெரிதாகச் செய்யவேண்டும் என்று எண்ணுவார். அதுதான் அவரின் ஆளுமை. ஆனால், எல்லாவற்றுக்கும் மேலாக சேவை செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அதுதான் அவரின் தனித்துவமான சிறப்பு’’ என்றார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத் மற்றும் ராஜேந்திர சாபூ நூலகம்

# நைஜீரிய மருத்துவர்களுக்கான கண் பராமரிப்பு பயிற்சி

ஜெய்ஸ்ரீ



கண் மருத்துவர் டாக்டர் உஃபுமா ஒலுமோடெஜி (இடது) ஒரு குழந்தையை பரிசோதிக்கிறார்.

சென்னையில் உள்ள கண் மருத்துவமனையான ராதாத்ரி நேத்ராலயாவில் தொழில் பயிற்சி திட்டத்தில் (VTT) பயிற்சி பெற்ற கண் பராமரிப்பு நிபுணர்கள் குழு கற்றுக்கொண்ட பாடங்களுக்கு நன்றி, நைஜீரியாவில் உள்ள கண் மருத்துவர்கள் இப்போது ROP (குறைப்பிரசவ குழந்தைகளுக்கான ரெட்டினோபதி) சிகிச்சையை தீவிரமாக எடுத்துக் கொள்வார்கள்.

ROP என்பது பார்வையை இழக்கச் செய்யும் ஒரு கோளாறு ஆகும், இது பிறக்கும் போது 3 பவுண்டுகளுக்கும் குறைவான எடையுள்ள குறைப்பிரசவக் குழந்தைகளை பாதிக்கிறது. உலகளவில் குழந்தைகளில் தடுக்கக்கூடிய குருட்டுத் தன்மைக்கான முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்றாகும், ஆனால் வளரும் நாடுகளில் இது பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகிறது என்று ராதாத்ரி நேத்ராலயாவின் விழித்திரை அறுவை சிகிச்சை நிபுணரும் இயக்குனருமான டாக்டர் வசுமதி வேதாந்தம் கூறுகிறார். இந்தியா இந்த கோளாறின் பெரும் அளவைக் காண்கிறது, ஏனெனில் பிறந்த குழந்தைகளின் தீவிர சிகிச்சை பிரிவுகளுக்கான அதிக அணுகல் குறைப்பிரசவக் குழந்தைகளின் உயிர்வாழ்வு விகிதங்களை மேம்படுத்தி யுள்ளது, ஆனால் அதிநுட்ப ஆக்ஸிஜன் கட்டுப்பாடு இல்லாமல் இருக்கிறது. சுவாச பிரச்சனைகளுக்கு சிகிச்சை அளிக்கும் போது குழந்தைகளுக்கு அதிகப்படியான ஆக்ஸிஜன் கொடுக்கப் பட்டால் ROP பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என அவர் மேலும் கூறுகிறார்.

நைஜீரியாவைச் சேர்ந்த இரண்டு ஆப்டோமெட்ரிஸ்ட்கள், ஒரு கண் செவிலியர் மற்றும் ஒரு கண் மருத்துவர் ஆகிய நான்கு பேர் கொண்ட குழு ROP மற்றும் குழந்தைகளின் பிற கண் கோளாறுகளுக்கு மருத்துவமனையில் பயிற்சி பெற்றனர். இந்த VTT பயிற்சியானது RC மீனம்பாக்கம், RID 3234 சங்கத்தால் உலகளாவிய மானியம்



*நைஜீரியாவிலிருந்து கண் பராமரிப்பு குழு, DRFC B தக்ஷாயணி* (இடமிருந்து இரண்டாவது), *டாக்டர் வசுமதி வேதாந்தம்* (முன் வரிசை, வலது), *மாவட்ட VTT தலைவர் ராதிகா சத்யநாராயணா* (வலமிருந்து இரண்டாவது, பின் வரிசை) *மற்றும் டாக்டர் பிரவீன் கிருஷ்ணா (பின் வரிசை, இடது) உடன் சென்னை ராதாத்ரி நேத்ராலயாவில்.*

மூலம் ஏற்பாடு செய்யப் பட்டது. மருத்துவக் குழுவை RC Ota, RID 9112 அடையாளம் கண்டு ஆதரவு அளித்தது. "ஹூஸ்டனின் ரோட்டரி மாநாட்டிற்குப் பயணிக்கும் போது நைஜீரியாவின் Rtn Dr வோலே குகோயி உடன் துபாயில் நடந்த ஒரு தற்செயலான சந்திப்பு இந்த VTT-க்கு வழிவகுத்தது'' என்கிறார் RID 3233 மற்றும் 3234 DRFC தலைவர் தாக்ஷாயணி. பயிற்சி 15 நாட்கள் நீடித்தது, அங்கு வருகை தந்த குழுவினர் ROP, மாறுகண் மற்றும் சோம்பேறி கண் நோய், கார்னியல் ஒளிபுகாநிலைகள், ஒவ்வாமை மற்றும் குழந்தை பருவ கண்புரை பற்றி அறிந்து கொண்டனர். RC சென்னை டவர்ஸின் உறுப்பினரான டாக்டர் வசுமதி தனது கணவரும் குழந்தை கண் மருத்துவ நிபுணருமான டாக்டர் பிரவீன் கிருஷ்ணாவுடன் இணைந்து பயிற்சி அளித்தார்.

வருகை தந்த குழுவின் தலைவர் சொலு சொடுண்டே, நைஜீரியாவில் குழந்தைகளுக்கான கண் பராமரிப்பு தொடர்பான சவால்களை எடுத்துரைத்து, குழந்தைகளுக்கான கண் பிரச்சனைகள், குறிப்பாக ROP பற்றி பராமரிப்பாளர்களிடையே விழிப்புணர்வு போதுமானதாக இல்லை என்றார்.

"ஆப்பிரிக்காவின் இன்றைய நிலை, ஒரு தசாப்தத்திற்கு முந்தைய இந்தியாவின் நிலையை பிரதிபலிக்கிறது'' என்கிறார் டாக்டர் வசுமதி. அவர் சென்னையில் ROP ஸ்கிரீனிங்கைத் தொடங்கியபோது, "2007-ல் இங்குள்ள அரசு மருத்துவ மனைகளில் அத்தகைய திட்டம் இல்லை. இருப்பினும், ROP-க்கு சோதிக்கப்படாத குழந்தைக்கு ரூ.3 கோடி இழப்பீடு வழங்கிய ஒரு முக்கிய உச்ச நீதிமன்ற தீர்ப்பு இந்த நிலையை மாற்றியது மற்றும் கோளாறு பற்றிய விழிப்புணர்வை அதிகரித்தது. "ஆனால் நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. இந்தியாவில் 150 ROP நிபுணர்கள் மட்டுமே உள்ளனர்.'' ROP-ஐக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க அவர் தனது மருத்துவமனையில் ஏழு குழுக்களுக்குப் பயிற்சி அளித்துள்ளார். கோளாறின் தீவிரத்தைப் பொறுத்து லேசர் முதல் ஊசி மற்றும் அறுவை சிகிச்சை வரை சிகிச்சை மாறுபடும்.

லேசர் சிகிச்சைக்கு இரண்டு கண்களுக்கும் பொதுவாக ரூ.40,000 செலவாகும் ஆனால் நாங்கள் அதற்கு ரூ.10,000 மானியம் வழங்கியுள்ளோம். ஆனால் அரசு மருத்துவமனைகளில் இருந்து வரும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பெற்றோர்களிடம் நாங்கள் கட்டணம் வசூலிப்பதில்லை; என்று அவர் கூறுகிறார். ரோட்டரி 2016-ம் ஆண்டில் 330 குழந்தைகளுக்கு சிகிச்சை அளித்த GG உடன் மருத்துவமனைக்கு ஆதரவளித்துள்ளது. இந்த மருத்துவமனையில் இதுவரை 4,000 குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

வருகை தந்த குழுவினர் சுற்றுவட்டார கிராமங்களிலும், மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளிகளிலும் கண் சிகிச்சை முகாம்களிலும் கலந்து கொண்டனர். "ROP கொண்ட குழந்தைகளை பரிசோதிக்கவும் சிகிச்சை செய்யவும் உங்களுக்கு ஒரு வருட பயிற்சி தேவை. குழந்தைகளுக்கு மயக்க மருந்து வழங்கப்படுவதில்லை மற்றும் அவர்களின் கண்கள்மிகவும் மென்மையானவை. குழந்தையைப் பிடிக்கவும், கண்களை சோதிக்க கேமராவைப் பயன்படுத்தவும், மானிட்டரைப் பார்க்கவும் மற்றும் கண்டுபிடிப்புகளைப் பதிவு செய்யவும் சிறப்புத்திறன் தேவை'' என்று வசுமதி கூறுகிறார்.

இந்தியப் பயணம் அனைத்துக் குழு உறுப்பினர்களுக்கும் முதல் முறையாகும். இது RC மீனம்பாக்கத்தின் இரண்டாவது VTT திட்டமாகும், முந்தையது உகாண்டாவைச் சேர்ந்த ஒரு குழுவிற்கு மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவமனையில் வழங்கப்பட்ட குழந்தைகளுக்கான இருதயவியல் பயிற்சித்திட்டமாகும். ■


# XAVIER UNIVERSITY SCHOOL OF MEDICINE AND KLE ANNOUNCE

## 6 YEARS

PRE-MED TO

**DOCTOR OF MEDICINE / DOCTOR OF VETERINARY MEDICINE**

**PROGRAMME**





**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 2 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island - Netherlands

**Next 2 years**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

## TO ATTEND

# WEBINAR

## REGISTER NOW

**XUSOM.COM/INDIA/**

**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 3 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island- Netherlands

**Final year**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

**Limited Seats**

**Session starts in January 2025**

To apply, Visit:
application.xusom.com
email: infoindia@xusom.com

**XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR H1/J1 Visa PROGRAMME**

ADVT.

# போலியோவுக்கு எதிரான போராட்டத்தை புதுப்பித்தல்

**தீபக் கபூர்**

இந்தியாவில் தடுப்பூசியால் உண்டான போலியோவின் (VDPV) இரண்டு வழக்குகள் நம் அனைவரையும் கவலையடையச் செய்துள்ளது. ஜனவரி 14, 2011 முதல் இந்தியா வைல்டு போலியோ வைரஸிலிருந்து (WPV) விடுபட்டிருந்தது. உலகில் உள்ள இரண்டு WPV-உள்ள நாடுகளான பாகிஸ்தான் 17 வழக்குகளும் ஆப்கானிஸ்தான் 18 வழக்குகளும் கொண்டுள்ளன.

துரதிர்ஷ்டவசமாக, VDPV வழக்குகள் உலகின் பல பகுதிகளில் பரவலாக உள்ளன. nOPV என்ற ஒரு புதிய தடுப்பூசி VDPV இன் பரவலை தடுக்க உதவியது, ஆனால் அந்த பணி இன்னும் முடியவில்லை. போலியோ இல்லாத உலகம் என்ற ரோட்டரியின் குறிக் கோளுக்காக அனைத்து ரோட்டேரியர்களும் தங்களை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டிய நேரம் இது, அதன் இலக்கு மிகவும் அருகில் உள்ளது. உலகளவில் 3,50,000-க்கும் அதிகமானோர் போலியோவால் பாதிக்கப்பட்ட நிலையிலிருந்து தற்போது 35-ஆகக் குறைந்துள்ளோம்.



தேசிய போலியோ கண்காணிப்புத் திட்டம் (NPSP) கேரளா, இமாச்சலப் பிரதேசம், மேகாலயா போன்ற மாநிலங்களில் போலியோவால் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ள நோயெதிர்ப்பு குறைபாடுள்ள குழந்தைகளுக்கு சிறப்புக் கண்காணிப்பை நடத்தி வருகிறது. இது இந்தியாவில் ஒரு தனித்துவமான கண்காணிப்பு நடவடிக்கையாகும். கேரளா மற்றும் சிம்லாவில் (இமாச்சலப் பிரதேசம்) நோயெதிர்ப்பு குறைபாடுள்ள குழந்தைகளில் மாறுபட்ட போலியோவைக் கண்டறிவது மிகவும் ஆபத்தான வளர்ச்சி அல்ல, ஏனெனில் தடுப்பூசி போட்ட பிறகும் உடலில் ஆன்டிபாடிகளை உருவாக்காத குழந்தைகளில் இது எதிர்பார்க்கப்படுகிறது. துரதிர்ஷ்டவசமாக, இத்தகைய குழந்தைகள் பொதுவாக இரண்டு வயதுக்கு மேல் வாழ்வதில்லை.

**இந்தியாவில் உள்ள மிகப்பெரிய ஆபத்துகள்:**

- பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து WPV இறக்குமதி ஆவதற்கான சாத்தியம்
- VDPV2-ன் இறக்குமதி மற்றும் சுழற்சிக்கான சாத்தியம்
- நாடு முழுவதும் உள்ள 270 வருவாய் மாவட்டங்களில் சரியில்லாத நோய்த்தடுப்பு நிலைகள். போலியோ தடுப்பூசியின் தேசிய சராசரி 90 சதவீதமாக உள்ளது, மீதமுள்ள 10 சதவீதம் அல்லது 26 மில்லியன் குழந்தைகள் இதுவரை ஒரு போலியோ தடுப்பூசியை கூட பெறவில்லை.
- மியான்மர், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து புலம்பெயர்ந்தவர்களால் தேசிய சராசரியான 90 சதவீத நோய்த்தடுப்பு அளவு குறைய வாய்ப்புள்ளது.

இந்தியாவில் ரோட்டேரியர்கள் WPV கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். தடுப்பூசியால் உண்டாகும் போலியோ வைரஸுக்கு எந்தக் குழந்தையும் பலியாகிவிடாத படி இருக்க, நமது நோய்த்தடுப்பு அளவை 100 சத வீதமாக வைக்க வேண்டும். அதற்கு அரசு மற்றும் நம் கூட்டாளர்களான WHO, UNICEF, பில் அண்ட் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் GAVI ஆகியவர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும். இதைச் செயல்படுத்த, கடந்த காலத்தில் நாம் மிகவும் திறமையாகப் பயன்படுத்திய கொள்கைகளுக்குத் திரும்ப வேண்டும்: 100 சதவீத தடுப்பூசி அளவை அடைய மாநில மற்றும் மாவட்ட அளவில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும்; அரசியல் மற்றும் மதத் தலைவர்கள் மற்றும் அதிகாரவர்க்கத்தினரிடம் நம் விழிப்புணர்வு முயற்சிகளைத் தொடருங்கள்; NID-கள் மற்றும் SNID-களில் நோய்த்தடுப்பு சாவடிகளை அமைக்கவும்.

சர்வதேச போலியோ பிளஸ் குழுவின் தலைவரான PRID மைக்கேல் மெக்கவர்ன், போலியோ வால் முன்வைக்கப்படும் சவாலை எதிர்கொள்ள, இந்தியாவில் உள்ள மாவட்டங்களுக்கு உதவ தேசிய போலியோபிளஸ் செயல்பாட்டுக் குழுவை அமைத்துள்ளார்:

**தலைவர்:** PDG தீபக் கபூர்
**ஆலோசகர்கள்:** RI இயக்குனர் அனிருதா ராய்சௌத்ரி மற்றும் PRID அசோக் மகாஜன்
**உறுப்பினர்கள்:** RID 3132 PDG ராஜீவ் பிரதான், லோகேஷ் குப்தா, RID 3182 PDG P நாராயணா, அஜய் சக்சேனா மற்றும் RID 3291-ன் PDG ஷியாமஸ்ரீ சென்.

உலகில் இருந்து போலியோவை ஒழிக்க நாம் செய்த முயற்சி களின் வியத்தகு முன்னேற்றத்தின் ஆதாயங்களை காப்பாற்றுவோளம்.

(எழுத்தாளர் இந்திய தேசிய போலியோ பிளஸ் குழுவின் தலைவர்.)

# சிறைக் கைதிகளுக்கான
# எழுத்தறிவுத் திட்டம்

ரஷீதா பகத்

ஒரு சுவாரஸ்யமான முன்முயற்சியில், ரோட்டரி இந்தியா எழுத்தறிவு மிஷன் (RILM) மேற்கு வங்காளத்தில் உள்ள சிறைக் கைதிகளுக்காக விரிவான எழுத்தறிவுத் திட்டம் ஒன்றை தொடங்கியுள்ளது. "கொல்கத்தாவில் உள்ள சிறந்த சமூக சேவகரான எனது நண்பர் இம்ரான் ஜாக்கி மற்றும் மேற்கு வங்காள சீர்திருத்த இல்லங்களின் ADG சஞ்சய் சிங் அவர்களின் முன்முயற்சி மற்றும் உதவியால் எட்டு சீர்திருத்த இல்லங்களில் இருக்கும் சுமார் 800 சிறைக் கைதிகளுக்கு எங்கள் முதிர்நிலை எழுத்தறிவு திட்டத்தின் மூலம் எழுத்தறிவு பரிசை RILMஆல் வழங்க முடிந்தது'' என்று முன்னாள் RI தலைவர் சேகர் மேத்தா கூறுகிறார்.

சிறைக் கைதிகளுக்கு புனர்வாழ்வு நலன்புரி நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதில் எப்பொழுதும் ஓரளவு ஆபத்து உள்ளது, ஆனால் கைதிகளுக்குப் பயனளிக்கும் புதுமையான யோசனைகளைத் தழுவுவதற்கு எப்போதும் தயாராக இருக்கும் சிங்கின் உதவியால், இந்த எட்டு சீர்திருத்த இல்லங்களில் RILM அதன் 'Each One Teach One' திட்டத்தைச் செயல்படுத்த முடிந்தது.



பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த கைதிகளைக் கலப்பதில் உள்ள சவால்கள் மற்றும் இடர்களைச் சமாளித்து, இந்த எழுத்தறிவுத் திட்டத்தின் மூலம், பல ஆன்லைன் நோக்குநிலை அமர்வுகள் நடத்தப்பட்டு, படித்த கைதிகள் சிறை வளாகத்திற்குள் எழுத்தறிவு அமர்வுகளை நடத்த ஊக்குவிக்கப்பட்டனர். RILM மாதிரியின் அடிப்படையில், 50க்கும் மேற்பட்ட படித்த சிறைக் கைதிகள், RILM-ல் உருவாக்கப்பட்ட பயனர் நட்பு கருவித்தொகுப்பின் உதவியுடன் எழுத்தறிவு இல்லாத கைதிகளை எழுத்தறிவு பெறச் செய்யும் சவாலான ஆனால் பலனளிக்கும் பணியை மேற்கொண்டனர் என மேத்தா கூறினார்.

அவர் சீர்திருத்த இல்லம் ஒன்றிற்குச் சென்று, எழுத்தறிவு இல்லாத சிறைக் கைதிகளுடன் சிறிது நேரம் உரையாடினார், அவர்களுக்கு RILM முதிர்நிலை எழுத்தறிவுத் திட்டம் மற்றும் அவர்களின் அன்றாட வாழ்வில் நம்பிக்கையைப் பெற இந்த முயற்சி எவ்வாறு உதவும் என்பதை விளக்கினார். ஆன்லைன் நோக்குநிலை அமர்வுகள் மடிக்கணினிகள்/கணினிகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்டன. சிறை அதிகாரிகளும், படித்த கைதிகளும் எழுத்தறிவு இல்லாத கைதிகளுக்கு கற்பிக்க முன்வந்தனர். அவர்களுக்கு திட்டத்தின் விவரங்கள் சொல்லப் பட்டு, இந்த திட்டத்தை எவ்வாறு செயல்படுத்துவது என்று கற்பிக்கப்பட்டது, இதனால் அவர்களின் சக கைதிகள் படிப்படியாக வார்த்தைகள் மற்றும் எண்களின் மாய உலகத்தை அணுக முடியும்.

2023–24ல் இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதை உறுதிசெய்ய RILM குழுவின் தொடர்ச்சியான முயற்சிகள் தேவைப்பட்டன. எழுத்தறிவுத் திட்டம் “சிறைச் சுவர்களுக்குள் வேரூன்றத் தொடங்க, மாற்றம் தெளிவாகத் தெரிந்தது. முதிர்நிலை எழுத்தறிவு



திட்டங்கள் நேர்மறையான வாழ்க்கையை ஊக்குவிக்கின்றன மற்றும் அது கைதிகள் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின. பல பங்கேற்பாளர்கள் மன கவலைகளிலிருந்து குறிப்பிடத்தக்க நிவாரணம் பெற்றதாகவும், அறிவு கொண்டு வரும் கட்டமைப்பு மற்றும் கவனத்தால் ஆறுதல் அடைந்துள்ளதாகவும் கூறினர். அமர்வுகள் கல்விக்கான ஒரு வெளிப்பாட்டை வழங்குவதோடு மட்டுமல்லாமல், மற்றவர்களிடையே சேருவதற்கான விருப்பத்தையும் தூண்டியுள்ளன, இது ஒரு நேர்மறையான கற்றல் சூழலை உருவாக்குவதில் திட்டத்தின் வெற்றியை எடுத்துக்காட்டுகிறது'' என்று மேத்தா மகிழ்ச்சியுடன் கூறினார்.

அதிகாரப்பூர்வ கடிதம் மூலம் உற்சாகமான பதிலில், ADG இந்த திட்டத்தை எட்டு சீர்திருத்த இல்லங்களில் நடத்தியதற்காக RILM-க்கு நன்றி தெரிவித்தார். அந்த பின்னூட்டத்தில், ''இந்த திட்டத்தின் மூலம் கைதிகள் மகிழ்ச்சியாக







பொழுதை கழிக்கிறார்கள் மற்றும் அவர்களின் மன கவலைகளை போக்குகிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் தங்கள் ஓய்வு நேரத்தில் கற்றலில் பங்கேற் பதில் மகிழ்ச்சி அடைகிறார்கள். அவர்கள் எழுத்துக்கள், எண்கள் மற்றும் வார்த்தைகளை எவ்வாறு உருவாக்குவது, அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் தந்தையின் பெயர்களை எழுதுவது, கடிதங்களில் கையெழுத்திடுவது மற்றும் சிறிய கணக்கீடுகளை செய்வது எப்படி என்பதைக் கற்றுக்கொள்கிறார்கள். மேலும் அவர்கள் சில பொதுவான அடிப்படை வார்த்தைகளையும் கற்றுக்கொண்டனர்.''

சிறை அதிகாரிகளின் கருத்துகளில் ஒரு பெரிய நேர்மறையான தாக்கம் என்னவென்றால், புதிதாக எழுத்தறிவு பெற்ற கைதிகளில் பலர் இப்போது செய்தித்தாள்கள் மற்றும் கதை புத்தகங்களைப் படிக்க முயற்சி செய்கிறார்கள்.''அவர்கள் நெறிமுறைகள் மற்றும் தார்மீக மதிப்புகள், ஒழுக்கம் மற்றும் நேரம் தவறாமை பற்றிய சில அடிப்படைப் பேச்சுக்களில் கூட ஈடுபட்டுக்கொண்டிருந்தனர், மேலும் பலர் இந்த எழுத்தறிவுத் திட்டத்தில் அதிகம் பங்கேற்க தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் கற்க வேண்டும் என்ற அவர்களின் ஆர்வம் மனதை நெகிழ செய்கிறது. பாடநெறி தொகுதி முதிர்நிலை கற்றல் கைதிகளுக்குப் பொருத்தமானது மற்றும் பாடத் திட்டம் இப்போது முழு வேகத்தில் தொடர்கிறது.''


திட்டத்தின் வெற்றி அதன் விரிவாக்கத்திற்கு வழிவகுத்தது, மேற்கு வங்கம் முழுவதும் மேலும் 18 சீர்திருத்த இல்லங்களுக்கு இந்த முயற்சியை விரிவுபடுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

“இது அதன் வரம்பை விரிவுபடுத்துவதால், இந்த திட்டம் எண்ணற்ற நபர்களுக்கு எதிர்காலத்தை மறுவடிவமைக்க உதவும், கற்றல் மற்றும் கல்வி முற்றிலும் வேறுபட்ட உலகத்திற்கான கதவுகளைத் திறக்கும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இதுவரை முதல் கட்டத்தில் பெண்கள் சேர்க்கப்படவில்லை; இரண்டாவது கட்டத்தில், சிறை அதிகாரிகள் இந்த திட்டத்தை பெண் கைதிகளுக்கும் விரிவுபடுத்துவார்கள் என்று நம்புகிறோம்'' என மேத்தா மேலும் கூறினார்.■

> *“ஒரு பெரிய நேர்மறையான தாக்கம் என்னவென்றால், புதிதாக எழுத்தறிவு பெற்ற கைதிகளில் பலர் இப்போது செய்தித்தாள்கள் மற்றும் கதை புத்தகங்களைப் படிக்க முயற்சி செய்கிறார்கள்.”*

# பால்கரின் பழங்குடியினருக்கு உதவும் மும்பை ரோட்டேரியர்கள்

ரோட்டரி செய்திக்குழு



*RC பாம்பே பே வியூ கஸ்பாடா கிராமத்தில் ஒரு கிணறு கட்டியது.*

ப ழங்குடியின கிராமங்களில் விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பது, முன்பு தண்ணீருக்காக பெண்கள் பல கி.மீ., தூரம் நடக்க வேண்டியிருந்த கிராமங்களில் கிணறுகள் அமைப்பது, கிராமப்புற பள்ளிகளில் குழந்தைகளுக்கு நவீன கல்வி உதவிகள் வழங்குவது அல்லது ஆதிவாசிகளுக்கு குழுவாக திருமணங்களை நடத்துவது என ரோட்டரி கிளப் ஆஃப் பாம்பே பே வியூ, RID 3141, அனைத்தையும் செய்துள்ளது.

2002-ல் பட்டயப்படுத்தப்பட்ட, 150 உறுப்பினர்களைக் கொண்ட இந்த சங்கம், மஹாராஷ்டிராவில் உள்ள பால்கர் மாவட்டத்தில் உள்ள விக்ரம்காட், தஹானு மற்றும் தலாசாரி பகுதிகளில் உள்ள பழங்குடி கிராமங்களில் வசிக்கும் ஆதிவாசி குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் வாழ்வில் அர்த்தமுள்ள மாற்றத்தைக் கொண்டு வர பல தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது.

ஏறக்குறைய ஒரு தசாப்த காலமாக சங்கத்தின் சமூக சேவை திட்டங்களுக்கு தலைமை தாங்கி வரும் சங்கத் தலைவர் ரஜினி பராசியா, அவர்கள் செய்த மிகவும் திருப்திகரமான திட்டங்களில் ஒன்று இந்த பகுதியில் உள்ள கிராமங்களில் கிணறுகளை அமைத்தது என கூறுகிறார். இந்த கிராமங்களில் நீர் ஆதாரங்கள் ஜனவரி மற்றும் மே இடையே வறண்டு போகின்றன. பருவமழை இந்த ஆதாரங்களை மீண்டும் நிரப்பும் வரை, பெண்கள் தங்கள் வீட்டுத் தேவைகளுக்கு



தண்ணீர் எடுக்க மலைப்பாங்கான நிலப்பரப்பில், குறைந்தது இரண்டு கி.மீ செல்ல வேண்டியிருந்தது.

மும்பையில் இருந்து சுமார் மூன்று மணி நேர தூரத்தில் உள்ள கஸ்படா கிராமத்தில் உள்ள 85 குடும்பங்களுக்கு கடந்த ஆண்டு சங்கம் எவ்வாறு கிணறு அமைத்து கொடுத்தது என்பதை அவர் விளக்கினார். "இந்த மக்கள் பிப்ரவரி முதல் ஜூன் வரை (பருவமழை வரும் வரை) தண்ணீர் பற்றாக் குறையை எதிர்கொண்டனர், மேலும் பெண்கள் தங்கள் வீடுகளுக்குத் தேவையான தண்ணீரைப் பெறுவதில் நிறைய நேரம் செலவிட்டனர்" என்கிறார் ரஜினி.

உள்ளூர் தொழிலாளர்களின் உழைப்பு மற்றும் 6.5 லட்சம் பட்ஜெட்டில், சங்கம் ஒரு கிணற்றை அமைத்தது. மலைப்பாங்கான நிலப்பரப்பு என்பதாலும் நீர் ஆதாரத்தை அடைய ஆழமாக தோண்ட வேண்டியிருந்ததாலும் அதிக செலவு ஏற்பட்டது. இந்தக் கிணற்றின் மூலம், கிராமவாசி கள் வறட்சி மாதங்களைக் கடக்க முடிந்தது, மேலும் "ஆண்டு முழுவதும் நம்பகமான நீர் ஆதாரம் இருப்பதால் குடும்பங்கள் இப்போது சமையலறை தோட்டங் களை வைத்திருக்க முடிகிறது, இது அவர்களின் ஊட்டச்சத்து மற்றும் உணவு பாதுகாப்பை மேம்படுத்துகிறது. இந்தத் திட்டம் குறிப்பாக உடல்நலம், சுகாதாரம் மற்றும் சமூகத்தின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி யுள்ளது, மேலும் பிற உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பெண்களுக்கு நேரத்தை ஒதுக்குகிறது," என்று அவர் மேலும் கூறுகிறார்.

அந்த திட்டத்தின் வெற்றியால், இந்த ஆண்டு மற்றொரு கிராமத்தில் மேலும் ஒரு கிணறு அமைக்கப்பட உள்ளது, மேலும் டிசம்பரில் இன்னொரு கிணறு நிறுவப்படும், "எங்கள் நன்கொடையாளர் எங்களுக்கு இரண்டு கிணறுகளுக்கு பணம் கொடுத்தார். அந்த பகுதியில் நெல் சாகுபடி இருப்பதால் அதிக தண்ணீர் தேவைப்படுகிறது" என்றார். இதுவரை 10 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன, மேலும் அவை அனைத்தும் வறட்சி மாதங்களில் தண்ணீரை தருகின்றன, இது பெண்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று சங்க செயலாளர் ராக்கி மேத்தா கூறுகிறார். "கிணறுகள் அமைப்பதற்காக கிராம மக்களிடமிருந்து பெற்ற உழைப்பிற்கு ஈடாக அவர்களுக்கு கேசர் மாமரக்கன்றுகளை நாங்கள் வழங்குகிறோம்" என்று அவர் மேலும் கூறுகிறார்.

கிணறு அமைக்க ரூ.4 முதல் 6.5 லட்சம் வரை செலவாகும், மலைப் பாங்கான நிலப்பரப்பு என்றால் செலவு அதிகமாக இருக்கும். அவர்கள் எப்படி பணம் திரட்டுகிறார்கள் என்று கேட்டதற்கு, ரஜினி சிரித்துக் கொண்டே, 'எங்கள் சங்க உறுப்பினர்கள் அனைவரும் தண்ணீர் தொடர்பான எந்தவொரு திட்டத்திலும் மிகவும் ஆர்வமாக உள்ளனர், மேலும் நீர் தொடர்பான திட்டங்களுக்கு நிதிப் பற்றாக்குறையை நாங்கள் சந்தித்த தில்லை" என்று கூறுகிறார்.

விவசாயிகளின் வருவாயைப் பெருக்குவது அவர்களின் மனதில் எப்போதும் இருக்கும் என்கிறார் ரஜினி. மகாராஷ்டிர மாநிலத்தில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதற்குப் பேர்போன இந்த வறட்சிப் பகுதியில் விவசாயிகள் தற்கொலை சம்பவங்களைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா என்று கேட்டதற்கு, "இல்லை, நாங்கள் வேலை செய்து வரும் எந்த பகுதியிலும் விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டதாக நாங்கள் கேள்விப்பட்டதே இல்லை. ஆனால் விவசாயிகளின் வருவாயை மேம்படுத்துவதற்கான தேவையும் வாய்ப்பும் நிச்சயமாக உள்ளது. தற்போது, பெரும்பாலான விவசாயிகள் ஒரு பயிரையே பயிரிடுகின்றனர் – முக்கியமாக நெல், அதுவும் பாரம்பரிய விவசாய முறைகளைப் பயன்படுத்துகின்றனர். எனவே இப்போது இந்த ஆதிவாசி கிராமங்களில் விவசாய வகுப்புகள் அல்லது பயிற்சி அமர்வுகளை

விளையாட்டு சாதனங்கள்
**₹9.75**
லட்சம்,

**15**
ஜில்லா பரிஷத் பள்ளிகள்

**26**
*ஸ்மார்ட் வகுப்பறைகள்*

**21**
*ஜில்லா பரிஷத் பள்ளிகள்*
**₹14.25**
*லட்சம்*

நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து வேளாண் துறையில் பணிபுரியும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் கலந்துரையாடுகிறோம். அவர்களின் வருமானத்தை அதிகரிக்கக்கூடிய நவீன விவசாய முறைகள் பற்றிய தகவல்களையும் அறிவையும் அவர்களுக்கு வழங்க விரும்புகிறோம்'' என அவர் கூறுகிறார்.

குறைந்த வருமானம் ஈட்டும் விவசாயிகளுக்கு உதவ மற்றும் அவர்களின் பண்ணைகளில் இருந்து வரும் அவர்களின் வருமானத்தை மேம்படுத்த சங்கம் விவசாயிகளுக்கு சுமார் 2,000 கேசர் மாமர மற்றும் பிற மரக்கன்றுகளை விநியோகித்துள்ளது. மேலும் இந்த

**2,000**
மா கன்றுகள்
பால்கர் கிராமங்களில்

**1,000**
மரக்கன்றுகள்
குஜராத் மாநிலத்தில்

*ஒரு ஜில்லா பரிஷத் பள்ளியில் சங்கம் நிறுவிய ஊஞ்சலில் விளையாடும் குழந்தைகள்.*






சங்கம் ஏற்பாடு செய்த 35 பழங்குடி ஜோடிகளின் குழு திருமணம்



சத்தான பழத்தை உட்கொள்வதன் மூலம் ஊட்டச்சத்து அளவையும் மேம்படுத்துகிறது.

ரூ.3 லட்சத்துக்கும் அதிகமான நன்கொடை அளித்த மற்றொரு நன்கொடையாளர், குஜராத்தின் ஐந்து மாவட்டங்களில் உள்ள 24 தொகுதிகளில் உள்ள சிறு விவசாயிகளுக்கு 1,000 கேசர் மாமரக்கன்றுகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டார். “சுற்றுச் சூழல் நிலைத்தன்மையை ஊக்குவித்தல், உள்ளூர் சுற்றுச்சூழல் அமைப்புகளை ஆதரித்தல் மற்றும் மாம்பழ சாகுபடியின் மூலம் பொருளாதார வாய்ப்புகளை வழங்குதல் என இவை மட்டுமல்லாமல், சில கிராமங்களில் உள்ள பழங்குடியின மக்களிடையே ஊட்டச்ச த்து குறைபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கு பங்களிப்பதும் இதன் குறிக்கோள் ஆகும்.”

15 ஜில்லா பரிஷத் பள்ளிகளில் ரூ.9.75 லட்சம் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்களை வழங்கி, கல்வி தொடர்பான திட்டங்களையும் சங்கம் செய்துள்ளது. ஜூலை மாதம், ஃபிட் அண்ட் ஃபன் என்ற திட்டத்தின் மூலம், பால்கரில் உள்ள தஹானு மற்றும் தலாசாரி தாலுகாக்களின் தொலைதூரப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன, இதன் மூலம் 2,050-க்கும் அதிகமான தாழ்த்தப்பட்ட பழங்குடி மாணவர்கள் பயனடைகிறார்கள். இந்த திட்டத்தின் நோக்கம் “வெளிப்புற செயல்பாடுகளை ஊக்குவிப்பது, உடல் நலனை ஆதரிப்பது மற்றும் மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை மேம்படுத்துவதாகும்” என்று ரஜினி மேலும் கூறுகிறார்.

மற்றொரு திட்டத்தில் 21 ஜில்லா பரிஷத் பள்ளிகளுக்கு 26 ஸ்மார்ட் வகுப்பறைகள் பரிசளிக்கப்பட்டது மற்றும் டிஜிட்டல் கற்றல் கருவிகளுடன் கூடிய சமூக நூலகம் ஒன்று அமைக்கப்பட்டது. ரூ.14.25 லட்சம் மதிப்பீட்டில், 26 வகுப்பறைகளில் 50” ஸ்மார்ட் டிவிகள், இ-லேர்னிங் சாப்ட்வேர் கிட்கள் போன்றவை இந்தியாவின் பெரும்பாலான கிராமப்புறங்களை பாதிக்கும் ஆசிரியர்-மாணவர் விகிதாச் சாரத்தின் சவாலை எதிர் கொள்ளவும், குழந்தைகளுக்கு மிகவும் ஊடாடும் மற்றும் ஈடுபாட்டுடன் கூடிய கற்றல் சூழல் வளர்ப்பதற்காகவும் பொருத்தப் பட்டுள்ளன என்கிறார் ராக்கி.

“மேலும், கடந்த எட்டு ஆண்டு களில், தொலைதூரப் பகுதிகளில் இருந்து வரும் மாணவர்களுக்கு சுமார் 300 சைக்கிள்களை விநியோகித்துள்ளோம், இதனால் அவர்கள் பள்ளிக்குச் செல்வதற்கு குறைந்த நேரத்தை செலவிடவும், கற்றலுக்கு அதிக நேரத்தை செலவிடவும் முடிகிறது” என்று அவர் மேலும் கூறுகிறார்.

மின் விநியோகம் ஒழுங்கற்ற பகுதிகளில் சோலார் விளக்குகளை வழங்குவது மற்றொரு திட்டம்; “சில கிராமங்களில், பல வீடுகளில் விளக்குகள் இல்லை, இத்திட்டம் மூன்று மின் விளக்குகளை அங்கே ஒளிரச் செய்கிறது.”

ஒரு மின்விசிறியும் சேர்த்து தருவீர்கள் என நான் நம்புகிறேன் என நான் கேட்க, அதற்கு பதிலளித்த ரஜினி, “நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்; பெரும்பாலான வீடுகளில் மின் விசிறிகள் இல்லை, எனவே யாராவது மின்விசிறியைக் கேட்டால், நாங்கள் இல்லை என்று சொல்வதில்லை. நாங்கள் எப்படியாவது நிதியைத் திரட்டிவிடுகிறோம்!

கடைசியாக ஒரு மகிழ்ச்சியான திட்டம், சங்கம் சுமார் 35 பழங்குடி ஜோடிகளுக்கு ஒரு குழு திருமணத்தையும் ஏற்பாடு செய்துள்ளது. திருமண பரிசாக, புதுமணத் தம்பதிகளுக்கு பல வீட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டன. “அவ்வாறு செய்வதற்கு, நாங்கள் எங்கள் சங்கத்திற்கு வெளியே உள்ள உறுப்பினர்களையும் அணுகினோம்.

இந்த புதுமணத் தம்பதிகளுக்கு வீட்டுப் பொருட்களைக் கொடுக்க கொஞ்சம் பணம் சேகரிக்கவேண்டும் என்று RC மும்பை ராயல்ஸின் உறுப்பினரான என் மைத்துனியிடம் நான் சொன்னபோது, அவர் அதை அவர்களின் வாட்ஸ்அப் குழுவில் வெளியிட்டார். உடனடியாக பதில் கிடைத்தது; மக்கள் அடித்துபிடித்துக் கொண்டு பணம் கொடுத்தனர்; ஒருவர் பாத்திரங்களைக் கொடுக்க விரும்பினார், மற்றொருவர் மளிகைப் பொருட்களை வழங்க விரும்பினார்'' என்று சிரிக்கிறார் ரஜினி.

புதுமணத் தம்பதிகளுக்கு பரிசுகளை வாங்க மும்பை ராயல்ஸ் உறுப்பினர் ஒருவர் ஷாப்பிங் சென்றபோது நடந்த ஒரு சம்பவத்தை அவர் விவரிக்கிறார். அப்போது அவருடைய கணவனும் அவருடன் சென்றுள்ளார்; "எங்களுக்குத் தேவையான பொருட்களின் பட்டியலை நாங்கள் அவரிடம் கொடுத்தோம், ஆனால் அவர், "இப்போது என் கணவர் இங்கே இருக்கிறார், எல்லாவற்றிற்கும் அவர் பணம் செலுத்துவார், அதனால் நான் இன்னும் நிறைய வாங்கப் போகிறேன்! என்றார். ஒரு நல்ல காரியத்திற்கு உதவ பல நல்ல மனிதர்கள் இருப்பதால், இது போன்ற கதைகளைக் கேட்பது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது!''

ஒரு பெண் 25 செட் இமிடேஷன் நகைகளை கொடுத்ததாகவும், அதை அணிந்திருந்த அனைத்து மணப் பெண்களும் மிகவும் அழகாக இருந்ததாகவும் ராக்கி கூறுகிறார்.

இன்னர் வீல் கிளப்பும் அவர் களுக்கு உதவுவதாக தலைவர் மேலும் கூறுகிறார்; எங்கிருந்து வேண்டுமானாலும் பணம் வரட்டும்; எங்கள் சேவைத் திட்டங்களைச் நாங்கள் செய்ய வேண்டும் என்பதே எங்கள் உறுதிமொழி. ■



சங்கத் தலைவர் ரஜ்னி பராசியா (இடமிருந்து மூன்றாவது) மற்றும் செயலாளர் ராகி மேத்தா (இடது) மாணவர்களுடன் மாங்கன்றுகளை நட தயாராக உள்ளனர்.

# இஸ்தான்புல்லில் ரோட்டரி தலைமைத்துவ அமைதி மாநாடு




பிப்ரவரி 20–22, 2025-ல் இஸ்தான்புல், துருக்கியில் RI தலைவர் ஸ்டெஃபனி அர்ச்சிக் தலைமையிலான 2025 ரோட்டரி தலைமைத்துவ அமைதி மாநாடு நடைப்பெற உள்ளது, இதில் இரு துருவ உலகில் அமைதி; தொழில்நுட்பம், ஊடகம் மற்றும் அமைதியை கட்டி யெழுப்புதல்; அமைதியைக் கட்டியெழுப்புவதில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள்; மற்றும் சமாதானத்தை நீடிக்கச் செய்தல் போன்ற தலைப்புகளைப் பற்றி விவாதிப்பதன் மூலம் ரோட்டரி சமூகம் மற்றும் கூட்டாளர்கள் அமைதியை வளர்ப்பதில் கவனம் செலுத்த உதவும்.

இஸ்தான்புல்லில் உள்ள பஹசெஷிர் பல்கலைக் கழகத்துடன் இணைந்து புதிய ஓட்டோ மற்றும் ஃபிரான் வால்டர் ரோட்டரி அமைதி மையம் தொடங்கப்படுவதையும் இந்த மாநாடு அங்கீகரிக்கும்.

மூன்று நாள் மாநாட்டில் முக்கியப் பேச்சாளர்கள், குழு விவாதங்கள் மற்றும் பிரேக்அவுட் அமர்வுகள் ஆகியவை அடங்கும், அவை ரோட்டரியர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் அமைதிக்காக வாதிடக்கூடிய பல வழிகளை முன்னிலைப் படுத்தும் – உள்நாட்டிலும் உலக அளவிலும் அமைதியைக் கட்டியெழுப்புவது பற்றிய கதைகள், நுண்ணறிவுகள் மற்றும் யோசனைகளைப் பகிர்ந்து கொள்வது; மற்றும் நமது சமூகங்களுக்குள்ளும் அதற்கு அப்பாலும் அமைதியை மேம்படுத்துவது பற்றிய அர்த்தமுள்ள உரையாடல்களை வளர்ப்பது.

அமைதி மாநாட்டிற்குப் பதிவு செய்து உங்கள் தங்குமிடங்களை முன்பதிவு செய்ய *www.rotary.org/istanbul25*-ஐப் பார்வையிடவும்.

**மின்னஞ்சல்:** *Istanbul25rotary.org*

**மாநாட்டு இடம்:** ஹில்டன் இஸ்தான்புல் போமோண்டி ஹோட்டல் மாநாட்டு மையம். ■

# லக்கிம்பூரில் அன்னபூர்ணா மையம்

**கிரண் ஜெஹரா**

உத்தரப்பிரதேசத்தின் லக்கிம்பூர் மின்சாரத் துறையைச் சேர்ந்த முன்னாள் நிர்வாகப் பொறியாளர், ஹரி கிருஷ்ணா திரிபாதி மற்றும் அர்ப்பணிப்புள்ள சமூக சேவகரான அவரது மனைவி மதுலிகா ஆகியோருக்கு காலை நேரம் என்பது வழக்கமானதல்ல. விடியற்காலையில், லக்கிம்பூரில் நூற்றுக்கணக்கான தினசரி கூலித் தொழிலாளர்களின் உயிர்நாடியான ரோட்டரி அன்னபூர்ணா ரசோயியை (சமையலறை) நடத்துவதற்கு இந்த ரோட்டேரிய தம்பதியினர் தயாராகி வருவர்.

கடுமையான வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்த ஒரு ரிக்ஷாக்காரருடன் தற்செயலாக உரையாடியதன் மூலம் ரசோய் பற்றிய எண்ணம் அவருக்கு தூண்டடப்பட்டது, அந்த ரிக்ஷாக்காரர் உணவு வாங்க முடியாததால் அடிக்கடி உணவைத் தவிர்ப்பதாக ஒப்புக்கொண்டார். திரிபாதிகள் அந்த மனிதனின் அவல நிலையைக் கண்டு மனம் வருந்தினர், அப்பகுதியில் அன்றாடக் கூலித்தொழில் செய்பவர்களுக்கு மலிவு விலையில் சத்தான உணவை வழங்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தனர். அவர்கள் தங்கள் சங்கத்தில் இந்த யோசனையை முன்வைத்தனர். 2021-ல், கோவிட் தொற்றுநோய் இரண்டாவது முறையாகத் தாக்கியபோது திரிபாதி தம்பதியினரால் வழிநடத்தப்பட்ட RC லக்கிம்பூர் கெரி, RID 3120 மூலம், “வெறும் 10 ரூபாய்க்கு சத்தான உணவை வழங்கும் சமுதாய சமையலறை பற்றிய எளிய மற்றும் மாற்றத்தக்க யோசனையை செயல்படுத்தினோம்” என்கிறார் ஹரி கிருஷ்ணா திரிபாதி.



ரிக்ஷா இழுப்பவர்களுக்கு 10 ரூபாய் சாப்பாடு.

“ஒரு நாளைக்கு 500 ரூபாய் வருமானம் ஈட்டுபவர்களுக்கு, ஒரு தாபாவில் உணவுக்காக ரூபாய் 80 அல்லது அதற்கு மேல் செலவு செய்வது கட்டுப்படியாகாது. 10 ரூபாய் உணவு என்பது உணவை விட பெரியது, அது நிவாரணத்தையும் பாதுகாப்பு உணர்வையும் தருகிறது” என்று அவர் மேலும் கூறுகிறார்.

ரோட்டரி அன்னபூர்ணா ரசோய், ரோட்டரி உறுப்பினர்கள் மற்றும் தனிப்பட்ட பங்களிப்பாளர்களின் சிறிய நன்கொடைகளுடன் சிறிதாகத் தொடங்கியது. பெரிய நன்கொடைகள் பலருக்கு கடினமாக இருக்கலாம் என்பதைப் புரிந்துகொண்ட ஹரி கிருஷ்ணாவும் மதுலிகாவும் தங்களால் இயன்றதைக் கொடுக்கும்படி மக்களை ஊக்குவித்தனர். இன்று, உணவு சமைக்கும் இரண்டு பெண்களின் சம்பளம் உட்பட ரசோயின் மாதாந்திர செலவு தோராயமாக ரூ.1 லட்சம். ஒவ்வொரு நாளும், அவர்கள் 30–35 கிலோ அரிசி மற்றும் 10 கிலோ பருப்பு சமைத்து, இந்த அத்தியாவசிய சேவையை நம்பியிருக்கும் சுமார் 300 தினசரி வாடிக்கையாளர்களுக்கு உணவளிக்கிறார்கள்.

“நான் ஒரு நாளைக்கு சுமார் 500 ரூபாய் சம்பாதிக்கிறேன்” என்கிறார் ரசோயில் அடிக்கடி உணவருந்தும் முகேஷ் (55), 10 ரூபாய் சாப்பாடு மூலம், நான் இன்னும் அதிகமாகச் சேமித்து அவர்களுக்காக அதிகம்






*மதுலிகா திரிபாதி (வலது) அவரது மாணவர்களின் கைவினைப் பொருட்கள் கண்காட்சியில்.*

செய்ய முடியும். இந்த உணவு எனது வருமானத்தை நீட்டிக்க உதவுகிறது.

"உணவு எளிமையானது ஆனால் ஆரோக்கியமானது'' என்கிறார் மதுலிகா. ரொட்டி மற்றும் சப்ஜி, பருப்பு, ராஜ்மா அல்லது கதியுடன் கூடிய அரிசி ஆகியவை தினசரி உணவாகும். ''தீபாவளி மற்றும் நவராத்திரி போன்ற சிறப்பு சந்தர்ப் பங்களில், ரசோய் ஒரு படி மேலே சென்று, பண்டிகை உணர்வைக் குறிக்க பல்வேறு உணவுகள், பழங்கள் மற்றும் இனிப்புகளை வழங்குகிறது'' என்று அவர் மேலும் கூறுகிறார். ரசோய் மூடப்பட்ட பிறகு, தாமதமாக வருபவர்கள் கூட பசியுடன் இருக்கக்கூடாது என்பதை மதுலிகா உறுதிப்படுத்துகிறார். இன்னும் பசியுடன் இருக்கும் எவருக்கும் உணவளிக்க அவர் தனது சொந்த சமையலறையில் கூடுதல் உணவைத் தயாரிக்கிறார்.

## தொழில் பயிற்சி முயற்சி

திரிபாதி தம்பதியினரால் நடத்தப் படும் சங்கல்ப் பொழுதுபோக்கு வகுப்புகள், நிதி சுதந்திரத்திற்கான அத்தியாவசிய திறன்களை பெற இளம் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. RID 5610, USA-வின் உலகளாவிய மானிய ஆதரவின் மூலம் 25 தையல் இயந்திரங்கள் பெறப்பட்டு, இந்த மையத்தில் தையல், எம்பிராய்டரி, மெஹந்தி, கைவினை மற்றும் அழகு பராமரிப்பு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சமீபத்தில், இந்த மையம் மாணவர்களின் படைப்புகளைக் கொண்ட ஒரு கலைக் கண்காட்சியை நடத்தியது, அதன் வருமானம் மையத்தின் வளர்ச்சிக்கு சென்றது.

ரசோய் மற்றும் தொழிற்கல்வி மையம் ஆகிய இரண்டின் கணக்குகள் மற்றும் தளவாடங்களை நிர்வகிப்பதில் தனது கணவரின் "அமைதியான மற்றும் நிலையான இருப்பை" மதுலிகா பாராட்டுகிறார், "கட்டணங்களில் தாமதம் ஏற்பட்டால் அல்லது அவசரமாக பொருட்கள் தேவைப்பட்டால், அவர் அடிக்கடி தனது சொந்த பணத்தை செலவிடுவார். அவர் இல்லாமல் நாங்கள் இவ்வளவு தூரம் வந்திருக்க முடியாது.''

சமீபத்தில், PRIP சேகர் மேத்தா லக்கிம்பூருக்குச் சென்று ரோட்டரி ரசோய் மற்றும் சங்கல்ப் பொழுது போக்கு வகுப்புகள் இரண்டையும் பார்வையிட்டார்.■



*ரோட்டரி ரசோயில் PRIP சேகர் மேத்தா உணவு பரிமாறுகிறார். IPDG சுனில் பன்சால் (வலமிருந்து இரண்டாவது) மற்றும் மதுலிகா ஆகியோரும் காணப்படுகிறார்கள்.*

# பசுமைக் களத்தில் ரோட்டேரியன்கள்

ரஷீதா பகத்

தொடர்ந்து கொடுக்கும் பரிசைக் கொடுங்கள் இதுதான் பெங்களூரு கொரமங்களா ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜேனட் யெக்னேஸ்வரன் நிறுவியுள்ள அறக்கட்டளையின் குறிக்கோளாகும். 20 ஆண்டுகளுக்கு முன்பு இதே சங்கத்தில் ரோட்டேரியனாக இருந்து மறைந்த கணவர் ராஜானெட் யக்னேஸ்வரன் நினைவாக இது அமைக்கப்பட்டது.

இங்கு குறிப்பிட்டுள்ள பரிசு ஒரு மரம். அவர் மேற்கொண்ட முயற்சிகள் மூலம் கடந்த இருபது ஆண்டுகளில் பெங்களூரு மற்றும் இதர கர்நாடக மாநிலம் மற்றும் தமிழகத்தில் 97,000 மரங்கள் நடப்பட்டுள்ளன. நமது பூமியை பசுமையாக்கி, வருங்கால சந்ததியினருக்காக சுற்றுச்சூழலை பாதுகாப்பது மட்டுமின்றி, காடுவளர்ப்பு, இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி, தரிசு நிலத்தை விளைநிலமாக்குதல் மூலம் நடப்பட்ட இந்த மரங்கள் ஆயிரக்கணக்கான மக்களுக்கு நம்பிக்கையளித்துள்ளது.

இந்தியாவில் மீண்டும் காடுகளை உருவாக்கும் அவரது திட்டத்தின் மூலம், இந்த பணியானது போஷ் இந்தியா போன்ற நிறுவனங்களுடன் கூட்டுறவை உருவாக்க உதவியது. இது கர்நாடகத்தின் ஆனேக்கல் பிராந்தியத்தில் 30 கிராமங்களில் செயல்பட்டு வரும் ஒரு சமூக வளர்ச்சி மையத்தின் பொறுப்பாளராக அவரை நியமித்துள்ளது. ஏழைக் குழந்தைகளுக்கு கணினி கல்வி, மகளிர் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள், பூமியை பசுமையாக்குதல் என அவரது மையத்தின் பணிகள் தொடர்கின்றன.

சமூகப் பணிகளில் அவருக்கு இருந்த ஆழ்ந்த ஈடுபாடு மற்றும் உள்ளூர் சமூக மக்களின் தேவைகளை கண்டறிவது மற்றும் போஷ் இந்தியா இறக்கட்டளை பிரதிநிதிகளுடன் அவர் நடத்திய உரையாடல், அவரது சங்கத்தின் மூலம் மருத்துவ சுகாதார திட்டங்களை செயல்படுத்த வழிவகுத்தது. "பெங்களூருவிலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள கௌரனஹள்ளி கிராமத்தில் சுகாதார வசதிகள் இல்லாதது குறித்து அவர்களிடம் கூறினேன். உடனே எங்கள் சங்கத்துடன் இணைந்து கிராமத்தில் மிகப் பெரிய மருத்துவ முகாம் நடத்த அவர்கள் முன்வந்தனர்"




*Trees for Free அணி அதன் நிறுவனர் ஜேனட் யெக்னேஸ்வரன் (வலது) உடன்.*

என்றார். 2017–18-ல் சங்கத்தின் தலைவராக வருவதற்கு முன்பு, சங்கத்தின் சமூக சேவைக்கான இயக்குநராக அவர் ஏழு ஆண்டுகள் பணியாற்றியதால் கிராமப்புறங்களில் மருத்துவ முகாம்களை நடத்துவதற்கு போதிய அனுபவம் இருந்தது.

132 கிராம மக்கள் பங்கேற்ற இந்த மருத்துவ முகாமில் பல், கண் மற்றும் இதர மருத்துவப் பிரச்னைகளை மருத்துவக் குழுவினர் கண்டறிந்து சிகிச்சை அளித்தனர். சிலருக்கு பற்களில் இருந்த ஓட்டை அடைக்கப்பட்டது. சிலருக்கு பிரச்னை கொடுத்த பற்கள் பிடுங்கப்பட்டன. மேலும் சிலருக்கு பற்கள் சுத்தம் செய்யப்பட்டன. கண் பார்வைக் குறைபாடுள்ளவர்களுக்கு பரிசோதனை நடத்தப்பட்டு 40 பேருக்கு கண் கண்ணாடிகள் பரிந்துரைக்கப்பட்டன. அவர்களுக்கு சங்கத்தின் மூலம் இலவசமாக கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. ஐந்து பேருக்கு கண்புரை நோய் இருப்பது கண்டறியப்பட்டு, அவர்கள் கண் அறுவைச்சிகிச்சை செய்துகொள்ளவும் சங்க உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று அவர் கூறினார்.

இந்த மருத்துவ முகாமிற்காக ரூ.50,000 வரை செலவழிக்கப் பட்டது. இந்த தொகையை சங்கமும் அறக்கட்டளையும் பகிர்ந்து கொண்டன. பெரும்பாலான வேலைகளை தொழில்சார்ந்த வல்லுநர்கள் தாமாகவே முன்வந்து செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

“ஆனால், இத்திட்டத்திற்கான இதர செலவுகளும் முக்கியமானவை. அவற்றில் முக்கியமானது முகாமுக்கான ஏற்பாடுகள். போஷ் இந்தியா அறக்கட்டளையைச் சேர்ந்த தன்னார்வல தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று மருத்துவ முகாமுக்கு வருமாறு மக்களை அழைத்தனர். நோயாளிகளுக்கு இரத்தக் கொதிப்பு அளவீடு செய்தல், மருந்து-மாத்திரைகள் கொடுத்தல், நோயாளிகளின் விவரங்களைப் பதிவு செய்தல் போன்ற விஷயங்களில் அவர்கள் மருத்துவர்களுக்கு உதவியாக இருந்தனர். இந்த வகையான சமூக சேவைகளை அவர்கள் ஆர்வமுடன் செய்தனர். ஏனெனில் அவர்களுக்கு இது புதுமையானதாகும். மேலும் இது அவர்கள் எதிர்காலத்தில் ரோட்டேரியன்களாக உருவாவதற்கும் ஊக்கமளிக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஏனெனில் ரோட்டேரியன்கள் செய்யும் வேலைகளைத்தான் அவர்கள் இப்போது செய்துள்ளனர்” என்கிறார் ஜேனட்.

உள்ளூர் பஞ்சாயத்துத் தலைவரிடம் அவர் பேசிய போது, அந்த கிராமத்தில் 100 குழந்தைகள் படிக்கும் ஒரு ஆரம்பப் பள்ளியில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பல இருப்பதை தெரிந்துகொண்டார். “அந்தப் பள்ளிக்கு கழிப்பறைகள் தேவை, மேலும் கட்டடம் சீரமைக்கப்பட வேண்டும் என்பதை புரிந்துகொண்டார். இதற்கு மட்டும் ரூ.4 லட்சம் செலவாகும். பள்ளி வகுப்பறையில் மாணவர்களுக்கு போதுமான பெஞ்ச், மேஜைகள் இல்லை. அந்த பகுதியில் உள்ள பல பள்ளிகள் சீரமைக்கப்பட வேண்டும் என்று பஞ்சாயத்து உறுப்பினர்கள் அவரிடம் தெரிவித்தனர். 500 மாணவர்கள் படிக்கும் கன்னடம், உருது மொழிப் பள்ளியில் கழிப்பறைகள் மோசமான நிலையில் இருந்தன. சில கட்டடங்கள் பழுதடைந்து இருப்பதையும் சுட்டிக் காட்டினர்”.

ஜேனட், இந்தப் பகுதியில் உள்ள சுமார் 30 பள்ளிகளுக்குச் சென்று என்னென்ன சீரமைப்பு பணிகள் உள்ளன, அதற்கு எவ்வளவு செலவாகும் என்பது போன்ற விவரங்களைச் சேகரிக்க திட்டமிட்டுள்ளார். “அந்த தாலுகாவில் பழுதடைந்த நிலையில் உள்ள பள்ளிக் கட்டடங்கள் பற்றியும் அவற்றை சீரமைக்க வேண்டியதன்



*ஜேனட் யெக்னேஸ்வரன், முன்னாள் தலைவர், RC பெங்களூர் கோரமங்களா, 15 வருடங்களுக்கு முன் அவர் நட்ட மரத்துடன்.*



“ ஜேனட் யெக்னேஸ்வரன் மேற்கொண்ட முயற்சிகள் மூலம் கடந்த இருபது ஆண்டுகளில் பெங்களூரு மற்றும் இதர கர்நாடக மாநிலம் மற்றும் தமிழகத்தில் 97,000 மரங்கள் நடப்பட்டுள்ளன.



*கோலார் மாவட்டம் கடேனஹள்ளி கிராமத்தில் உள்ள உணவு காட்டில் ஒரு மரக்கன்று நடப்படுகிறது.*

அவசியத்தையும் எங்கள் மருத்துவக் குழுவினர் எடுத்துரைத்துள்ளனர். இது தொடர்பான கட்டுரை "ரோட்டரி நியூஸ்" இதழில் வெளிவந்தால், அதன் மூலம் நமது பகுதியில் உள்ள இதர ரோட்டரி சங்கங்கள், கார்ப்பொரேட் நிறுவனங்கள் மற்றும் வேறுசிலரின் கண்ணில் பட்டு அவர்களின் நிதிப்பங்களிப்பு மூலம் பழுதடைந்த பள்ளிகளைச் சீர்செய்ய முடியும் என நம்புகிறோம். மேலும் கல்வி வசதி செய்துகொடுப்பதன் மூலம் கிராம சமூகத்தினர் மற்றும் பள்ளிக் குழந்தைகள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என நினைக்கிறோம். கிராமப்புறங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் கணிசமான திட்டங்களுக்கு வாய்ப்புள்ளது" என்று அவர் மேலும் கூறினார்.

### பசுமையாக்கும் முயற்சிகள்

இதற்கிடையே, பூமியை பசுமையாக்கும் அவரது முயற்சிகள் தொடரும். அவரது அறக்கட்டளை பல்வேறு பிரிவுகளில் பணிகளை மேற்கொண்டுள்ளன. முதல்கட்டமாக வேளாண் காடு வளர்ப்பு திட்டத்தின் மூலம் குறு விவசாயிகள் நிலங்களைச் சுற்றி 10 பழமரங்கள் நடப்பட்டுள்ளன. மா, தென்னை உள்ளிட்ட மரங்களை நட்டு அவற்றை சாகுபடி செய்து விவசாயிகள் அதிக வருமானம் பெறலாம்.

மற்றொரு திட்டத்தின்கீழ் இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மரங்கள் நடப்படுகின்றன. "கஜா" புயலில் தென்னை மரங்களை இழந்த விவசாயிகளுக்காக 2019 ஆம் ஆண்டு தஞ்சாவூரில் 2,000 தென்னை மரங்களும் முன்னதாக நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட காவிரி நதிப்படுகையில் 1,000 பழ மரங்கள் மற்றும் வன மரங்களையும் நட்டுள்ளோம்" என்கிறார் சூற்றுச்சூழல் ஆர்வலரான ஜேனட்.

ஒரு சுவாரஸ்மான திட்டம் அவரது அறக்கட்டளையால் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதாவது விவசாயிகளால் தரிசு நிலம் என கைவிடப்பட்ட 6 ஏக்கர் நிலத்தில் உணவுப் பயிர்களை விளைவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதுதான். அவற்றுக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. கிராமங்களில் மரங்களை நடும்போது போதிய உள்கட்டமைப்பு வசதி இல்லாததால் விவசாயிகள் சில இடங்களை தரிசாக விட்டிருந்தனர். மேலும், இடைத்தரகர்கள் தலையீடு காரணமாக நிலையான விவசாயம் மற்றும் அரசு விவசாயத் திட்டங்கள் பற்றிய போதிய விழிப்புணர்வு விவசாயிகளிடம் இல்லாமல் இருந்ததால் ஏராளமான நிலங்கள் தரிசாக இருப்பதை நாங்கள் அறிந்து கொண்டோம்.

எனவே கர்நாடக மாநிலம், கோலார் மாவட்டத்தில் உள்ள கடனேஹள்ளி கிராமத்தில், விவசாயிகளால் கைவிடப்பட்ட நிலத்தில் உணவு தரும் மரங்கள்

நடப்பட்டன. ‘‘நாங்கள் அந்த இடத்தை பண்படுத்தி, சுற்றி வேலி அமைத்து, ஆழ்துளைக் கிணற்றை தூர்வாறி புதுப்பித்து தண்ணீரை சேமிக்கும் வசதியை ஏற்படுத்தினோம். நிலத்தை உழுது சமன் செய்தோம். காவலாளிக்கான கொட்டகையை சீரமைத்தோம். மேலும் சொட்டு நீர் மற்றும் தெளிப்பான்கள் மூலம் நிலத்திற்கு பாசனம் செய்தோம்’’.



பல்வேறு வகையான பழ மரங்கள் மற்றும் வண்ணப் பூச்செடிகள் நடப்பட்டு, தேனிக்கள் பெட்டியும் வைக்கப் பட்டன. பழ மரங்களுக்கு இடையில் உள்ள பகுதியில் காய்கறிகள், கீரை வகைகள் பயிரிடப்பட்டு வருகின்றன. விவசாயிகள் மற்றும் விவசாயத்தில் ஆர்வமுள்ளவர் களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பயிற்சி அளிக்கவும் ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையாக இது உருவாக்கப்பட்டுள்ளது. பெங்களூருவில் உள்ள எக்ஸ்ஐஎம்இ (XIME) கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் கார்ப்பொரேட் நிறுவனங்களின் தன்னார்வலர்களும் அறக் கட்டளையின் பசுமை முயற்சி களுக்கு உடலுழைப்பைத் தருகிறார்கள்.



*கவுரேனஹள்ளி கிராமத்தில் பல் பரிசோதனை முகாம்.*

ராணுவ ஆடை வடிவமைப்புக் கழகம், பள்ளிகள், கல்லூரிகள், குடியிருப்புகள் என பல இடங்களில் ஒரு சாம்பியனின் 20 ஆண்டுக்கால முயற்சியால் 97,000 மரங்கள் நடப்பட்டு வளர்ந்து வருகின்றன. மரங்கள் நடுவதற்கு இரண்டு கடுமையான விதிகளை பின்பற்றி வருவதாக ஜேனட் கூறுகிறார். ‘‘நாங்கள் நட்ட மரங்களை கவனிக்க மக்கள் இருக்கும் இடங்களுக்கு மட்டுமே செல்கிறோம். மற்றொன்று மரங்கள் வளர்வதற்கு போதுமான நீராதார வசதிகள் இருக்கிறதா என்று பார்க்கிறோம். நாங்கள் நடும் ஒவ்வொரு மரத்தையும் கண்காணித்து வருகிறோம்’’. ஜேனட் மற்றும் அவரது குழுவினர் நட்ட மரங்கள் இந்திய ராணுவம், விமானப்படை மற்றும் ரயில் வேக்கு சொந்தமான இடங்களிலும், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு கட்டடங்களிலும், மரங்களைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்கும் வீட்டுவசதி சங்கங்கள் உள்ள குடியிருப்பு பகுதிகளிலும் செழித்து வளர்ந்து வருகின்றன.■


Rotary

DISCOVER, ELEVATE, INSPIRE
Rotary Institute
@ GOD'S OWN COUNTRY
KOCHI 2024
ZONES 4,5,6,7 | 6-8 DECEMBER 2024

THE MAGIC OF ROTARY



*God's Own Country*
*beckons you to witness*
**DIVERSITY IN ACTION**







**RI President**
**Stephanie A. Urchick**

**RI Director Anirudha Roy Chowdhury**
**& Shipra Roy Chowdhury**
Convenor

**PDG Dr. John Daniel**
**& Dr. Meera John**
Chairman,
Rotary Institute Kochi

## See you there!

**6th - 8th December 2024**
**Grand Hyatt Kochi Bolgatty**

Rotary PEOPLE OF ACTION

# ஆந்திர, தெலங்கானா வெள்ள நெருக்கடியில் உதவிய ரோட்டரி




ஜெய்ஸ்ரீ

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பரவலாகப் பெய்த பலத்த மழையால் ஆந்திரமும் தெலங்கானாவும் வெள்ளக்காடாக மாறின. ஆகஸ்ட் 30-ம் தேதி தொடங்கிய மழை, தீவிரமடைந்து செப்டம்பர் முதல்வாரத்தில் ஆந்திர மாநிலத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது. மாநிலத்தின் வருடாந்திர மழையில் 27 சதவீதத்துக்கு மேல் 48 மணி நேரத்தில் பதிவானதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவிக்கிறது. பலத்த சூறாவளி எதிரொலியாக இந்த தீவிர வானிலை நிகழ்வு இருந்ததாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. அரபிக் கடல் மற்றும் இந்தியாவின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட நிலவெப்பம் இரண்டின் காரணமாக ஈரப்பதம் உருவானது. இதனால் இரண்டு மாநிலங்களும் ஆகஸ்ட் 31-ம் தேதி 24 மணி நேரத்தில் வியக்கத்தக்க வகையில் 500 மி.மீ. மழையை பெற்றது.

வளிமண்டல சுழற்சியால் ஏற்பட்ட பருவநிலை மாற்றம் (காற்றழுத்த தாழ்வுநிலை) காரணமாக பெருமழை பெய்தது. இது பலவீனமடையாமல் நிலைத்து நின்று மெதுவாக நகர்ந்து சென்றதால் குறுகிய காலத்தில் பலத்த மழை கொட்டியது. இதன் விளைவாக, இந்த இரண்டு மாநிலங்கள் தவிர, ஒடிசா மற்றும் குஜராத் மாநிலங்கள் செப்டம்பர் 12 ஆம் தேதி வரை பலத்த மழையை எதிர்கொள்ள நேரிட்டது.

நதிகளில் நீர்மட்டம் வேகமாக அதிகரித்ததாலும், அணையிலிருந்து அதிக நீர் வெளியேற்றப்பட்டதாலும் நெருக்கடி முற்றியது. கிராமங்களில் வெள்ளநீர் சூழ்ந்ததால் அத்தியாவசியப் பொருள்களை கொண்டு செல்ல முடியவில்லை. மேலும் கிராம மக்களை பாதுகாப்பாக அங்கிருந்து வெளியேற்ற வேண்டியிருந்தது. ஆந்திரத்தில் குண்டூர் மாவட்டமும் தெலங்கானாவில் கம்மம் மாவட்டமும் வெள்ளத்தால் வெகுவாக பாதிக்கப்பட்டது. வைரா நதியும், மதீரா ஏரியும் நிரம்பி மேலும் பேரழிவை ஏற்படுத்தின என்றார் RI மாவட்டம் (ஆந்திரம் மற்றும் தெலங்கானாவை உள்ளடக்கியது) 3150-ன் மாவட்ட ஆளுநர் சரத் சௌதுரி. சுமார் 5,000 கோடி மதிப்பிலான பயிர்கள் மழை, வெள்ளத்தில் சேதமடைந்தன. இதனால் சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். வெள்ளத்தில் சிக்கித் தவித்த மக்களை தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் உள்ளிட்ட அவசரகால படையினர் மீட்டு நிவாரண முகாம்களில் தங்கவைத்தனர்.



*பாபட்லா மாவட்ட கலெக்டர் J வெங்கடமுரளி தயாராக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விநியோகிக்க உள்ள பொருட்களை ஆய்வு செய்கிறார். DGE S V ராம் பிரசாத் (வலது) மற்றும் RC பிடுகுரல்லா லைம் சிட்டி தலைவர் அசோக் பாபு (இடமிருந்து இரண்டாவது) ஆகியோரும் காணப்படுகிறார்கள்.*



DG சௌதுரி, ‘‘ஆபத்பாந்தவன்’’ திட்டத்துக்கு தலைமையேற்றார் - 40 ரோட்டரி சங்கங்களின் பங்களிப்புடன் பெரிய அளவிலான பேரிடர் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்துக்கு நிதி திரட்டி, அத்தியா வசியப் பொருள்களைக் கொள்முதல் செய்து 5,000 பாக்கெட்டுக்களாகப் போட்டு வெள்ளம் பாதித்த பகுதிகளில் அவசர கால உதவியாக விநியோகம் செய்யப்பட்டது. ‘‘வெள்ளம் சூழ்ந்த கிராமங்களில் ரோட்டேரியன்கள் படகில் சென்றும், இடுப்பளவு தண்ணீரைக் கடந்து சென்றும் நிவாரண உதவிகளை வழங்கினர்’’. நிவாரண உதவிப் பைகளில் ஒருவாரத்துக்குத் தேவையான அத்தியா வசியப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. நிவாரண உதவிகளை வழங்குவதில் ஆந்திரத்தில் பிடிகுராலா லைம் சிட்டி மற்றும் தெனாலி ரோட்டரி சங்கங்களும் தெலங்கானாவில் கம்மம் ரோட்டரி சங்கமும் கூட்டாக இணைந்து ஒத்துழைத்தன.

நிவாரணப் பொருள்கள் ஒரே இடத்தில் குவிந்து விடாமலும், திசை மாறிப்போய் விடாமலும் இருப்பதை தவிர்க்க பாதிக்கப் பட்ட மக்களுக்கு கூப்பன்கள் வழங்கப் பட்டன. அவற்றை கொண்டு வந்தவர் களுக்கு மட்டுமே நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. இதனால் முறை கேடுகள் தவிர்க்கப்பட்டன. உள்ளூர் குடியிருப்போர் நலச் சங்கங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் 4,000 போர்வைகள் மற்றும் பெட்ஷிட்டுகள் வழங்கப்பட்டன.

கிருஷ்ணா நதிக்கரையில் வசிக்கும் ஆதிவாசி குடும்பத்தினருக்கு ரோட்டரியின் அவசரகால நிவாரண உதவி மிகவும் தேவையாக இருந்தது என்றார் ஹைதராபாத் ஸ்மார்ட் சிட்டி ரோட்டரி சங்க உறுப்பினர் அனிதா. மழை, ‘‘வெள்ளத்தில் சிக்கி அவர்கள் 17 நாட்கள் தவிக்க நேரிட்டது. நாங்கள் படகில் சென்று அவர்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்கினோம்’’ என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டம் ரோட்டேரியன்கள் குழுவாக பங்கேற்ற திட்டம். சமையல் எண்ணெய் வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் பஞ்சாரா ஹில்ஸ் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர் ஒருவர், சமையல் எண்ணெய்யை நிவாரணப் பொருளாக வழங்கியுள்ளார். ஜவுளி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்கள் சில போர்வைகள், துணிமணிகளை வழங்கியுள்ளனர். ‘‘இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் முதல் நாளில் போதுமான நிதியை திரட்டினோம், அடுத்த இரண்டு நாட்களில் பொருள்களை கொள்முதல் செய்து பேக் செய்தோம். நான்காவது நாள் மக்களுக்கு கூப்பன் வழங்கப்பட்டது. ஐந்தாவது நாள் பெரும்பாலான பகுதிகளில் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுவிட்டன. நிவாரண உதவிப் பணிகளில் ஏறக்குறைய அனைத்து ரோட்டேரியன்களும் பங்கேற்றனர்’’ என்று ஏழாவது முறையாக பேரிடர் நிவாரண உதவித் திட்டத்தில் பங்கேற்ற சௌதுரி கூறினார். இதுவரை மாவட்ட சங்கங்கள் ரூ.50 லட்சம் பங்களிப்புச் செய்துள்ளன. மேலும் பணம் வந்து

**கீழே:** *RID 3020-ன் ரோட்டரியன்கள் விஜயவாடாவில் நிவாரணப் பொருட்களை வழங்க டிராக்டரில் செல்கிறார்கள்.*



கொண்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

''ஆபத்பாந்தவன்'' திட்டத்தை மாவட்ட ஆட்சியரும் மாநில அரசு அதிகாரிகள் வெகுவாக பாராட்டினர். ''நாங்கள் நிவாரணப் பொருள்கள் வழங்கிய இடங்களில் ஒன்றை மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டார். மேலும் பாக்கெட்டுகளில் காலவதி தேதி யையும் ஆய்வு செய்தார். எங்களது நிவாரணப் பணிகளைப் பாராட்டிய ஆட்சியர், எங்களுக்கு உதவுவதாக உறுதியளித்தார்.

கடந்த செப். 14-ம் தேதி சௌதுரி, ரோட்டரி செய்திக்குழுவிடம் பேசியபோதுகூட வெள்ள நீர், குறிப்பாக நதிகள், வாய்க்கால் கரை உள்ளிட்ட பல இடங்களில் இன்னும் வடியவில்லை. மக்கள் நிவாரண முகாம்களிலேயே தங்கியுள்ளனர். ''எங்களிடம் கணிசமாக தொகை உள்ளது. எங்களின் இரண்டாவது கட்ட நிவாரண திட்டங்களில் நீண்டகால மறுவாழ்வு சேவையும் அடங்கும். வெள்ளம் பாதித்த பகுதிகளில் மக்கள் மீண்டும் தொழில் செய்ய உதவுதல், தொழில் பயிற்சி அளித்தல், மருத்துவ முகாம்கள் நடத்தவும் நாங்கள் திட்டமிட்டுள் ளோம்'' என்றார்.

ஆந்திர மாநிலத்தின் கடலோரப் பகுதியான கிருஷ்ணா மாவட்டத்திலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. விஜயவாடாவில் ஒரே நாளில் 29 செ.மீ. மழை



PDG *ராஜசேகர் ரெட்டி (வலமிருந்து மூன்றாவது) மற்றும்* RID 3150-*ன் ரோட்டரியன்கள் ஒரு படகில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருட்களை விநியோகித்த பின்னர்.*

பதிவாகியுள்ளது. ''இது கிருஷ்ணா நதியின் வரலாற்றில் ஒரு மோசமான பேரழிவாகும்'' என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இதைத்தொடர்ந்து RID 3020-க்கு உட்பட்ட, கிருஷ்ணா மாவட்டத்தைச் சேர்ந்த 8 ரோட்டரி சங்கங்கள் ஒன்றிணைந்து பல்வேறு நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த 3 லட்சம் மக்களுக்கு உணவுப் பொருள்களை விநியோகம் செய்தன. ''இதனிடையே விஜயவாடாவில் உள்ள உள்ளூர் பால் பண்ணையான ''விஜயா டெய்ரி'' வெள்ள நீரில் மூழ்கியதால், பாலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. உடனடியாக பால் வழங்க ஏற்பாடு செய்யுமாறு எங்களுக்கு மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள் விடுத்தார்'' என்றார் ரோட்டரி மாவட்ட ஆளுநர் வெங்கடேஸ்வர ராவ். உடனடியாக ரோட்டேரியன்கள் தங்களுக்கு நெருக்கமானவர்களுடன் தொடர்புகொண்டு விஜயவாடா விலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள ஜெர்ஸி பால் பண்ணை யிலிருந்து 5,000 பால் பாக்கெட்டு களை வரவழைத்து விநியோகித்தனர் என்று அவர் மேலும் கூறினார்.

''கிட்டதட்ட அனைத்து ரோட்டரி சங்கங்களும் நிதிப் பங்களிப்புச் செய்தன. நாங்கள் ஆடைகள், போர்வைகள், சானிடரி பேடுகள், கொசுவலைகள் உள்ளிட்ட நிவாரணப் பொருள்கள் அடங்கிய பைகளை தொலைதூரப் பகுதிகளுக்கும் சென்று மக்களுக்கு விநியோகித்தோம். இதன் மதிப்பு ரூ.40 லட்சம்'' என்றார் அவர். எங்கள் மாவட்டத்துக்கு சமீபத்தில் TRF பேரிடர் நிவாரண நிதியாக 25,000 டாலர் வழங்கியுள்ளது. ''நாங்கள் ரூ.2,000 மதிப்புள்ள வெள்ள நிவாரணப் பொருள்கள் அடங்கிய தொகுப்பை 1,800 குடும்பத்தினருக்கு வழங்கவிருக்கிறோம்'' என்று அவர் மேலும் கூறினார். அமராவதி ரோட்டரி சங்கம் ரூ.3 லட்சமும் அதன் உறுப்பினர் ஒருவர் ரூ.1 கோடியும் முதல்வர் நிவாரண நிதிக்கு வழங்கியுள்ளனர்.

''வெள்ளம் வடிந்து, சமூகத்தினர் மீண்டு வரும்போது நாங்கள் எங்களின் நீண்டகால மறுவாழ்வு சேவை முயற்சிகளைத் தொடங்கு வோம். பேரழிவிலிருந்து மீண்டுவர குடும்பங்களுக்கு உதவி செய்வதில் நாங்கள் முக்கியப் பங்கு வகிப்போம் என்று நம்புகிறோம்'' என்றார் ராவ். ■




RID 3150 DG *சரத் சவுத்ரி மற்றும்* DGE *ராம் பிரசாத் ஒரு விநியோக தளத்தில்.*

GEN WORKS

NEXT GenWorks

Defining tomorrow, *today.*

Malar

Rotary

# COMPLETE WOMEN WELLNESS SOLUTIONS

## SCREEN & TREAT IN A SINGLE SITTING

**COLPOSCOPY**



**EVA*Pro***

Enhanced Visual Assessment of the cervix

**THERMAL ABLATION**



**Thermo*Glide***

Treating precancerous lesions in one sitting

**BREAST SCREENING**



**BRASTER® PRO**

Works on contact thermography

**OUR COLLABORATION WITH ROTARY FOR PROJECT MALAR:**

Big success & a game changer for our women's cancer screening

## CAMPS CONDUCTED 250+

## OVER 20,000+ WOMEN SCREENED



marketing@genworkshealth.com

+91 96320 47604

ADVT.

# க்ளென் கின்ரோஸ்: ஒரு முற்றிலும் பண்புள்ள மனிதர்

ராஜேந்திர சாபூ

உஷாவும் நானும் ஹெத்தர் மற்றும் க்ளென் கின்ரோஸ் ஆகியோரை மார்ச்-ஏப்ரல் 1978-ல் போகா ரேடனில் உள்ள ரோட்டரி இன்டர்நேஷனல் அசெம்பிளியில் சந்தித்தோம், அப்போது நாங்கள் இருவரும் குழு விவாதத் தலைவர்களாக இருந்தோம். அடுத்த வருடம், மீண்டும் அதே இடத்தில் அதே பாத்திரத்தில் சந்தித்தோம். நான் 1981–83 US RI இயக்குனரானேன், 1982–84 US க்ளென் RI இயக்குனரானார். RI தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பில் ஸ்கெல்டனுக்கு, க்ளென் துணைத் தலைவராகவும், இயக்குநர்கள் குழுவின் நிர்வாகக் குழுவின் தலைவராகவும் ஆனார். ரோட்டரி மேடை மூலம், நாங்கள் நெருங்கிய நண்பர்களானோம். பல RI மாநாடுகளுக்குச் சென்றோம்.

1997-ல், க்ளென் RI தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது, ஸ்காட்லாந்தில் கிளாஸ்கோ மாநாட்டில் நாங்கள் சந்தித்தோம், அங்கு ரோட்டரி அமைதி மையம் திட்டம் வழங்கப்பட்டது. அப்போது நான் ரோட்டரி அறக்கட்டளையின் தலைவராகவும், லூயிஸ் கியே RI தலைவராகவும் இருந்தோம். இந்த மையத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் ஒன்று ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகம். அங்கு செல்லும் ஒவ்வொரு முறையும், க்ளென் மற்றும் அவரது குடும்பத்தினரை நான் எப்போதும் சந்தித்தேன்.

ஜனவரி 10, 1998 அன்று, க்ளென் தனது மனைவி ஹெத்தருடன் சண்டிகருக்கு வந்தார். 1998-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இதய அறுவை சிகிச்சைக்குப் பிறகு அவர் ஹெத்தரை இழந்தார். நான் RI தலைவராக இருந்தபோது RI இயக்குநராகப் பணியாற்றிய PRID T D கிரிலே, PRIP கிளெம் ரெனூஃப் மற்றும் அவரது மனைவி ஃபிர்த் ஆகியோரும் உடனிருந்தனர்; அவர்கள் இந்த சந்தர்ப்பத்திற்காக பிரத்யேகமாக வந்திருந்தனர். அவர்கள் ரயிலில் வந்தார்கள், நாங்கள் அவர்களுக்காக இரண்டு பெட்டிகளை முன்பதிவு செய்திருந்தோம். அவர்கள் பஞ்சாப் ராஜ் பவனில் தங்கி, மதிய உணவுக்காக எங்கள் வீட்டிற்கு வந்தனர். அப்போது மாவட்ட ஆளுநராக ரமேஷ் பார்கவாவும், எங்கள் (RC சண்டிகர்) சங்கத் தலைவராக சுனில் கேராவும் இருந்தனர்.

சோவியத் யூனியனுக்கான முன்னாள் இந்திய தூதரும், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருமான I K குஜ்ராலை அறிந்திருந்ததால், 1998-ல் டெல்லியில் CoL நடத்தும்படி அவரிடம் கேட்டுக் கொண்டேன். ஜனவரி 12 அன்று, டெல்லியில், அப்போதைய பிரதமர் I K குஜ்ரால் தலைவர் க்ளெனுக்காக வழங்கிய மதிய விருந்தில் மீண்டும்



**வலமிருந்து:** *PRIP க்ளென் கின்ரோஸ், முன்னாள் பிரதமர் I K குஜ்ரால், ஹீதர் மற்றும் PRIP ராஜேந்திர சாபூ ஆகியோர் கலந்து கொண்டனர்.*

நாங்கள் சந்தித்தோம். டெல்லியில் நடைபெற்ற ரோட்டரியின் CoL தான் இந்தியாவில் முதன்முதலில் நடைபெற்ற CoL ஆகும். PRIP ரே கிளிங்கின்ஸ்மித் CoL-ன் தலைவராக இருந்தார் மற்றும் க்ளெனின் உதவியாளராக ஜான் இ கேரிக் இருந்தார்.

டிசம்பர் 2010-ல், க்ளென் மீண்டும் RI தலைவரின் பிரதிநிதியாக சண்டிகருக்கு வந்து மாவட்ட மாநாட்டில் உரையாற்றினார், அதில் அப்போதைய மத்திய மனிதவள மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சர் கபில் சிபல், ஹரியானா கவர்னர் ஜெகன்நாத் பஹாடியா மற்றும் தி ட்ரிப்யூன் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் ராஜ் செங்கப்பா ஆகியோர் கலந்து கொண்டனர். அப்போதைய DG மதுகர் மல்ஹோத்ரா RI தலைவரின் அலுவலகத்தை தொடர்பு கொண்டு க்ளெனை டிஸ்கானுக்கான RI தலைவர் ரே கிளிங்கின்ஸ்மித்தின் பிரதிநிதியாக நியமிக்குமாறு முறைப்படி கோரியிருந்தார்.



*(இடமிருந்து) க்ளென் கின்ரோஸ், ஹெதர், உஷா மற்றும் ராஜேந்திர சாபூ.*

உஷாவும் நானும் ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் போதெல்லாம், ஐந்து தசாப்தங்களாக எங்கள் மிக நெருங்கிய நண்பரான கிளெம் ரெனூஃப்புடன் சேர்ந்து எப்போதும் க்ளென் வீட்டிற்குச் சென்றோம். அவர்கள் வீட்டில், சைவ காலை உணவு சாப்பிட்டோம். மதிய மற்றும் இரவு உணவிற்கு, நாங்கள் அனைவரும் ஒரு இந்திய உணவகத்திற்குச் செல்வோம். RC ஹாமில்டன், பிரிஸ்பேன் சங்க கூட்டத்தில் நாங்கள் கலந்துகொண்டோம், மேலும் அவரது சங்கத்தின் சில இந்திய ரோட்டரி உறுப்பினர்களையும் சந்தித்தோம். இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையிலான கிரிக்கெட் போட்டிகள் குறித்தும் விவாதித்தோம்.



1990-ம் ஆண்டில், ஆஸ்திரேலியாவின் கான்பெராவில் உள்ள அமைதி பூங்காவிற்கு நான் சென்றேன், அங்கு ரோட்டரியால் அமைதி நினைவுச்சின்னம் நிறுவப்பட்டது. க்ளென் சண்டிகருக்கு வந்தபோது, சண்டிகரில் உள்ள சுக்னா ஏரியில் உள்ள அமைதி நினைவுச்சின்னத்தைப் பார்த்தார்.

மார்ச் 1992-ல், RI பொருளாளர்-இயக்குனர் கெவின் ஹார்டெலின் வீட்டிற்குச் செல்ல நாங்கள் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றோம். எனது வழிகாட்டியான சர் கிளெம் ரெனோஃப் மற்றும் எனது நண்பர் க்ளென் கின்ரோஸ் ஆகியோரின் நகரமான பிரிஸ்பேனுக்கு நாங்கள் காரில் சென்றோம். எங்கள் வருகைக்காக அவர்கள் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். 1998-ல் ரோட்டரி இண்டியானாபோலிஸ் மாநாட்டிலும், 1999-ல் ரோட்டரி சிங்கப்பூர் மாநாட்டிலும், RI இன்ஸ்டிடியூட், பிரிஸ்பேன், 2003 இல் மற்றும் ரோட்டரி கன்வென்ஷன் பிரிஸ்பேன் ஆகியவற்றிலும் நாங்கள் சந்தித்தோம்.

மார்ச் 2008-ல், நியூ சவுத் வேல்ஸில் உள்ள RC ஃபாா்ஸ்டர் ஏற்பாடு செய்த மாநாட்டில் கலந்து கொள்ள ஆஸ்திரேலியா சென்றேன். அங்கு பிரிஸ்பேனில் உள்ள க்ளெனின் வீட்டில் தங்கி, மாநாட்டில் கலந்துகொள்ள ஒன்றாகச் சென்றோம். நாங்கள் கிளெமின் வீட்டிற்கும் சென்றோம்.

க்ளென் கின்ரோஸை ஒரு முற்றிலும் பண்புள்ள மனிதராக நான் எப்போதும் நினைவில் கொள்வேன். என்னாலும் உஷாவாலும் அவரை மறக்கமுடியாது. அவரது பெயர் உயர்ந்த தரம், புதுமை மற்றும் சாதனைக்கு ஒத்ததாக என்றென்றும் இருக்கும்.

*எழுத்தாளர் ரோட்டரி இன்டர்நேஷனலின் முன்னாள் தலைவர்.*

Rotary PEOPLE OF ACTION

# RID 3212 கிராமங்களுக்கு உதவ இதய பராமரிப்பு பேருந்து

ரஷீதா பகத்

RI மாவட்டம் 3212-ன் கீழான ஏழு வருவாய் மாவட்டங்களிலும் உள்ள கிராம மக்களுக்கு இலவச மற்றும் தரமான இதய சிகிச்சையை வழங்குவதற்காக, மாவட்டம் ரூ.1 கோடி மதிப்பில் அதிநவீன மருத்துவ வசதிகள் கொண்ட பேருந்தை வாங்கியுள்ளது.

RID 3212 PDG V R முத்து கூறுகையில், “நான் மாவட்ட ஆளுநராக இருந்த காலத்தில் ரூ.1 கோடியிலான சர்வதேச மானிய உதவியுடன் (21,000 டாலர்) லாஸ்வேகாஸ் வொன் (RID 5300) ரோட்டரி சங்கத்தின் கூட்டு முயற்சியுடன் இதற்கான திட்டம் உருவாக்கப்பட்டது” என்றார்.

உலக சுகாதார நிறுவனம் (WHO) வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின்படி, மாரடைப்பு மற்றும் பக்கவாதத்தால் ஏற்படும் உயிரிழப்புகளில் 75 சதவீதம் வளரும் நாடுகளில் நிகழ்கின்றன. மருத்துவ வசதிகள், குறிப்பாக இதயநோய், நரம்பியல் நோய் உள்ளிட்ட நோய் களுக்கான சிகிச்சை வசதிகள் கிராமப்பகுதிகளில் குறைவாக இருப்பதை நாம் அறிவோம். எனவே பல்வேறு கிராமங்களுக்குச் சென்று, மருத்துவ முகாம்கள் நடத்தி, அவர்களுக்கு இதய நோய் உள்ளிட்ட நோய்கள் உள்ளனவா என்பதைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வகையில் நவீன மருத்துவ வசதிகள் கொண்ட பேருந்தை வாங்க நாங்கள் முடிவு செய்தோம். இந்த பேருந்துக்கு. “கர்மவீரர் காமராஜர் இதய பராமரிப்பு பேருந்து” என்று பெயரிட்டுள்ளோம் என்றார் அவர்.

இந்த அதிநவீன குளிர்சாதனப் பேருந்தில் பவர்-பேக்அப் வசதியும் உள்ளது. தமிழக முன்னாள் முதல்வர் பெயரிலான இந்த பேருந்தில் ECG கருவி, புறஊதாக்கதிர்கள் மூலம் நோயறியும் வசதி, மாரடைப்பு ஏற்பட்டால் மீண்டும் இதயத் துடிப்பை சீராக்கும் கருவி, ஒலி-ஊடக காட்சிகளுடன் மின் அதிர்வால் இதயத்துடிப்பை சரி செய்யும் கருவி என நவீன மருத்துவ வசதிகள் உள்ளன. மேலும் இவற்றை கையாளுவதற்கு தகுதிவாய்ந்த மருத்துவர்கள், செவிலியர்களும் எக்கோ மற்றும் ECG கருவிகளைக் கையாளும் தொழில்நுட்புனர்களும் உள்ளனர். மேலும் ரோட்டரியின் மருத்துவ முகாமை வெற்றிகரமாகச் செயல்படுத்த RID 3212-க்கு உட்பட்ட ரோட்டரி தன்னார்வலர்களும் இதில் இடம்பெற்றுள்ளனர்.

நவீன மருத்துவ வசதிகள் கொண்ட இந்த பேருந்து திருநெல்வேலியில் உள்ள காவேரி மருத்துவமனையில் நிறுத்திவைக்கப்படும். இந்த வசதி




*இதய பராமரிப்பு பேருந்து தொடக்க விழாவில் DG மீரான்கான் சலீம் மற்றும் PDG V R முத்து.*

தொடங்கி வைக்கப்பட்ட கடந்த இரு மாதங்களில் இதுவரை பல்வேறு கிராமங்களில் சுமார் பத்து மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளன என்று PDG முத்து தெரிவித்தார். RID 3212-க்கு உட்பட்ட சங்கங்கள் கிராமங்களில் மருத்துவ முகாம் நடத்த விரும்பினால், முகாம் நடத்துவதற்கு 20 நாட்கள் முன்னதாக இடத்தை தேர்வு செய்து அதற்கான அனுமதி பெற்று, தளவாடங்களுக்கு ஏற்பாடு செய்தபின் இந்த பேருந்தை முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். இந்த மருத்துவப் பேருந்தை பயன்படுத்துவதற்கு சங்கங்கள் ஏதாவது பணம் செலுத்த வேண்டுமா? என்று கேட்டதற்கு, “காவேரி மருத்துவமனையிலிருந்து முகாம் இடத்திற்கு பேருந்து செல்வதற்கான எரிபொருள் செலவை மட்டும் செலுத்தினால் போதுமானது” என்று முத்து கூறினார்.

மருத்துவ முகாம்களின் போது பயனாளிகளுக்கு உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், இதயநோய் உள்ளதா என பரிசோதிக்கப்பட்டு பொது மருத்துவ பரிசோதனையும் செய்யப்படுகிறது. இதுவரை 10 முறை நடந்துள்ள இதயநோய் பரிசோதனை முகாம்களில் நவீன மருத்துவ வசதி கொண்ட பேருந்தின் உதவியுடன் 1,346 பேர் இதய நோய் பரிசோதனை செய்துகொண்டு பயன்பெற்றுள்ளனர்.

இப்போதைய நிலையில் இந்த நவீன மருத்துவ வசதிகள் கொண்ட பேருந்தை வரும் 2025 மார்ச் மாதம் வரை மாவட்டத்தில் உள்ள ரோட்டரி சங்கங்கள் முன்பதிவு செய்துள்ளன என்று கூறிக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த நவீன மருத்துவ வசதிகள் கொண்ட பேருந்தை பயன்படுத்தி சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்த விரும்பினால் கூடுதல் விவரங்களை விருதுநகர் இதயம் ரோட்டரி சங்க உறுப்பினர் டி.சுடலைவேல் அவர்களிடம் (செல்லிடைபேசி எண்: 9750955445) தொடர்புகொள்ளலாம்.■



*பேருந்துக்குள் ஒரு குழந்தைக்கு இதய நோய் பரிசோதனை.*

# குழந்தைகளுக்கான புற்றுநோய் பராமரிப்பு உணவு

ரோட்டரி செய்திக்குழு




இந்த ஆண்டு ஜூலை 1-ம் தேதி, RC தானே கோட்பந்தர் ரோடு, RID 3142, மும்பையின் பரேலில் உள்ள செயின்ட் ஜூட்ஸ் குழந்தை பராமரிப்பு மையத்தில் புராஜெக்ட் அன்னபூர்ணாவை அறிமுகப்படுத்தியது, இது மும்பையின் டாடா மெமோரியல் மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை பெறும் 100 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து ஆதரவை வழங்குகிறது. “புற்றுநோயுடன் போராடும் குழந்தைகளைக் கொண்ட 100 குடும்பங்களுக்கு ஆண்டு முழுவதும் ஒவ்வொரு வாரமும் சத்தான உணவுப் பொதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்” என்று திட்ட ஒருங்கிணைப்பாளர் சங்கர் பகத் கூறினார். ஒவ்வொரு பேக்கிற்கும் ரூ.500 செலவாகும் மற்றும் மொத்த திட்ட செலவு ரூ.26 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. மும்பையில் உள்ள 20 செயின்ட் ஜூட்ஸ் மையங்களில் தங்கியிருக்கும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இந்த முயற்சி நீட்டிக்கப்படும்.■

# உயிர்களைக் காப்பாற்ற ரோட்டரி AEDகளை நிறுவுகிறது

**Dr அஷய் மேத்தா**

70 வயதான கட்டிடக் கலைஞர் ஒருவர் பாந்த்ராவின் கார்ட்டர் சாலையில் காலை நடைப்பயிற்சி செய்து கொண்டிருந்தார்; அவர் திடீரென்று தடுமாறி நடைபாதையில் சரிந்தார். பார்வையாளர்கள் அவரிடம் விரைந்து சென்று வழக்கமான முறையில் நடந்துக்கொண்டனர், சிலர் தண்ணீர் தெளிக்க ஆலோசனை கூறினர், சிலர் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல பரிந்துரைத்தனர்.

அதிர்ஷ்டவசமாக, அவ்வழியாகச் சென்றவர்களில் சமீர் ஃபிரஸ்தா என்ற பண்பாளர் இத்தகைய சூழ்நிலைகளில் நன்கு பயிற்சி பெற்றவர். அவர் பாதிக்கப்பட்டவரின் இரு தோள்களையும் தட்டி அவரது மேல் வயிற்றில் சுவாசித்ததற்கான அறிகுறிகளைப் பார்த்தார். “சுவாசம் இல்லை!” என்று கூறினார் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளதாக தீர்மானித்தார். பின்னர் அவர் மாரடைப்பால் பாதிக்கப்பட்டவர்கள் உயிர்வாழ்வதற்கான முக்கியமான மூன்று படிகளை எடுத்தார்.

முதலில், அவர் உதவிக்கு அழைத்தார், குறிப்பாக ஒருவரை ஓடி சென்று அருகிலுள்ள ஒட்டர்ஸ் கிளப்பில் இருந்து AED இயந்திரத்தைப் பெற்று வர சொன்னார். பின்னர் அவர் கற்பிக்கப்பட்ட வழியில் மார்பை பம்ப் செய்யத் தொடங்கினார் 2-இன்ச் ஆழத்தில், நிமிடத்திற்கு 100 முறை. இது மூளைக்கு ரத்தம் கிடைத்து இறக்காமல் இருப்பதை உறுதி செய்தது. மூன்றாவது படி AED இயந்திரத்தைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்டவருக்கு மின்சார அதிர்ச்சி கொடுக்கப்பட வேண்டும்.

அவர் அதைச் செய்தார், பாதிக்கப்பட்டவரை வெற்றிகரமாக உயிர்ப்பிக்க சரியான நேரத்தில் மற்றும் சரியான முறையில் CPR செய்தது மட்டுமல்லாமல் மும்பையில் மருத்துவர் அல்லாத, சாதாரண நபர் ஒருவர் AED இயந்திரத்தைப் பயன்படுத்திய முதல் நிகழ்வாக இது அமைந்தது.

மாரடைப்பு ஏற்பட்டால் சிகிச்சை அந்த இடத்திலேயே கொடுக்கப்பட வேண்டும், ஏனெனில் ஒவ்வொரு நொடியும் மிக முக்கியம். ஒரு நபரின் இதயம் துடிப்பதை நிறுத்திவிட்டால், மூளைக்கு இரத்தம் செல்லாமல் சில நிமிடங்களில் அது இறந்துவிடும்.

மூளைக்கு இரத்தத்தை அனுப்பாமல், பாதிக்கப்பட்ட வரை மருத்துவமனைக்கு மாற்றும் போது பொதுவாக பாதிக்கப்பட்டவர் “வரும் போதே இறந்துவிட்டதாக” மருத்துவமனையால் அறிவிக்கப் படும். எனவே, மூளைக்கு இரத்தம் கொடுப்பதற்கும், சேதம் அல்லது மரணம் ஏற்படாமல் தடுப்பதற்கும், அந்த இடத்திலேயே மார்பைப் பம்ப் செய்வதே பார்வையாளர்களின் கடமையாகும். இரண்டாவது முக்கியமான படி, AED (Automated External Defibrillator) உதவியுடன் மின்சார அதிர்ச்சியைக் கொடுத்து இதயத்தை உயிர்ப்பிப்பதாகும்.

எனவே AED-கள் பொதுமக்களால் பயன்படுத்தப்பட வேண்டியவை, அவர்கள் தேவைப்படும் போது அதைப் பயன்படுத்த எளிதாகப் பயிற்சி பெறலாம்.

ரோட்டரி கிளப் ஆஃப் பாம்பே ஏர்போர்ட் (RCBA) ஆகிய நாங்கள், ஒரு தனித்துவமான இசை நிகழ்ச்சி




*RC பாம்பே ஏர்போர்ட் முன்னாள் தலைவர் Dr அக்ஷய் மேத்தா (இடமிருந்து 3வது) PDG அருண் பார்கவா (வலமிருந்து 3வது) கலை அமைப்பின் முன்.*

யை ஏற்பாடு செய்தோம், மேலே குறிப்பிடப்பட்ட மீட்பாளர் சமீர் ஃபிரஸ்தா, ரிவைவ் ஹார்ட் அறக்கட்டளையைச் சேர்ந்த அவரது பயிற்சியாளர் சுமையா மற்றும் உயிர் பிழைத்தவர் ஆகியோரை RCBA பாராட்டியது. ஃபிரஸ்தாவின் இந்த மாபெரும் மீட்புக் கதை பார்வை யாளர்களை நெகிழ செய்தது. பார்வையாளர்கள் மொத்தமாக 64 AED-கள் வழங்குவதாக தன்னிச்சையாக வாக்குறுதி அளித்தனர்! எனவே RCBA இந்த இயந்திரங்களை ரயில் நிலையங்கள் போன்ற பல்வேறு பொது இடங்களில் நிறுவ முடிவு செய்தது, மேலும் மாரடைப்பை அடையாளம் காணவும் சரி செய்யவும் மக்களுக்கு பயிற்சி அளித்தது.

இந்த பயிற்சியால், ஆகஸ்ட் மாதம், மரைன் லைன்ஸ் ரயில் நிலையத்தில் மயங்கி விழுந்த 41 வயது பயணி ஒருவருக்கு CPR செய்து, புதிதாக நிறுவப்பட்ட AED-ஐப் பயன்படுத்தி நிலையக் கண்காணிப்பாளர் காப்பாற்றினார். “RC பாம்பே ஏர்போர்ட்டால் நடத்தப்பட்ட AED-ஐ எவ்வாறு இயக்குவது என்பதற்கான பயிற்சியை நான் பெற்றதன் காரணமாக என்னால் ஒரு உயிரைக் காப்பாற்ற முடிந்தது” என்று அவர் கூறியதாக உள்ளூர் செய்தித் தாள் மேற்கோளிட்டுள்ளது.

இதற்கிடையில், இதய ஆரோக்கியம் தொடர்பான கல்வி, CPR பயிற்சியுடன், பள்ளிகள் மற்றும் பூங்காக்களில் தொடர்ந்தது, “வாக் வித் தி டாக்” என்ற திட்டத்தில், 14 ரோட்டரி சங்கங்கள் ஏழு பூங்காக் களில் நகரத்தின் ஐந்து இருதயநோய் நிபுணர்களின் ஈடுபாட்டுடன் பங்கேற்றன. CPR மூலம் ஒரு உயிரைக் காப்பாற்றுவதைக் குறிக்கும் ஒரு அழகான கலை அமைப்பு, பாந்த்ரா பேண்ட்ஸ்டாண்ட் ப்ரோமெனேடில் நிறுவப்பட்டது. CSR மற்றும் AED இயந்திரங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைச் சித்தரிக்கும் சைன்போர்டுகளும் அங்கே நிறுவப்பட்டன.

*எழுத்தாளர் ஒரு இருதயநோய் நிபுணர் மற்றும் RC பாம்பே ஏர்போர்ட் உறுப்பினர்.*

# சிறந்த CSR கூட்டாளர் விருது பெறும் ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா)

ரோட்டரி செய்திக்குழு




RISAO TRF *தலைவர் சஞ்சய் பார்மர் மற்றும் மூத்த திட்ட அலுவலர்* (CSR) *பாவ்னா வர்மா விருதைப் பெற்றுக் கொள்கிறார்கள்.*

ஆகஸ்ட் 22 அன்று புது தில்லியில் நடைபெற்ற 14வது இந்திய CSR விருதுகளில், பெருமைக்குரிய மிகச்சிறந்த CSR செயல்படுத்தல் கூட்டாளர் (பன்னாட்டு அமைப்பு) விருதைப் பெற்றது ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா).

இதுபற்றி மகிழ்ச்சி தெரிவித்த RF(I) தலைவர், PRID கமல் சங்வி, “இந்த அங்கீகாரம் எங்களுக்குப் பெருமையளிக்கிறது, நாடுமுழுவதும் ரோட்டரி சங்கங்கள், மாவட்டங்கள் செய்த தொடர்ந்த முயற்சிகளைப் பிரதிபலிக்கிறது. தாக்கமுள்ள CSR திட்டங்களைக் கட்டமைப்பதற்கு அவர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருப்பதால்தான் நாங்கள் இந்த மைல்கல்லை எட்டியுள்ளோம். இந்தியாவில் CSR வளர்ச்சிக்கான மிகப் பெரிய இடம் இருப்பதால், ரோட்டரியன்கள் அனைவரும் இந்தப் பொருளுள்ள பணியைத் தொடரவேண்டும் என்று நான் ஊக்குவிக்கிறேன். நாம் ஒன்றாகச் சேர்ந்து புதிய உயரங்களை எட்டலாம், நீடித்த மாற்றத்தைக் கொண்டுவரும் ரோட்டரியின் திறனை மேலும் வலுவாக்கலாம்” என்றார்.

2016 முதல், வலுவான பெருநிறுவன உறவுகளைக் கட்டமைப்பதில் RFI முதன்மைப் பங்காற்றிவருகிறது. முந்தைய 3 ஆண்டுகளில்மட்டும் இந்த அமைப்பின் திட்டங்கள் 81% வளர்ந்துள்ளன. இவர்கள் இந்தியாமுழுவதும் 300க்கும் மேற்பட்ட பெருநிறுவனங்களுடன் இணைந்து, $21 மில்லியன் மதிப்புள்ள 390+ முன்னெடுப்பு களை ஆதரித்துள்ளார்கள் (மார்ச் 31, 2024 கணக்கின்படி).

இந்திய CSR வலைப்பின்னலால் 2011ல் தொடங்கப்பட்ட இந்திய CSR விருதுகள் புதுமைச் சிந்தனை, வளங்குன்றா நிலை, அளவைப் பெருக்கும் வாய்ப்பால் சிறந்து விளங்கும் திட்டங்களை அங்கீகரிக்கின்றன.■



RC புனே சென்ட்ரல் மூலம்
குப்பை வண்டி இயக்கப்படுகிறது.

Rotary PEOPLE OF ACTION

# 45 நிமிடங்களில் ரூ.1.2 கோடி நிதி திரட்டிய RC புனே சென்ட்ரல்

ஜெய்ஸ்ரீ


*சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் உதய் தர்மாதிகாரி (வலது) மற்றும் அஜய் சிட்னிஸ் சக்கர நாற்காலி விநியோக நிகழ்வில்.*

புனே சென்ட்ரல் ரோட்டரி சங்கம் (RID 3131), அதன் வருடாந்திர Spirit of Giving நிகழ்வின் போது 118 உறுப்பினர்களிடமிருந்து வெறும் 45 நிமிடங்களில் ரூ.1.2 கோடி நிதி திரட்டியது. இந்த தனித்துவமான நிதி திரட்டும் விழா, 40 ஆண்டுக்கால சங்கத்தின் முக்கிய அம்சமாக உள்ளது. பல்வேறு சேவைத் திட்டங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சங்கம் நிதிப் பங்களிப்புச் செய்து வருகிறது.

வழக்கமான நிதி திரட்டும் முறைகளைப் போல அல்லாமல், இந்த திட்டம் எங்கள் உறுப்பினர்களை ஆழமான திட்டத்துடன் இணைக்கிறது. நிதி ஆதரவு மற்றும் தனிப்பட்ட ஈடுபாட்டை ஊக்குவிக்கிறது. என்கிறார் சங்கத்தின் முன்னாள் தலைவர் உதய் தர்மாதிகாரி.

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் இந்த நிகழ்வானது, சங்கத்தின் தலைவர் ரோட்டரி ஆண்டுக்கான சேவைத் திட்டங்களை முன்மொழியும் வழக்கமான கூட்டத்துடன் நடத்தப்படுகிறது. தங்களை மிகவும் கவர்ந்த திட்டங்களுக்கு உறுப்பினர்கள் முழுமனதுடன் பங்களிப்புச் செய்கிறார்கள். உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த உதவியைச் செய்கிறார்கள். அது ரூ.10,000-மாகவும் இருக்கலாம் அல்லது ரூ.20 லட்சமாகவும் இருக்கலாம்.

அதுமட்டுமல்லாமல், திட்டங்களில் முழு ஈடுபாடு கொண்டு நிறைவேற்றவும் உதவுகிறார்கள். குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் உயர்ந்த பங்களிப்பாக சங்கத்தின் முன்னாள் தலைவர் மதுசூதன் ரதி ரூ.45 லட்சம் வழங்கியுள்ளார். அவர் தான் தனது பதவிக் காலத்தில் 1998–99-ல் இதற்கான முயற்சியை மேற்கொண்டார். அது முதல் இந்த நிகழ்வு தொடர்ந்து வருகிறது.

ஒரு திட்டத்தைச் செயல்படுத்த தொடங்கும் முன்பாக உறுப்பினர்களுக்கு அதைப் பற்றிய சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்படும். அதன்பின் பங்களிப்புகள் வரும் என்கிறார் தர்மாதிகாரி.

திரட்டப்பட்ட நிதி, கண்புரை அறுவைச்சிகிச்சை, குழந்தைகளுக்கான இதய அறுவைச்சிகிச்சை, பள்ளிகளில் மின் கற்றல் வசதி ஏற்படுத்தித் தருதல், தடுப்பு அணைகள் கட்டுதல், வனங்களை வளர்த்தல் போன்ற திட்டங்களை சங்கம் நிறைவேற்ற உதவியது. இந்த ஆண்டு புற்றுநோய் சிகிச்சை, நல்ல குடிநீர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கண் பராமரிப்பு, பிறவிக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான இதய அறுவைச்சிகிச்சை ஆகிய திட்டங்களில் சங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

2017-ம் ஆண்டு முதல் புனே அருகில் மூல்ஷி தாலுகாவில் உள்ள கோன்வாடி கிராமம் தூய்மையாக காட்சியளிக்கிறது. அங்குள்ள 3,000 வீடுகள், 14 ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களில் சேரும் குப்பைகள் வேன் மூலம் சேகரிக்கப்பட்டு கிராமத்தின் மைய குப்பைக் கிடங்கில் வைக்கப்படுகிறது. இந்த குப்பை சேகரிக்கும் வாகனத்தை ரதி வழங்கியுள்ளார். அதை சங்கம் இயக்கி பராமரித்து வருகிறது. அதுமட்டுமல்ல, “நாங்கள் இந்த கிராமத்தை தத்தெடுத்து பல ஆண்டுகளாக அத்தியாவசிய சேவைகளை வழங்கி வருகிறோம்” என்றார் தர்மாதிகாரி.■

# RID 3090ல் இன்டராக்ட் வளர்ச்சி

**மனிக் ராஜ் சிங்லா**

ரோட்டரி ஆண்டு 2021-ல் தொடங்கி மூன்றே ஆண்டுகளில் RID 3090-ன் இன்டராக்ட் சங்கங்களின் எண்ணிக்கை 7லிருந்து 382க்கு உயர்ந்துள்ளது. ஜூலை 1, 2021 அன்று, இந்த மாவட்டத்துக்கான இன்டராக்ட் தலைவராக நான் பொறுப்பேற்றேன், ஜூன் 2024 வரை மூன்று ஆண்டுகளுக்கு நான் அந்தப் பொறுப்பை வகித்தேன்.

இந்த மாவட்டத்தில் உள்ள சுமார் 125 ரோட்டரி சங்கங்கள் வழங்கிய ஆதரவால், இந்த எண்ணிக்கை மூன்று ஆண்டுகளில் 382க்கு உயர்ந்தது. இதன்மூலம் RID 3090 இந்தியாவில் மூன்றாவது இடத்தையும், தெற்கு ஆசியாவில் நான்காவது இடத்தையும் பிடித்தது.

நான் பள்ளி அலுவலர்களிடம் ரோட்டரி அமைப்பு மாணவர்களை வருங்காலத் தலைவர்களாக்கும் என்று சொல்லிப் புரிய வைத்தேன்.

ஒவ்வோர் ஆண்டும் இன்டராக்ட் சங்கங்கள் குறைந்தது 2 சமூக சேவைத் திட்டங்களை நிறைவு செய்கின்றன. இவற்றுள் ஒன்று பன்னாட்டுப் புரிந்துகொள்ளல், நல்லெண்ணத்தை வளர்க்கிறது. இந்த முயற்சிகளின் வழியாக, இன்டராக்டர்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சங்கங்களுடன் நட்பு வலைப்பின்னலை வளர்க்கிறார்கள், தலைமைப் பண்புகள், தனிப்பட்ட நேர்மை, பிறருக்கு உதவுதல், பிறரை மதித்தல் போன்றவற்றைக் கற்கிறார்கள்.

நான் அரசு, பகுதியளவு அரசு, உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் இன்டராக்ட் சங்கங்களை நிறுவினேன். RYLA போன்ற நிகழ்வுகளும், Spell Bee, மேடைப் பேச்சு, மற்றும் பல போட்டிகளும், பள்ளிகளில் நடத்தப் பட்டன. நாங்கள் நடத்திய பணி வாழ்க்கை அறிவுறுத்தல் கருத்தரங்குகள் இன்டராக்டர்களுக்கு மதிப்பு மிக்க வழிகாட்டுதலை வழங்கின.

பள்ளிகள் மற்றும் கல்வி அமைப்புகள் இன்டராக்ட்பற்றி அறிய ரோட்டரியினர் உதவ வேண்டும்.

தரத்துக்கு மேல் எண்ணிக்கை: ஏற்கெனவே உள்ள சங்கங்களின் செயல்பாடுகளில் கவனம் செலுத்தி அவற்றை இன்னும் துடிப்பாக ஆக்காமல், சங்கங்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதில் கூடுதல் அழுத்தம் தரப்படுவதால், இன்டராக்ட் சங்கங்களும் இன்டராக்டர்களும் புள்ளிவிவரங்களில் தெரிகிறார்கள், களத்தில் தெரிவதில்லை.

ஒவ்வொரு புதிய DGயும் புதிய சங்கங்களைப் பதிவு செய்வதில் கவனம் செலுத்துகிறார், மாறாக ஏற்கெனவே உள்ளவற்றை வளர்ப்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

### முன்னேறும் வழி

இன்டராக்டர்கள் வளரவும், தலைமைப் பண்புத் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் போதுமான வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும். ரோட்டரி என்னும் தளம் மாணவர்களைத் துணிவுள்ளவர்களாக ஆக்கும், சமூகத்துடனும் நாட்டுடனும் மனித குலத்துடனும் நன்மைகளைப் பகிர்ந்துகொண்டு அக்கறை காட்ட அவர்களுக்குக் கற்றுத்தரும் என்று ரோட்டரியன்கள் பள்ளிகளுக்குப் புரியவைக்கவேண்டும்.■



# நடமாடும் வாகனம் மூலம் 4,000 மகளிர்க்கு புற்றுநோய் பரிசோதனை

**V முத்துகுமரன்**

மேட்டுப்பாளையம் ரோட்டரி சங்கத்தின் (RID 3203) ஹீல் திட்டத்தின் மூலம்- (HEAL – அதிக விழிப்புணர்வு, முன்கூட்டியே கண்டறிதல், மலிவான விலையில் சிகிச்சை மற்றும் குறைந்த அளவு உயிரிழப்பு) – இதுவரை 100-க்கும் மேலான நடமாடும் புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை முகாம் நடை பெற்றுள்ளன. இதன் மூலம் 4,000 வயது வந்த பெண்கள் பயனடைந்துள்ளனர். “பரிசோதனை செய்துகொண்டவர்களில் 500 பேர் மேல் பரிசோதனை, ஸ்கேன் மற்றும் மதிப்பீடு செய் வதற்காக கோவை KMCH மருத்துவ மனைக்கு பரிந்துரைக்கப்பட்டனர்” இந்த மருத்துவமனை கிராமப்புற பெண்களிடம் புற்றுநோய் கண்டறியும் எங்களது முயற்சிக்கு உறுதுணையாக இருந்து வருகிறது என்கிறார் குழந்தைகள் சிறப்பு மருத்துவர் D விஜயகிரி. லேப்ராஸ் கோபிக் அறுவைச்சிகிச்சை நிபுணரான அவர்தான், 2019–20 இல் ரோட்டரி சங்கத் தலைவராக இருந்தபோது புற்றுநோய் கண்டறியும் முகாம்கள் நடைபெற காரணமாக இருந்தவர். KMCH-ல் நடந்த மருத்துவப் பரிசோதனைகளின் போது 40 பெண்களுக்கு புற்றுநோய் ஆரம்ப நிலையில் இருப்பது கண்டறியப் பட்டது.



*ப்ராஜெக்ட் ஹீல் முகாமில் PRIP சேகர் மேத்தா (இடமிருந்து) PDG A கார்த்திகேயன் மற்றும் RC மேட்டுப்பாளையம் முன்னாள் தலைவர் மற்றும் ப்ராஜெக்ட் ஹீல் அறக்கட்டளை செயலாளர், Dr D விஜயகிரி உடன்.*

ஹீல் திட்டத்தின்கீழ் நடமாடும் புற்றுநோய் கண்டறியும் முகாமில் கோயம்புத்தூர் மற்றும் அதனைச்சுற்றியுள்ள கிராமப்புற பெண்கள் அதிக அளவில் இதில் பங்கேற்றனர் என்கிறார் அறக் கட்டளையின் தலைமைச் செயல் அதிகாரி அனந்தகிருஷ்ணன். 9 ஆண்டுகள் கடந்துவிட்ட இந்த சர்வதேச மானிய உதவித் திட்டம் இப்போது 2030-ம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. சராசரியாக நாங்கள் 5 முதல் 8 முகாம்களை நடத்துகிறோம். இதில் 600 பேருக்கு பரிசோதனை செய்யப் படுகிறது. சராசரியாக மார்பக புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் கண்டறியும் சோதனையில் தலா 300 பேர் பயனடைந்துள்ளனர்.

இந்த நடமாடும் மருத்துவ பரிசோதனை வாகனம் KMCH-ல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையைச் சேர்ந்த இரண்டு மருத்துவர்கள் மற்றும் நான்கு தொழில் நுட்புனர்கள் அடங்கிய 6 பேர் கொண்ட குழு, கோவை மற்றும் மேட்டுப் பாளையத்தில் கிராமப்புறங்களில் (RID 3201 மற்றும் 3203-க்கு உட்பட்ட பகுதிகள்) நடத்தப்படும்



முகாம்களில் பெண்களிடம் மருத்துவப்பரிசோதனை நடத்தும்.

நவீன மருத்துவ வசதிகள் கொண்ட இந்த மருத்துவ வாகனம் மருத்துவமனையைச் சுற்றி 100 கி.மீ. தொலைவில் உள்ள அல்லது 2 மணி நேர பயணத்தில் உள்ள கிராமங்களுக்குச் சென்று முகாம் நடத்தும். இந்த திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான இடத்தை நாங்கள் தேர்ந்தெடுப்பதற்கு முன்னதாக உள்ளூர் ரோட்டரி மற்றும் அந்தப் பகுதியில் செயல்பட்டு வரும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் அருகில் உள்ள தொழிற்சாலைகள், ஆலைகள், பஞ்சாயத்துகள், சமூகக்கூடங்கள், பள்ளிகளுக்குச் சென்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களை சந்தித்தும் புற்றுநோய் கண்டறிவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்து வார்கள் என்று விளக்கினார் அனந்தகிருஷ்ணன்.

ஆனால், முக்கியமான சவால் என்னவென்றால், “விழிப்புணர்வு அமர்வுகளில் பங்கேற்பவர்களில் 50 சதவீதம்பேர் மட்டுமே புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை முகாமுக்கு வருவதற்கு ஒப்புக்கொள்கிறார்கள். “கிராமப்புற பெண்கள், தங்களின் அந்தரங்க உறுப்புகளை காட்டி மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள தயக்கம் காட்டுகிறார்கள் அல்லது கூச்சப்படுகிறார்கள். எனவே அவர்களிடம் பேசி அவர்களை சம்மதிக்கவைப்பது சவாலாகவே உள்ளது’’ என்கிறார் மருத்துவர் விஜயகிரி.

மார்பக புற்றுநோய் பரிசோதனை என்றால் ஊடுகதிர் படபரிசோதனை அல்லது திசுக்கள் (பயாப்ஸி) பரிசோதனை தேவைப்படும். கர்பப்பை வாய் புற்றுநோய் மேல் பரிசோதனை என்றால் அவர்களுக்கு கர்ப்பபை வாய் பூச்சு பரிசோதனை நடத்த வேண்டும். மேலும் தேவைப் பட்டால் இவர்களுக்கு கோல்போஸ்கோபி (இந்த கருவி பெண்களுக்கு கர்பப்பை வாய் புற்றுநோய் இருந்தால் கண்டறிந்து “அலர்ட்’’ கொடுக்கும்.) கருவி மூலம் பரிசோதனை நடத்தவேண்டும். தொடர் பரிசோதனையில் ஒருவருக்கு புற்றுநோய் ஆரம்ப கட்டநிலையில் இருப்பது தெரிய வந்தால் அவர்களுக்கு இலவச அறுவைச் சிகிச்சை செய்யப்படும். ஆனால், வீரியமற்ற கட்டி இருந்தாலோ அல்லது தொற்று இருப்பது தெரியவந்தாலோ மருத்துவ மனையில் பொதுவான சிகிச்சை அளிக்கப்படும் என்று விளக்கினார் அனந்தகிருஷ்ணன்.

நவீன மருத்துவ வசதிகள் இல்லாத அல்லது மருத்துவ வசதிக்காக நகரங்களுக்குச் செல்லமுடியாத கிராமப்புற பெண்களுக்கு வீட்டு வாசலிலேயே புற்றுநோய் கண்டறியும் திட்டம் தான் அது என்று நினைவுகூர்ந்தார் விஜயகிரி.

“40 பெண்கள் புற்றுநோய்க்கான அறுவைசிகிச்சை அல்லது மேல் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு, இப்போது அவர்கள் தங்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்துகிறார்கள்’’ என்று மகிழ்ச்சி பொங்க குறிப்பிட்டார் PDG கார்த்திகேயன்.

பட்ஜெட் திட்டத் தொகையான ரூ.3.3 கோடியில் DDF பங்களிப்பு 20,000 டாலர், கார்த்திகேயன் 15,000 டாலர், என்சி ஆரோமேட்டிக்ஸ் நிறுவனம் மூலம் கிடைத்த CSR நிதி 33,800 டாலர், சங்க உறுப்பினர்களின் பங்களிப்பு 71,000 டாலர் மற்றும் அவற்றுக்கு இணையான TRF பங்களிப்பு நிதி 82,000 டாலர் ஆகியவையும் அடங்கும். மெக்ஸிகோவில் உள்ள ஜுவாரெஸ் காம்பெஸ்ட்ரீ ரோட்டரி சங்கம் (RID 4110) சர்வதேச கூட்டாளர்களாகச் செயல்பட்டனர். இது தவிர 100-க்கும் மேற்பட்ட தனியார மற்றும் கார்ப்பொரேட் நிறுவன நன்கொடை யாளர்கள் மற்றும் RID 3203-க்கு உட்பட்ட 23 ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த 50 ரோட்டேரியன்கள் இத்திட்டத் திற்கு நிதியுதவி செய்துள்ளனர். மேலும் திட்டக்குழுவினர் தொடர்ச்சியாக நிதி திரட்டும் நிகழ்ச்சிகளை நடத்தியது. புற்றுநோய் முகாமுக்கு நிதிசேர்க்க தனி இணையதளமும் உருவாக்கப் பட்டது. எனினும் நிதிதிரட்டும் பணி நான்கு மாதங்களில் முடிக்கப்பட்டது என்றார். ■



*Project HEAL 100வது முகாமில் Dr விஜயகிரி, திட்ட ஒருங்கிணைப்பாளர் K P நாகேஸ்வரன் மற்றும் ஹீல் அறக்கட்டளை COO சுரேஷ் அனந்தகிருஷ்ணன் மற்றும் RC திருப்பூர் பாரதி பட்டய தலைவர் S ராஜலட்சுமி பயனாளிகளுடன்.*

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V கிரண் ஜெஹரா



## சுரேஷ் பாபு

மருத்துவ பயிற்சி

RC உதகமண்டலம், RID 3203

### வருடாந்திர நிதி சவாலின் வெற்றியாளர்

1999 முதல் ரோட்டேரியராக இருக்கும் சுரேஷ் பாபு, ரோட்டரியில் தனது நேரத்தை முழு மகிழ்ச்சியுடன் அனுபவித்து வருகிறார். அவர் தற்போது தனது மாவட்டத்தில் உள்ள 97 சங்கங்களை மேற்பார்வையிடுகிறார், மேலும் இந்த எண்ணிக்கையை 105 ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளார். அவரது மாவட்டம் ஏற்கனவே ஒரு சங்கத்திற்கு 100 வருடாந்திர நிதி சவாலை அடைந்துள்ளது மற்றும் ஆரம்ப சாதனையாளர் விருதுடன் அங்கீகரிக்கப்பட உள்ளது.

ரோட்டரி பற்றிய வலுவான புரிதலை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தை புதிய உறுப்பினர்களுக்கு சுரேஷ் பாபு வலியுறுத்துகிறார். “ரோட்டரியின் சாராம்சத்தைப் புரிந்து கொள்ளும் அறிவு மிக்க ரோட்டேரியர்கள் அர்ப்பணிப்புடன் இருப்பதற்கும், மற்றவர்களுக்கு ரோட்டரி அனுபவத்தை மேம்படுத்துவதற்கும் அதிக வாய்ப்புள்ளது” என்று அவர் கூறுகிறார்.

புதிய உறுப்பினர்களுக்கான நோக்குநிலை திட்டங்களுக்கு அவர் வாதிடுகிறார். 3 முதல் 5 வருடங்களாக உறுப்பினர்களாக இருக்கும் ரோட்டரியர்கள் கூட தங்கள் புரிதலையும் ஈடுபாட்டையும் ஆழப்படுத்த இந்த திட்டங்களில் பங்கேற்க வேண்டும் என்று அவர் பரிந்துரைக்கிறார்.

அவரது மாவட்டத்தில் 7.3 சதவீத பெண்கள் மட்டுமே உறுப்பினர்களாக உள்ளதால், பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் தெளிவாக உள்ளது. “மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளை உள்ளடக்கியதன் மூலம் DEI-ல் நாங்கள் முன்னேற்றம் அடைந்திருந்தாலும், இன்னும் குறிப்பிடத்தக்க பணிகள் உள்ளன” என்று அவர் கூறுகிறார்.

அவரது மாவட்டம் TRFக்கு $450,000 பங்களிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



## தேவ் ஆனந்த்

ஆடிட்டிங்

RC உடுப்பி மிட் டவுன், RID 3182

### CSR விழிப்புணர்வு, காலத்தின் தேவை

சில சமயங்களில் அவரை விட ரோட்டரிக்கு அதிக நேரம் கொடுப்பதால் அவரது மனைவி பொறாமைப்படுகிறார் என அவர் நகைச்சுவையாகக் குறிப்பிடுகிறார். தேவ் ஆனந்த் பல்வேறு வகைப்பாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார், “குறிப்பாக பல்வேறு தொழில் துறைகளைச் சேர்ந்த தலைவர்கள் இருந்தால் அவர்கள் ரோட்டரியின் பொது உருவத்தை மேம்படுத்துவார்கள்.”

உறுப்பினர் தக்கவைப்புக்காக, அவர் நோக்கு நிலை திட்டங்களை பரிந்துரைக்கிறார். DEI-ஐப் பொறுத்தவரை, ஆனந்த் தனது மாவட்டத்தில் உள்ள பன்முகத்தன்மையை எடுத்துக்காட்டுகிறார், ஆனால் குறைந்த சதவீத பெண் உறுப்பினர்களைப் பற்றி கவலைப்படுகிறார். ரோட்டரியர்களின் வாழ்க்கை துணைவர்களைச் சேர ஊக்குவிப்பதன் மூலம் அதை 11 சதவீதத்தில் இருந்து 33 சதவீதமாக உயர்த்த இலக்கு வைத்துள்ளார்.

ஆனந்த் தனது மாவட்டத்தில் CSR திட்டங்கள் இல்லாததற்கு அதை பற்றிய குறைந்த விழிப்புணர்வே காரணம் என்று கூறுகிறார். “சங்கத் தலைவர்கள் நிறுவனங்களை அணுகவும், ஒப்பந்தத்தின் சூட்சமத்தை அறிந்து கொள்ளவும் பயிற்சியளிக்கப்பட வேண்டும்” என்பதை அவர் உறுதியாக நம்புகிறார். அவர் தனது மாவட்டம் முழுவதும் 100 பால் ஹாரிஸ் சொசைட்டி (PHS) உறுப்பினர்களைக் கொண்டிருக்க திட்டமிட்டுள்ளார். அவரது மாவட்டத்திற்கான TRF இலக்கு $300,000 ஆகும். அவர் 1988 முதல் ரோட்டேரியராக இருந்து வருகிறார்.



**நீரவ் நிமேஷ் அகர்வால்**
ரியல் எஸ்டேட்
RC மதுரா சென்ட்ரல், RID 3011

## ரோட்ராக்டரில் இருந்து ரோட்டேரியராக மாறுதலின் சவால்

ஆரம்பத்தில் ரோட்டரியில் சேர விரும்பாத நீரவ் நிமேஷ் அகர்வால், பின்னர் ரோட்டரியின் குறிப்பிடத்தக்க தாக்கத்தை புரிந்து கொண்டார். அவரது சங்கம் மதுராவில் உள்ள ஜானகி தேவி பள்ளியில் கழிப்பறைகள் கட்டியது, வகுப்பறைகளை புதுப்பித்தது மற்றும் மின்சாரம் வழங்கியது. இதனால் பள்ளியின் பலம் 150 பெண்களில் இருந்து 600 ஆக உயர்ந்தது.

"குறைந்த வருடாந்திர கட்டணம் மற்றும் வயது வரம்பை நீக்குதல் போன்ற சமீபத்திய மாற்றங்கள், ரோட்ராக்டர்களுக்கு ரோட்டரி அறக்கட்டளையில் அதிக அணுகலை வழங்கியும், ரோட்டராக்டர்கள் ஏன் ரோட்டரி சங்கத்தில் சேர தங்கள் சங்கத்தை விட்டு வெளியேறுகின்றனர் என்ற கேள்வி எழுகிறது. இந்த மாற்றல் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்" என்று அவர் கூறுகிறார்.

DEI பற்றி அவர் கூறுகையில், "உள்ளடக்கம் மற்றும் சமபங்கு ஆகியவற்றில் கவனம் செலுத்துவது முக்கியம். உறுப்பினர்களின் சராசரி வயது 60 வயதுக்கு மேல் இருக்கும் சங்கங்களில் பெண்களை வரவேற்க தயக்கம் காட்டும் மனப்பான்மையை ஆராய வேண்டிய தேவை உள்ளது. இது போன்ற சங்கங்கள் தனி மகளிர் சங்கங்களை விரும்புகின்றன. சில பெண்கள் அனைத்து மகளிர் சங்கங்களை விரும்பினாலும், ''பாலின-நடுநிலை சங்கங்களில் சேர அவர்களை ஊக்குவிப்பது முக்கியம்'' என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

திட்டங்களில் பங்கேற்க சாத்தியமான உறுப்பினர்களை அழைக்கவும், அவர்களுடன் கடந்தகால முன்முயற்சிகளைப் பற்றி விவாதிக்கவும், புதிய உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கான திட்டங்களின் காப்பகத்தை உருவாக்கவும், அவர்களை ரோட்டேரியர்களாக ஆக்க ஊக்குவிக்கவும் அகர்வால் பரிந்துரைக்கிறார்.

அவரது மாவட்டத்தின் TRF இலக்கு $555,000-ஆக உள்ளது.



**மோகன் பராஷர்**
ஆடிட்டிங்
RC ஜலோர், RID 3055

## RCC-ல் கவனம்

மோகன் பராஷரின் மிகவும் நேசத்துக்குரிய ரோட்டரி நினைவு, நட்பு பரிமாற்ற திட்டத்தில் பங்கேற்றது தான். அது 2014-ல் அவரை அமெரிக்காவின் தெற்கு அலபாமா, RID 6880-க்கு அழைத்துச் சென்றது. இந்த அனுபவம், வாழ்க்கையை மாற்றும் வெளிப்பாட்டை வழங்குகிறது என்று அவர் நம்புகிறார், மேலும் ஒவ்வொரு ரோட்டேரியரையும் அதன் ஒரு பகுதியாக அவர் ஊக்குவிக்கிறார்.

அவரது மாவட்டத்தில் ரோட்டரி சமூகப் படைகளுக்கு (RCC) ஊக்கம் அளிப்பதே அவரது முதன்மையான கவனம். "RCC கள் கிராமப்புறங்களில் ஈடுபடுவதற்கான சிறந்த வழியாகும், ஏனென்றால் RCC உறுப்பினர்கள், அவர்கள் சேவை செய்யும் கிராமங்களின் இருந்த வருவதால் அவர்களின் சமூகங்களின் சரியான தேவைகளைப் புரிந்துகொண்டு அவற்றை நிறைவேற்றுவதில் துல்லியமாக வேலை செய்ய முடியும்."

பராஷர் தனது தலைவர்களுக்கு எண்களை விட உறுப்பினர்களின் தரத்திற்கு முன்னுரிமை அளிக்குமாறு அறிவுறுத்துகிறார். புதிய உறுப்பினர்கள், ரோட்டரியின் தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்கள், குறிப்பாக என்ட் போலியோ நவ் பிரச்சாரம் குறித்து கல்வி கற்பதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்துகிறார். "உங்கள் சங்கம் மற்றும் மாவட்டத்திற்கு அப்பால் பார்க்கவும், மாவட்டத்திற்கு வெளியே உள்ள திட்டங்களில் இருந்து கற்றுக்கொள்ளவும்'' என அவர் சங்கத் தலைவர்களை ஊக்குவிக்கிறார்.

அவர் தனது மாவட்டம் DEI மந்திரத்தின் படி வாழ்கிறது என்று பெருமிதம் கொள்கிறார். "பார்வையற்ற உறுப்பினர்களுக்காக எங்களிடம் ஒரு சங்கம் உள்ளது, அவர்களுக்கும் மற்ற ரோட்டேரியருக்கும் இடையே எந்த வித்தியாசமும் இல்லை.'' மாவட்டத்தின் பெண்கள் உறுப்பினர் விகிதம் குறித்தும் அவர் பெருமை கொள்கிறார்.

அவரது மாவட்டத்தின் ஆண்டுக்கான TRF இலக்கு $200,000 ஆகும். பராஷர் 1996-ல் ரோட்டரியில் சேர்ந்தார்.

# சங்கச் செய்திகள்


RID 2981


RID 3030


RID 3000


RID 3060

**RC பாண்டிச்சேரி லெகசி — RID 2981**

NCR இந்திய நிறுவனத்தில் நடைபெற்ற இரத்த தான முகாமில் சுமார் 125 யூனிட் இரத்தம் திரட்டப்பட்டது, நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்குச் சிகிச்சையளித்துவருகிற விழுப்புரம் அரசு மருத்துவமனைக்குக் கொடையளிக்கப்பட்டது.

**RC கந்தர்வக்கோட்டை — RID 3000**

புதிய ரோட்டரி ஆண்டின் முதல் திட்டமாக, மாற்றுத் திறனாளிகளுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. இந்த உயர்ந்த பணிக்காக அவர்கள் சங்கத்துக்கு நன்றி தெரிவித்தார்கள்.



RID 3020

**RC விசாகப்பட்டினம் — RID 3020**

சம்புவானிபலெம் என்ற புறநகர்ப் பகுதியில் பழங்குடியினப் பெண்கள் அமைத்துள்ள மளிகைக் கடைக்கு DG M வெங்கடேஸ்வர ராவ் வருகை தந்தார்.

**RC நாக்பூர் சவுத் ஈஸ்ட் — RID 3030**

விதர்பா-வின் தொலைதூரப் பகுதிகளுக்கு நலப் பராமரிப்பைக் கொண்டுசெல்வதற்கென, ஜீவன் ஆதார் பஹூத்தேஷிய சன்ஸ்தா, ஷாலினிடாய் மேகெ மருத்துவ மனையுடன் இணைந்து இரண்டு நடமாடும் மருத்துவமனைகள் தொடங்கப்பட்டன.

**RC வத்வான் மெட்ரோ — RID 3060**

30 கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவு, இரும்புச் சத்து, கால்சியம் மாத்திரைகள் வழங்கப்பட்டன. நலமான உணவு, பற்றி ஒரு மருத்துவர் அவர்களுக்கு அறிவுரையளித்தார்.













**RC ஜம்மு எலைட் — RID 3070**

ஜம்மு, R S புரா வட்டம், முஸ்ஸா சக் அரசு நடுநிலைப் பள்ளியில் சுமார் 50 மரக் கன்றுகள் நடப்பட்டன, சுற்றுச்சூழல் பாதுகாப்பைப்பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

**RC அம்பாலா இன்டஸ்ட்ரியல் ஏரியா — RID 3080**

அம்பாலா கன்டோன்மென்ட் B D மேல்நிலைப் பள்ளியில், வருங்கால இந்தியா என்ற தலைப்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் 9 மாணவர்கள் போட்டியிட்டார்கள்.




**RC மொராதாபாத் மிட் டவுன் — RID 3100**


C L குப்தா கண் அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்ட 3 நாள் கண் பரிசோதனை முகாமில் 370க்கும் மேற்பட்ட குழந்தைகள் பரிசோதிக்கப் பட்டார்கள். குழந்தைகளுடைய சிகிச்சைக்கு இந்தச் சங்கம் உதவியது.

**RC கான்பூர் ஆர்யன்ஸ் — RID 3110**

உலகச் சுற்றுச்சூழல் நாளை முன்னிட்டு, நியூ ஏஞ்சல் மருத்துவமனையுடன் இணைந்து பசுமைப் பட்டைப் பகுதியில் 150க்கும் மேற்பட்ட பழ மரங்கள் நடப்பட்டன.

**RC பிரைட் மௌ — RID 3120**

பேருந்து நிலையங்கள், அஜம்கர்ஹ் ரயில்வே நிலையத்தில் உள்ள 50 ரிக்ஷா இழுப்போருக்கு, சங்கத் தலைவர் ஜிதேந்திரா ரகோலியா தலைமையில் ரோட்டரியன்கள் மழைக் காப்பு உடைகளை வழங்கினார்கள்.




# இரவும் பகலும் கதைகளுடன் விழித்திருப்போம்


*நாம் பழைய மற்றும் புதிய புத்தகங்களின் வகைப்படுத்தலில் மூழ்கி, அனைவருக்கும் ஏதாவது ஒன்று இருப்பதைக் கண்டுபிடிப்போம்.*




சந்தியா ராவ்


இந்த முறை, எனது ஆன்லைன் நூலகம் இரண்டு வெவ்வேறு புத்தகங்களை எனக்கு வழங்கியது. முதலாவது, லூயிசா மே அல்காட்டின் ஒரு நாவல். ஆம், நீங்கள் படித்தது சரிதான். அவரின் மரணத்திற்கு பிறகும் நூற்றுக்கணக்கான ஆண்டு களுக்கு மேலாக வாசகர்களைக் கவர்ந்த லிட்டில் வுமன், லிட்டில் மென் மற்றும் ஜோஸ் பாய்ஸ் போன்ற மிகப் பிரபலமான நாவல்களை எழுதியவர் தான். (இவை இன்னும் இளைஞர்களின் TBR பட்டியலில் இருக்கின்றனவா? உறுதியாக தெரியவில்லை) கேள்விக்குரிய புத்தகம் எ லாங் ஃபேடல் லவ் சேஸ். அப்படி ஒரு தலைப்பை விட அபாயகரமாக வேறு என்ன இருக்க முடியும்! லூயிசா மே அல்காட்டின் பேனாவிலிருந்து வந்ததா இது?

வீட்டுச்செலவுகளை சமாளிக்க பத்திரிக்கைகளில் தொடராக வெளியிடப்படும் பாட்பாய்லர்களை அவர் தொடர்ந்து எழுதினார். இந்த புத்தகம் 1995-ல் வெளியிடப்பட்டது, லூயிசாவின் மரணத்திற்குப் பிறகு, பிரதியை எடிட்டர் கென்ட் பிக்னெல் கண்டுபிடித்தார், பின்னர் அதை தொகுத்து வெளியிட்டார். ஜேம்ஸ் கீ எலியட் என்ற பாஸ்டோனிய பல்ப் புனைகதை வெளியீட்டாளரின் குறிப்பிட்ட கோரிக்கையின் பேரில் 1866-ல் எழுதப்பட்ட இது ஏன் அப்போது வெளியிடப்படவில்லை? எலியட் லூயிசாவின் டைனமிக் த்ரில்லர்களை கடந்த காலத்தில் அவர் வெளியிட்டுள்ளார். லூயிசா தனது டைரியில், எலியட்டுக்கு கூட இது மிக நீளமாகவும் மற்றும் மிகவும் பரபரப்பாகவும் இருந்தது என்று பதிவு செய்துள்ளார்! ஒரு பெண் சுதந்திரமாக இருப்பதற்கான உரிமை, பெண்களின் நெருக்கமான நட்பின் குணப்படுத்தும் சக்தி, பெண்-ஆண் நட்பு, துன்புறுத்தும் உறவுகளின் உளவியல், ஆன்மீக பிரம்மச்சரியம், விவாகரத்து, இருதார மணம், தற்கொலை மற்றும் கொலை என நாவல் விவாதிக்கும் சமகால பிரச்சினைகளால் அக்கால வாசகர்கள் திடுக்கிட்டிருக்கலாம் என பிக்னெல் நாவலின் முடிவில் ஒரு குறிப்பில் எழுதுகிறார். எ லாங் ஃபேடல் லவ் சேஸ் இவை அனைத்தையும் சுவாரஸ்யமான பாணியில் வழங்கியுள்ளது, அதே நேரம் லூயிசாவின் அதிநவீன சிந்தனைகளையும் வெளிப்படுத்துகிறது. 'இது ஒரு திகிலான மற்றும் முற்றிலும் வசீகரமான கதை... மேலும் இது 19-ம் நூற்றாண்டின் நாட்டின் மிகத் தெளிவான பெண்ணியவாதி என்ற ஆல்காட்டின் நிலையை உறுதிப்படுத்துகிறது' என NYTயில் ஸ்டீபன் கிங் எழுதுகிறார். "ஒரு பெண்ணை, அவரது முன்னாள் காதலன் இடைவிடாமல் துரத்துவது பற்றிய இந்த காதல் கிளிஃப்ஹேங்கர் இன்றைய தலைப்புச் செய்திகளில் இருந்து முளைத்ததாகத் தெரிகிறது. இந்த மனதை ஈர்க்கும் நாவல், ஒரு சிக்கலான மற்றும் முன்னோடியான எழுத்தாளரின் நம் நினைவை மாற்றுகிறது' என பப்ளிஷர்ஸ் வீக்லியில் ஒரு விமர்சனம் கூறுகிறது.




புக்லெஸ் இன் பாக்தாத், என்பது புத்தகங்கள், எழுத்தாளர்கள், விமர்சனங்கள், விமர்சகர்கள், இலக்கிய விழாக்கள் மற்றும் இன்னும் பலவற்றைப் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு, இதை எழுதியவர் சஷி தரூர், அவரைப் பற்றி நாம் அனைவரும் அறிவோம். அவர் ஒரு வாசகர், எழுத்தாளர், முன்னாள் தூதர் மற்றும் சொல் விளையாட்டுகளை விரும்பும் அரசியல்வாதி. மற்ற தலைப்புகளுக்கு இடையே, ரஷிய எழுத்தாளர் அலெக்ஸாண்டர் புஷ்கின் போன்ற ஒரு மேதை தனது நாட்டைத் தவிர அதிகம் அறியப்படாததை பற்றி அவர் வருந்துகிறார், மேலும் R K நாராயண் மிகுந்த புகழ் பெற்றிருக்கிறார் என்பதை கண்டு வியக்கிறார். நாராயண் தேசிய பொக்கிஷம் என்பதைப் பொருட் படுத்தாமல் பரவலாக விமர்சிப்பதற்கு அவர் பயப்படு வதில்லை. காலனித்துவ காலத்தின் தாக்கம் மறுக்கப்பட்டாலும், இந்தியாவில் நமக்கு விருப்பமான P G வுட்ஹவுஸ் பிரபலமாக


இருக்கிறார் என்பதையும் அவர் நினைவூட்டுகிறார்!

எனது தனிப்பட்ட ஆர்வத்துக்கு உரியதாக இருந்தது மதிப்பீடு செய்வதைப் பற்றிய ஒரு குறுகிய கட்டுரை, இதில் கலாச்சார சுரண்டலை சுட்டிக்காட்டுகிறார்: அதாவது, ஒருவர் சேராத கலாச்சாரத்தை யார் பிரதிநிதித்துவப்படுத்தலாம் அல்லது பேசலாம்/பேசக்கூடாது. இது தொடர்பாக இலக்கியவட்டங்களில் அதிக பேச்சும் எதிர்ப்பும் உள்ளது. இந்தச் சூழலில் நான் ஒரு சிறிய பத்தியை மேற்கோள் காட்டுகிறேன், வாசகர்கள் அதைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்: 'இலக்கியத்தின் மொத்த நோக்கம் என்னவென்றால், அது ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்திலிருந்து தோன்றினாலும், அது மற்ற மொழி மற்றும் கலாச்சார மரபுகளைச் சேர்ந்த வாசகர்களுடன் பேச வேண்டும். நல்ல எழுத்தில் நிலைத்திருப்பது கலாச்சாரம் சார்ந்தது அல்ல. நாம் எப்போதும் பிற கலாச் சாரங்களிலிருந்து இலக்கியத்தை வாசிக்கிறோம், ஏனெனில் இலக்கியம், நாம் அறிந்த சமுதாயத்திலிருந்து வந்ததா இல்லையா என்பது முக்கியமல்ல, அது மனித இயல்பைப் பற்றி நமது பார்வையை விளக்கவும் ஆழப்படுத்தவும் உதவுகிறது.'

இந்த சிந்தனை நம்மை நாடியா வாஸெப்பின் க்ரோனிகல்ஸ் ஆஃப் எ கெய்ரோ புக்செல்லர்க்கு நேரடியாக அழைத்துச் செல்கிறது, புத்தகங்களை வாங்காமல், கடன் வாங்கவே மக்கள் நடமாடுவார்கள் என்ற உண்மையை அவர் குறிப்பிடும்போது, எனக்கு இதே போன்ற அனுபவங்கள் நினைவுக்கு வருகின்றன.

க்ரோனிகல்ஸ் ஆஃப் எ கெய்ரோ புக்செல்லர் பலருக்கு, குறிப்பாக காலனித்துவ தொடர்பு கொண்டவர்களுக்கு மற்றொரு மட்டத்தில் எதிரொலிக்கும். நதியா கூறும் போது, “பல எகிப்தியர்களைப் போல வேற்று மொழிப் பள்ளி களுக்குச் சென்ற ஹிந்தும் (ஆசிரியரின் சகோதரி) நானும் அரபு மொழி அல்லாத வேறு மொழியைக் கற்றுக்கொண்டு படித்தோம். சிக்கலான மற்றும் அணுக முடியாத, கிளாசிக்கல் அரபு மொழி எங்களை அனாதையாக ஆக்கியது; ஆங்கிலம் எங்களை தத்தெடுத்துக் கொண்டது, நாங்களும் அதை மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டோம்.' நம்மில் பலர் இதை ஒப்புக்கொண்டு தலையசைக்க வாய்ப்புள்ளது. மீண்டும், அவர் எழுதுகிறார், நான் ஒற்றுமையின் வாக்குறுதியுடன் வளர்ந்தேன். என் தாய் காப்டிக் மற்றும் என் தந்தை முஸ்லிம். அவர்கள் வரலாற்றை ஒரு நீண்ட கதையாகக் கூறினர், அரபு, பிரஞ்சு மற்றும் ஆங்கிலத்தை அதிகாரப்பூர்வ மொழிகளாக அல்லாமல், எகிப்தின் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக் கான ஆட்சியின் சமீபத்திய வெளிப்பாடுகளாகக் கற்பித்தனர். ஆனால் சமீப தசாப்தங்களில், பிறரை ஏற்றுக்கொள்வதும், மத வேறுபாடு களை சகித்துக்கொள்வதும் மங்கி விட்டதாகத் தெரிகிறது.' (இந்தப் புத்தகம் 2021-ல் வெளியிடப் பட்டது.) பரிச்சயமாகத் தோன்றுகிறதா?

அரேபிய இரவுகள் பற்றி யாருக்குத்தான் தெரியாது? இது பல நூலகங்களில் பிரதானமாக உள்ளது, கதைகள் குழந்தைகளுக்காக எளிமைப்படுத்தப்பட்டுள்ளன, அரபு மொழியில் அல்ஃப் லைலா வா லைலா என்று அழைக்கப்படும் இந்த கதைகள் பாரசீக, இந்திய, அரபு மற்றும் கிரேக்க நாட்டுப்புறக் கதைகளி லிருந்து பெறப்பட்டவை. ஒரு குறிப்பிட்ட ஷெஹராசாட் மரணத்திலிருந்து தப்பிக்க ஒரு ராஜாவிடம் இந்த கதைகளை கூறினார் என்பது அனைவரும் அறிந்ததே. நதியா அதன் பின் கதையை வழங்குகிறார், ஷாஹ்ராயர் மற்றும் ஷாஜமான் என்ற இரண்டு மன்னர்கள் இருந்தனர், அவர்கள் தங்கள் ராணிகளால் ஏமாற்றப்படுவதைக் கண்டுபிடித்தார்கள். ஷாராயர் மிகவும் கோபமடைந்து, அவர் ஒவ்வொரு




இரவும் ஒரு கன்னிப் பெண்ணை மணந்து, கற்பழித்து, அவள் தலையை துண்டித்து பழிவாங்க முடிவு செய்தார். ஷெஹராசாட் தோன்றி, ஒவ்வொரு இரவும் ராஜாவிடம் ஒரு கதையைச் சொல்லும் வரை இது தொடர்ந்தது. ஷெஹராசாட் கதையை முடிக்காமல் விட்டு விட்டு, மேலும் கேட்க ராஜா அவளை உயிருடன் வைத்திருக்க வேண்டியிருந்தது. இது 1001 இரவுகள் நீடித்தது, இறுதியில், ராஜா அவளை மன்னித்து, அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

ஆண் ஆதிக்கச் சமூகத்தில் அதிகாரம் கொண்ட பெண்ணாக இருப்பதன் சவால்களை சமாளிக்க நாடியா ஷெஹெராசாட் பாணியில் ஒன்றை கடைப்பிடித்தார்: இந்தச் சமூகத்தில் ஆண்களை நிர்வகிப்பது பற்றி நான் ஒரு மச்சியாவெல்லியன் பாடத்தைக் கற்றுக்கொண்டேன்: போற்றுதலைத் தூண்டுவதை விட பயத்தைத் தூண்டுவது முக்கியமானது. காலப்போக்கில், இந்த சக்தியை மூலோபாய ரீதியாக, அளவுகளில் பயன்படுத்த கற்றுக்கொண்டேன். கெட்ட வார்த்தைகள் அணு ஆயுதங்களின் களஞ்சியம் போன்றது: உங்களிடம் அவை இருப்பதை அனைவரும் அறிந்தால், நீங்கள் அவற்றைப் பயன்படுத்தத் தேவையில்லை.' ஒரு அறிஞரும் வழக்கமான வாடிக்கையாளரும் சுட்டிக்காட்டியபடி: “உங்கள் அலமாரிகளுக்கு சக்தி உள்ளது. அதை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துங்கள்.'

நமது அலமாரிகளுக்கு சக்தி உண்டு. புத்தகங்களுக்கு சக்தி உண்டு. நாம் அவற்றை புத்தி சாலித்தனமாக பயன்படுத்த வேண்டும்.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# ஒரு முழுமையான ரோட்டரியன்

S R மது



மார்ச் 24, 2020 அன்று, PDG ராமகிருஷ்ண ராஜா மறைந்தார். அதற்கு ஒரு மாதத்துக்குமுன்னால் தான், மெட்ராஸ் சவுத் ரோட்டரி சங்கத்தின் வைர விழாவில் RI மாவட்டம் 3230 அவருக்கு "அனுபவம் மிக்க ரோட்டரி சாதனை யாளர்" என்ற விருதை வழங்கிப் பெருமைப்படுத்தியிருந்தது. 60 ஆண்டுகளுக்கு மேலாக அவருடைய அறிவார்ந்த வழிகாட்டுதலையும் அறிவுரைகளையும் பெற்றிருந்த அவர் சங்கத்தினருக்கு அவர் இல்லாத உலகத்தைக் கற்பனைகூடச் செய்ய இயலவில்லை. அவருடைய உருவம் சிறியதுதான், ஆனால், ரோட்டரியில், தொழில், சமூக வாழ்க்கையில் அவர் எட்டியிருந்த நிலையால் எல்லாரும் அவரை "உயர்ந்த மனிதர்" (சிறந்த ஆளுமை) என்று அழைத்தார்கள். ரோட்டரி ஆளுநர்கள் ஒவ்வொரு வரும் அவரை அறிவுக்கும் முதிர்ச்சிக்கும் நியாயத்துக்கும் அர்ப்பணிப்புக்கும் அடையாளமாகக் கருதினார்கள், அவரைப் பின்பற்ற முனைந்தார்கள்.

**ராமகிருஷ்ண ராஜா**
*ஒரு முழுமையான ரோட்டரியன்*
*ஆசிரியர்:* R V *ராஜன்.*
*கிரியேட்டிவ் வொர்க்ஷாப், சென்னை. விலை:ரூ.*300.




"Ramakrishna Raja A complete gentleman" என்ற தலைப்பில் Rtn R V ராஜன் எழுதிய சிறு வாழ்க்கை வரலாற்று நூல் செப்டம்பர் 1 அன்று சென்னையில் தி இந்து குழுவின் இயக்குநரும் மியூசிக் அகாதெமியின் தலைவருமான N முரளி அவர்களால் வெளியிடப் பட்டது. விளம்பரத்துறையில் பணியாற்றிய ராஜன் RC மெட்ராஸ் சவுத்தின் முன்னாள் தலைவர், 45 ஆண்டுகளுக்கு மேலாக அதன் உறுப்பினர், மற்ற எல்லாரையும் போல் ராமகிருஷ்ண ராஜா அவர்களால் ஆழமாக ஊக்குவிக்கப்பட்டவர்.

இவருடைய புத்தகம் ராஜாவின் சிறப்பான 60 ஆண்டு ரோட்டரி வாழ்க்கையையும், அவருடைய 31 ஆண்டு மியூசிக் அகாதெமிப் பணியையும், தொழில்முனை வோராக, தொழில் தலைவராக, நண்பராக, குடும்பத் தலைவராக, வழிகாட்டியாக அவர் ஆற்றிய மற்ற பல பொறுப்பு களையும் விவரிக்கிறது. "ரோட்டரியன்களுக் கிடையில் அவர் ஒரு ராஜாவாக இருந்தார்" என்றார் PDG S கிருஷ்ணசுவாமி.

1960ல், 23 வயது ராஜா RC மெட்ராஸ் சவுத்தின் பதிவுச் செயலாளராகச் சேவையாற்றினார்; 1968–69ல் தலைவரானார், 1973–74ல் மாவட்டச் செயலாளரானார், 1986–87ல் RI மாவட்டம் 3230ன் மாவட்ட ஆளுநரானார். அவர் ஆளுநராகச் சேவையாற்றிய போது, ரோட்டரியின் புகழ் பெற்ற, இளம்பிள்ளைவாதத்துக்கு எதிரான போலியோப்ளஸ் பரப்புரையை இந்த மாவட்டத்தில் தொடங்கிவைத்தார், போதை மருந்துகளுக்கு எதிரான ரோட்டரியின் போரையும் முன்னின்று நடத்தினார். 2005 முதல் 2020-ல் அவர் இறக்கும்வரை அவர் மியூசிக் அகாதெமியின் பொருளாளராகப் பணி யாற்றினார். "அவருடைய நேர்மையும் நம்பகத்தன்மையும் அற ஒழுங்கும் ஈடு இணையற்றவை" என்றார் N முரளி.

ராஜா தன்னுடன் பழகிய அனை வரிடமும் இதமாகவும் அன்பாகவும் பணியாற்றி அவர்களை அரவணைத்தார். அவருக்கு மக்களுடன் பழகுவது மிகவும் பிடிக்கும். எப்போதும் சிரித்தபடி காணப்படுவார். பெயர்கள், முகங்களை நன்கு நினைவில் வைத்துக்கொள்வார். புதிதாக நியமிக்கப்பட்ட ரோட்டரி ஆளுநர்களுக்கு வாழ்த்துகளையும் ஆதரவையும் அளிப்பது, விருந்தினர் களை விமான நிலையத்தில் வரவேற்பது, அவர்களுக்குத் தன் வீட்டில் சிறப்பாக விருந்தோம்பல் வழங்குவது, எதிர்பாராத பரிசுகள், சிந்தனை மிக்க செயல்களை முன்வைப்பது என்று பிறருக்கு உதவுவதற்காக எல்லா வகைகளிலும் பாடுபடுவார்.

"நான் எப்போது சென்னைக்கு வந்தாலும் ராஜாவின் அழகிய வீட்டில்தான் தங்குவேன்" என்றார் முன்னாள் RI தலைவர் கல்யாண் பேனர்ஜி. "ஒருமுறை, நான்



*தி இந்து குழுமத்தின் இயக்குநர் N முரளி, PDG ராமகிருஷ்ண ராஜாவை தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களிடம் அறிமுகம் செய்கிறார்.*

ரோட்டரி இயக்குநராக முயன்று தோல்வியடைந்தேன். அப்போது, எனக்கு ஊக்கம் அளிப்பதற்கென்று ராம் சென்னையிலிருந்து மும்பைக்கு ஓடிவந்தார்.'' ரோட்டரியில் தான் சந்தித்த மறக்கமுடியாத மக்களுடைய பட்டியலில் ராஜா ''மிக உயரத்தில் இருக்கிறார்'' என்றார் அவர்.

PRIP K R ரவீந்திரன் பேசுகையில், ''நான் ரோட்டரியில் சேர்வதற்கு நெடுநாள் முன்பாகவே ராமைச் சந்தித்து விட்டேன். தொடக்கத் திலிருந்தே அவருடைய அறிவும், ஒளியும், கற்றுக்கொள்ளும் திறனும் என்னை ஈர்த்தன. நான் அவரை மிகவும் மதித்துப் பின்பற்றினேன். பல முன்னாள் RI தலைவர்கள் அவரை மிக உயர்வாக மதித்தார்கள்'' என்றார். PRID PT பிரபாகர் பேசுகையில், ''என்னுடைய பதவிக் காலத்தில் ராஜா எனக்கு மிகுந்த வலிமையையும் ஆதரவையும் வழிகாட்டுதலையும் வழங்கினார். அவருடைய அறிவும் அனுபவமும் எனக்கு மிகவும் பயன்பட்டன'' என்றார்.

ஐம்பதாண்டுகளுக்கு மேலாக ராஜாவின் நண்பரான தொழில் வல்லுனர் சுரேஷ் கிருஷ்ணா பேசுகையில், ''ராமகிருஷ்ணாவை யார் சந்தித்தாலும் அவரை விரும்பத் தொடங்கிவிடுவார்கள். அவரை யார் அறிந்து கொண்டாலும் அவரை மதிக்கவும் வியக்கவும் தொடங்கிவிடுவார்கள்'' என்றார். ''ராஜாதான் என்னை ரோட்டரிக்கும் மியூசிக் அகாதெமிக்கும் அறிமுகப் படுத்தினார்'' என்று நினைவு கூர்ந்தார் தொழில்துறை வல்லுனரும் கொடையாளரும் மியூசிக் அகாதெமியின் மதிப்பு மிக்க உறுப்பினரும் ஒரு தனித்து வமான இசைக் காப்பகத்தை அமைத்தவருமான R T சாரி.

கட்டுமான வல்லுனர் தாரா முரளி பேசுகையில், ''என் தந்தை M S பட்டாபிராமன் ராஜாவின் வீட்டிலிருந்த ஊஞ்சலைப் பார்த்து வியந்தார். ராஜா அதை உடனே அவருக்குப் பரிசளித்துவிட்டார்'' என்றார்.

ராஜா ரோட்டரியைப்பற்றிப் பேசும் போது எதையும் மிகைப் படுத்தியோ, தத்துவமாகவோ, பரப்புரையைப் போலவோ பேச மாட்டார், எளிமையாகவும் எதார்த்த மாகவும்தான் பேசுவார். அவர் PRID A S வெங்கடேஷிடம் சொன்னது, ''உங்கள் குடும்பத்துக்கும் உங்கள் தொழிலுக்கும் முன்னுரிமை கொடுங்கள். அப்போதுதான் உங்களால் ரோட்டரியின் சவால்களை இன்னும் நன்றாகக் கையாள இயலும்.'' சங்க உறுப்பினர் PDG நடராஜன் நகோஜி பேசுகையில், ''நான் அவரைப்போல் சிந்திக்க முயன்றேன். நான் ஏதாவது சவாலை எதிர்கொள்ளும்போது, ராஜா இதை எப்படிக் கையாள்வார் என்று யோசித்தேன்'' என்றார். எழுத்தாளர், ஆய்வாளர், ராஜாவின் குடும்ப நண்பரான பிரேமா ஸ்ரீனிவாசன், ''சிறப்பாகவும் நல்ல நோக்கத்துடனும் வாழ்வது எப்படி என்று நான் அவரிடம் கற்றுக்கொண்டேன்'' என்றார். புகழ் பெற்ற டென்னிஸ் வீரர் ராமநாதன் கிருஷ்ணன் லயோலாக் கல்லூரியில் ராஜாவுடன் படித்தவர். ஒருமுறை தான் டென்னிஸ் விளையாடவும் ராஜா தொழில்முறையாகவும் டோக்கியோ வுக்குச் சென்றிருந்தபோது, ஒரு குளிர் இரவில் அங்கிருந்த விமான நிலையத்தில் ராஜா தன்னைச் சந்தித்ததை அவர் நினைவுகூர்ந்தார், தான் தன்னுடைய வாழ்க்கைத் துணைவராக லலிதாவைத் தேர்ந் தெடுக்க எண்ணியிருந்தபோது, அவர் தன் டென்னிஸ் வாழ்க்கைக்கு மிகச் சிறந்த ஆதரவாக இருப்பார் என்று சொல்லி ராஜா தன்னுடைய தீர்மானமெடுத்தலுக்கு உதவியதாகவும் அவர் சொன்னார்.

2019ம் ஆண்டின் பிற்பகுதியில், அமெரிக்காவிலிருந்த தன் மகன் ரங்கநாத்தின் குடும்பத்துடன் நேரம் செலவிடுவதற்காகவும் சில நலச் சிக்கல்களிலிருந்து குணமாவதற் காகவும் ராஜா அமெரிக்காவுக்குச் சென்றார். ஆனால், தன் சங்கத்தின் வைர விழாக் கொண்டாட்டங்களின் போது அவர் சென்னைக்குத் திரும்பி விட்டார். அந்த விழாவின்போது ராஜா சற்றுத் தளர்ந்திருந்தது உண்மை. ஆனால், தன் சங்கத்தின் சாதனையை எண்ணி அவர் மிகவும் மகிழ்ந்தார். மார்ச் மாதம் அவர் இறந்தபிறகு, RC மெட்ராஸ் சவுத் அவர் பெயரில் ஓர் ஆண்டு விருதை உருவாக்கியது.

ராஜா இந்தச் சங்கத்தின் முதல் மாவட்ட ஆளுநரான CV ஜார்ஜின் பொன்மொழி ஒன்றை அடிக்கடி சொல்வார்: ''நாம் பழங்காலத்தில் சிக்கிக் கிடக்கக்கூடாது. எதிர் காலத்தை நோக்கிப் பயணம் செய்ய வேண்டும்.'' ரோட்டரியைப்பற்றிய அவருடைய அணுகுமுறையும் அதுதான்.

இந்தப் புத்தகத்தை Amazonல், அல்லது, Compuprintல் (தொலை பேசி எண்: 63822 03140) வாங்கிக் கொள்ளலாம்.■

> *''ஒருமுறை, நான் ரோட்டரி இயக்குநராக முயன்று தோல்வியடைந்தேன். அப்போது, எனக்கு ஊக்கம் அளிப்பதற்கென்று ராம் சென்னையிலிருந்து மும்பைக்கு ஓடிவந்தார்.''*
>
> **கல்யாண் பேனர்ஜி**
> முன்னாள் RI தலைவர்

# சக்கர நாற்காலிக் கூடைப்பந்துப் போட்டிகள்

ரோட்டரி செய்திக்குழு

மாற்றுத்திறனாளிகளை ஊக்கு விப்பதற்கெனச் சக்கர நாற்காலிக் கூடைப்பந்துப் போட்டிகளை நடத்தியது RC பாண்டிச்சேரி கேலக்சி, RID 2981. புதுச்சேரி, அதைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்ற இந்த விளையாட்டுச் சந்திப்பு இந்திரா காந்தி விளையாட்டுப் பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

தங்கள் ஊனத்தைப் பொருட்படுத் தாமல் போட்டி மனப்பான்மையுடன் விளையாடிய அணிகளைச் சங்கத்தலைவர் K முரளியும் ரோட்டரியர்களும் ஊக்குவித்தார்கள். இந்தச் சங்கம் இந்தப் போட்டிகளை ரூ.32,000 செலவில் நடத்தியது.■




# RI தெற்காசியா அலுவலகத்திலிருந்து செய்தி

### தனி சிறப்பு வாய்ந்த மானிய அறிக்கைக்கான மாவட்ட அங்கீகாரம்

ஏப்ரல் 2023 கூட்டத்தில், TRF அறங்காவலர்கள், ரோட்டரி ஆண்டில் தனி சிறப்புவாய்ந்த மானிய அறிக்கையுடன் குறைந்தபட்சம் 90 சதவீத இலக்கை அடையும் மாவட்டங்களை ஆண்டுதோறும் அங்கீகரிக்க முடிவு செய்தனர்.

2023–24-ல் ரோட்டரி ஆண்டில், தனிச் சிறப்புவாய்ந்த மானிய அறிக்கை முயற்சிகளுக்காக உலக அளவில் 59 மாவட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு அறங்காவலர் தலைவர் பாரி ரஸ்ஸின் கையொப்பத்துடன் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தெற்காசியாவைச் சேர்ந்த RID 3220 இந்த சிறப்பு பாராட்டுச் சான்றிதழை பெற்றுள்ளது. அறங்காவலர் பரத் பாண்ட்யா, RID 3220-ஐ வாழ்த்தினார்.

### ரோட்ராக்ட் வழங்கும் சான்றிதழ்

2023–24-ல், ரோட்ராக்ட்டின் பங்களிப்பு கணிசமாக அதிகரித் துள்ளது. 2022–23-ல் 640 சங்கங்கள் சுமார் 242,000 டாலர் பங்களிப்பு செய்திருந்தது. அவற்றுடன் ஒப்பிட்டால், 2023–24-ல் 882 ரோட்ராக்ட் சங்கங்கள் 391,558 டாலர்கள் பங்களிப்புச் செய்துள்ளது அதிகமானதாகும். ஓராண்டில் TRF-க்கு 100 டாலர் பங்களித்த சங்க உறுப்பினர்களுக்கு சான்றிதழ் வழங்கி அங்கீகரிக்கிறது. ஒவ்வொரு சங்கமும் 2023–24 அறங்காவலர் தலைவர் பாரி ரஸ்ஸின் கையொப்பமிட்ட சான்றிதழைப் பெறும்.

2019–20 முதல், ரோட்ராக்ட் வழங்கும் சான்றிதழ் மூலம் TRF-க்கு ரோட்ராக்டர்கள் 830,059 டாலர்கள் பங்களிப்புச் செய்துள்ளனர்.

### பெருநன்கொடையாளர் அங்கீகார வழிகாட்டுதல்கள்

பெரு நன்கொடையாளருக்கான அங்கீகாரம் தனிப்பட்ட பங்களிப் பாளர்களுக்கு மட்டுமே வழங்கப் படும். மனைவியின் பங்களிப்பை மட்டும் அங்கீகாரத்துடன் இணைத்துக் கொள்ளலாம்.

குடும்பத்தால் நிர்வகிக்கப் படும் நிறுவனம் அல்லது குடும்ப அறக்கட்டளை மூலம் நிர்வகிக்கப் படும் நிறுவனங்கள் பங்களிப்பு வழங்கினால், உரிமையாளர் அல்லது அறங்காவலர் இவர்களில் யாருக்கு அங்கீகாரம் வழங்கவேண்டும் என்பதை எழுத்து மூலம் அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டும்.

பெருநன்கொடையாளர் களுக்கான அங்கீகாரம் என்பது தானாக நடைமுறைப்படுத்தப் படுவது அல்ல, அதற்கான நபர் யார் என்பதை நன்கொடையாளர் RI ஊழியருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

வருடாந்திர நிதி, போலியோ பிளஸ் மற்றும் உலகளாவிய மானியங்களுக்கான பங்களிப் புக்காக அறக்கட்டளை அங்கீகாரப் புள்ளிகளை வழங்குகின்றன. எண்டௌவ்மென்ட் நிதி, நேரடி நன்கொடை மற்றும் CSR நிதியுதவிகளுக்கு அங்கீகாரப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.■

# ரோட்டரியின் மக்கள் நலத்திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

**ஒரு முன்னோடி நரம்பியல் நிபுணர்**
RC மெட்ராஸ் டெம்பிள் சிட்டியின் முன்னாள் தலைவரான DR பிரித்திகா சாரி சென்னை அப்பல்லோ மருத்துவ மனையின் முதல் நரம்பியல் நிபுணர் ஆவார். அப்பல்லோவில் நரம்பியல் துறையின் 41-வது ஆண்டு நினைவாக ஒரு தபால் தலை வெளியிடப்பட்டது.



**ஒரு முன்னோடி நரம்பியல் நிபுணர்**
நரம்பியல் நிபுணர் Dr பிரித்திகா சாரி (இடமிருந்து மூன்றாவது) அப்பல்லோ மருத்துவமனை தலைவர் Dr பிரதாப் ரெட்டி மற்றும் நிர்வாக துணைத் தலைவர் பிரீத்தா ரெட்டி தபால் தலை வெளியீட்டு விழாவில்.

### கவனித்துக்கொள்வோரைக் கவனித்துக்கொள்ளுதல்

ஹெல்ப்பிங் ஹார்ட்ஸ் அறக் கட்டளை, மேட்டுப்பாளையம் நகராட்சியுடன் இணைந்து, மேட்டுப்பாளையம் அரசு மருத்துவ மனையில் நோயாளிகளைப் பார்த்துக் கொள்வோருக்கெனப் படுக்கைகள், கழிப்பறைகள், மின்விசிறிகளுடன் தங்குமிடங்களைக் கட்டியுள்ளது RC மேட்டுப்பாளையம் பிரைம், RID 3203.



**கவனித்துக் கொள்வோரைக் கவனித்துக் கொள்ளுதல்**
*மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் புதிய ஓய்வு விடுதியில் சங்க உறுப்பினர்கள்.*

### பெரியவர்களுக்கான அறிவு மையம்

கோலாரில் பெரியவர்களுக்கான 5 எழுத்தறிவு மையங்களைத் தொடங்கியது RC பெங்களூர் பால்ம்வில்லெ, RID 3191. PDG ராஜேந்திர ராய் இந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.



**பெரியவர்களுக்கான அறிவு மையம்**
PDG *ராஜேந்திர ராய், சங்க உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகளுடன் வயது வந்தோர் எழுத்தறிவு மையத்தில்.*

### துணிச்சலுக்கான பயிலகம்

RID 3291-ன் முன்னெடுப்பான வீராங்கனா திட்டத்தின்கீழ், வட கொல்கத்தாவிலுள்ள ஒரு பெண்கள் பள்ளியில் தற்காப்புப் பயிலகம் ஒன்றை நடத்தியது RC நார்த் கல்கத்தா.



**துணிச்சலுக்கான பயிலகம்**
*தற்காப்பு கலை வகுப்பில் மாணவர்கள்.*

# பசுமைச் சலவையா? அல்லது இயற்கையிலேயே பசுமையா?

ப்ரீதி மேஹரா

**நாம் ஒரு பொருளை வாங்க கடைகளுக்குச் செல்லும்போது அவை பசுமையானவை என நுகர்வோரை தவறாக வழிநடத்துகின்றன நிறுவனங்கள். ஆனாலும், நம்பிக்கையின் பேரில்தான் நாம் அவற்றை வாங்கி வருகிறோம்.**

பல்பொருள் அங்காடிகளில், அலமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பொருள்களில் 'Organic' என்று குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால், அவை உண்மையிலேயே பசுமையானவையா? சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நுகர்வோரிடம் அதிகரித்துவரும் உலகில், "இயற்கையானவை, இரசாயன கலப்பற்றவை, 100 சதவீதம் இயற்கையானவை, நீடித்திருப்பவை அல்லது சைவ உணவு" என்ற குறியீட்டுடன் சந்தேகத்துக்கு இடமில்லாதவாறு நுகர்வோரை கடைக்காரர்கள் இழுக்கிறார்கள். இந்த குறியீடுகள் உணவு முதல் அழகுசாதனப் பொருள்கள் வரை அனைத்து பொருள்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கும். இவர்கள் குறிப்பிடுவதில் பாதி உண்மையாக இருக்கலாம் அல்லது முழுவதுமே தவறானதாக இருக்கலாம்.

பசுமைச் சலவை என்ற சொல் பணத்தை குவிக்கிறது. ஒரு நிறுவனம் தனது நடைமுறைகளும் விற்பனை செய்யப்படும் பொருள்களும் சுற்றுச்சூழலுக்கு உகந்தவை என்று கூறினாலும் இவை சில நேரங்களில் தவறானவையாகவோ அல்லது பொய்யானவையாகவோ இருக்கலாம்.

இவை பெரும்பாலும் புத்திசாலித்தனமான விற்பனைத் தந்திரமாக இருக்கலாம், பயன்படுத்தப்படும் ஒரு பொருள் தொடர்பாக குறிப்பிட்ட உண்மைகளை மறைக்கலாம். என்னவிதமான இரசாயனம் கலந்திருக்கிறது என்பது தொடர்பான விவரங்களைக் குறிப்பிடாமல் மறைக்கலாம். நுகர்வோர் இதையெல்லாம் கவனிக்க மாட்டார்கள் என்றுகூட நினைக்கலாம்.

எனது நண்பர் ஒருவர் சமீபத்தில் சைவ உணவுக்கு மாறினார். அவள் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருட்களில்கூட தீங்கு ஏற்படாமல் தயாரிக்கப்பட்டுள்ளதா என்று பார்ப்பார். இயற்கையாக தயாரிக்கப்படும் அழகுசாதனப் பொருட்களில் பூச்சிகள், வண்டுகளிலிருந்து எடுக்கப்படும் "கார்மைன்" என்னும் கருஞ்சிவப்பு பொருள் சேர்க்கப்படுகிறது என்று தெரிந்ததும் அதிர்ச்சி அடைந்தார். செயற்கையான கார்மிக் அமிலம் சேர்க்கப்படுவதால் உற்பத்தி நடைமுறையும் அதிக செலவு பிடிக்கிறது. எனவே பெரும்பாலான தயாரிப்பாளர்கள் பூச்சிகளிலிருந்து பெறப்படும் இரசாயனப் பொருள்களையே பயன்படுத்துகின்றனர். இதை அறிந்ததிலிருந்து என் தோழி, பல அழகுசாதனப் பொருள்களைப் புறக்கணிக்க ஆரம்பித்து விட்டாள்.

"பாக்கெட் செய்யப்பட்ட பருப்பு வகைகள், பழவகைகள், காய்கறிகளின் மீது "பூச்சிக் கொல்லி மற்றும் இரசாயன உரங்கள் பயன்படுத்தப்படாதது" என்று குறிப்பிட ஆரம்பித்து விட்டனர். இதை உண்மை என்று நம்பலாமா? இயற்கை வேளாண்மை என்றால் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட பூச்சிக் கொல்லிகள், இரசாயன உரங்கள் இல்லாமல் மரபுணு மாற்றப்படாத விதைகள் மூலம் விளைவிக்கப்பட்ட பயிர்களாகும். மேலும் நிலத்தை சுழற்சி முறையில்



விவசாயம் செய்யும் நடைமுறையை பின்பற்றியதாகும். சுருக்கமாகச் சொன்னால், இயற்கை வேளாண்மை என்பது உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் நவீன வேளாண் நடை முறைகளை பின்பற்றுவதையும் பக்கவிளைவுகள் ஏற்படுவதையும் தவிர்ப்பதாகும்.

ஒரு பிராண்ட் பெயரில் விற்கப்படும் விளை பொருள்கள் விளையும் வயல்களை ஆய்வு செய்வது என்பது இயலாத காரியம். அதிர்ஷ்டவசமாக, இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் (FSSAI) ஒரு புதிய இலச்சினைக் கொண்டுள்ளது. *Unified India Organic* என்று பெயரிடப் பட்டுள்ள அந்த இலச்சினை விரைவில் சான்றளிக்கப்பட்ட இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட பொருள்களின் பாக்கெட்டுகளில் குறிப்பிடப்படும். பச்சை நிறத்தி னாலான இந்த இலச்சினையில் ஒரு வட்டம், ஒரு இலை மற்றும் டிக் மார்க் குறிப்பிடப்படும். இது ஏற்கெனவே உள்ள இந்திய ஆர்கானிக் மற்றும் ஜெய்விக் பாரத் இலச்சினைக்கு மாற்றாக இருக்கும்.

காய்கறிகளைப் பொருத்தவரை, நீங்கள் பார்வையிட்ட உள்ளூர் இயற்கை வேளாண் பண்ணை களில் தயாரிக்கப்பட்ட வைகளை நம்புவது சிறந்தது அல்லது உங்களுக்கு அறிமுகமானவர்களிடம் வாங்குவது சிறந்தது. பிரச்னை என்னவென்றால் இயற்கை வேளாண்மை (ஆர்கானிக்) மூலம் தயாரிக்கப்பட்ட காய்கறிகள், பழங்களின் விலை அதிகமாக இருக்கும். ஆனால், சில மோசமான வியாபாரிகள் ஆர்கானிக் முறையில் தயாரிக்கப் பட்ட காய்கறிகள், பழங்கள், மேலும் விலை குறைவாகத் தருகிறோம் எனக் கூறி நுகர்வோரை இழுக்கக்கூடும். ஆர்கானிக் முறையில் தயாரிக்கப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்கள், இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்தப் பட்டு தயாரிக்கப்பட்டவை போல வண்ணமயமாகவும் கவர்ச்சியாகவும் இருக்காது என்பதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு புகார்கள் வந்ததை அடுத்து இந்திய விளம்பர தர நிர்ணய குழு *(Advertising Standards Council of India)* பசுமைச் சலவை என குறிப்பிட்ட போலியான தயாரிப்புகளைத் தடுக்க புதிய வழிகாட்டுதல்களை உருவாக்கியுள்ளது. அதே நேரத்தில் வர்த்தக அமைச்சகத்தின் கீழ் உள்ள மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் போலியான அல்லது தவறான உரிமை கோரல்களைத் தடுக்க வரைவு வழிகாட்டு விதிமுறைகளை உருவாக்கியுள்ளது.

எனினும் இந்த துறையின் நிபுணர்கள் வகுத்துள்ள விதிகளைப் பின்பற்றினால் பசுமைச் சலவை செய்யப்பட்ட பொருள்கள் எவை என்பதைக் கண்டறியலாம். உற்பத்தியாளர்களில் தந்திரமான சிலர், நன்மைகளை மட்டும் எடுத்துக் கூறிவிட்டு பாதிப்புகளை சொல்லாமல் விட்டுவிடலாம்.

நாம் பின்பற்றவேண்டிய அடிப்படை விதி என்னவென்றால், "இயற்கையானது, சுற்றுச்சூழல் பாதுகாப்பானது, நீடித்து இருக்கக் கூடியது, நச்சுத்தன்மையற்றது" என்று வியாபாரிகள் சொன்னால் அவர்களின் வார்த்தைகளை நம்பி நாம் ஏமாந்துவிடக்கூடாது. கூட்டிக் கழித்துப் பார்த்தால் பொருள்களின் தயாரிப்பு லேபிள்களில் அவர் சொல்லியிருப்பதெல்லாம் தெளி வில்லாமலும் அர்த்தமற்றதாகவும் இருக்கும். ஆதாரம் இல்லாமல் சொல்லப்படும் வார்த்தைகளை நம்பி நீங்கள் ஏமாந்துவிடக்கூடாது. உதாரணமாக காகிதத்திலிருந்து தயாரிக்கப்படும் பொருள்கள் மறுசுழற்சி செய்யக்கூடியவை. ஆனால், காகிதத்தை தயாரிப்பதற்காக வெட்டப்பட்ட மரங்கள் எத்தனை? உற்பத்தியாளர்கள் மரங்களை மீண்டும் நடுகிறோம் என்று சொன்னாலும் ஒருபோதும் வெட்டப் பட்ட மரங்களுக்கு ஈடாகாது.

பேக் செய்யப்பட்ட பொருள்களின் லேபிள்களில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களைகூட அவற்றின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்த நாம் கவனமாக படிக்க வேண்டும். சில சமயங்களில் தயாரிப்பாளர்கள் தங்களுக்கு பசுமைச் சான்றுகள் வழங்கும் அமைப்புடன் கூட்டு சேரும் நிகழ்வுகளும் நடந்துள்ளன. அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் ஒரு உதாரணம், அமெரிக்கா மற்றும் கனடாவில் குறிப்பிடுவதைப் போல் நிலையான வனவியல் முன்முயற்சி (SFI & Sustainable Forestry Initiative) என்று குறிப்பிட்டு தங்களது தயாரிப்பு சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பானது என்று நுகர்வோர்களிடம் ஒரு தோற்றத்தை கொடுக்க முற்படுவார்கள்.

இந்தியாவில் விளம்பர தர நிர்ணயக் குழு வகுத்துள்ள புதிய வழிகாட்டு முறைகள் மூலம் விளம் பரங்கள் மூலம் பசுமைச் சலவை செய்யப்படுவதை தடுக்க முடியும். இதேபோல மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையமும் புதிதாக சில விதிமுறைகளை உருவாக்கியுள்ளன. இந்த வரைவு விதிமுறைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு அமலுக்கு வந்தால் பொருள்களின் உண்மைத் தன்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பானதா என்பது ஆதாரங்களுடன் உறுதிப் படுத்தப்படும். பசுமையானது என்ற உரிமைக்கோரல் மற்றும் பசுமை விநியோகச் சங்கிலி என்று குறிப்பிடப்படுவது "QR" குறியீடுகள் அல்லது இணைப்புகள் மூலம் உறுதிப்படுத்தப்படும். அனைத்து விளம்பரதாரர்கள், சேவை வழங்குனர்கள், பொருள் விற்பனையாளர்கள், விளம்பர நிறுவனங்கள் அல்லது ஒப்புதல் அளிப்பவர்களுக்கு இந்த விதிகள் பொருந்தும்.

யுனைடெட் இந்தியா ஆர்கானிக் சான்றிதழுடன், நாம் ஆர்கானிக் பொருள்களை வாங்கும்போது இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட பொருள்களை வாங்குவது உறுதிப்படுத்தப்படும். அடுத்த முறை சுற்றுச்சூழல் பாதுகாப்பானது, பசுமையானது என்று லேபிளில் குறிப்பிடப்பட்ட ஒரு பொருளை வாங்கும்போது ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செயல்படுவோம்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

# முதியோர் இல்லங்களுக்கு டயப்பர்கள்

ரோட்டரி செய்திக்குழு

ஆகஸ்ட்டில், கோவாவிலும் அதைச் சுற்றிலுமுள்ள முதியோர் இல்லங்களுக்கு வயதுவந்தோர் டயப்பர்களை வழங்கும் திட்டம் ஒன்றைத் தொடங்கியது மபுசா எலகன்ஸ் ரோட்டரி சங்கம், RID 3170. "ஒவ்வொரு மாதமும் முதியோர் இல்லங்களின் மிகப் பெரிய செலவு, நம் முதியவர்களுடைய தூய்மை, கண்ணியத்தை உறுதி செய்யும் டயப்பர்கள்தான். 10–15 பேரைக் கொண்ட சிறிய முதியோர் இல்லங்களில் கூட, டய்ப்பர்களுக்கு மாதம் ரூ.30,000 செலவாகிறது" என்கிறார் இந்தச் சங்கத்தின் முன்னாள் தலைவர் அஜய் மேனன். தொடக்கத்தில், இந்தச் சங்கம் கோவா-வில் பஸ்டோரா-வில் உள்ள புனித ஜோசஃப் முதியோர் இல்லத்துக்கு 30 டயப்பர் பொட்டலங்களை கொடையளித்துள்ளது, இன்னும் 100 டயப்பர்கள் பொட்டலங்கள் வரவுள்ளன.



RC *மாபுசா எலிகன்ஸ் உறுப்பினர்கள் கோவாவில் உள்ள ஒரு முதியோர் இல்லத்தில் வயது வந்தோருக்கான டயப்பர்களை ஒப்படைக்கிறார்கள்.*

"புரவலர்கள், ரோட்டரியன்களிடம் ரூ.600 (ஒரு பொட்டலத்தின் விலை) நன்கொடையாகப் மூலம் இந்த இயக்கத்தை நடத்தலாம் என்று தீர்மானித்துள்ளோம். தனி நபர்கள், பெருநிறுவனங்கள் அல்லது அமைப்புகள் கொடையளிக்கும் ஒவ்வொரு டயப்பர் பொட்டலத்துக்கும் நாங்கள் ஒரு பொட்டலத்தைக் கொடையளிப்போம். இதன் மூலம் மொத்தத் தாக்கம் இரட்டிப்பாகும்" என்றார் அவர்.■

# குழந்தைகளுக்கான நூல்கள், பொருட்கள் கொடையளிக்கப்பட்டன



*மாணவர்களுடன் சங்க உறுப்பினர்கள் அவர்களுக்கு பள்ளி அத்தியாவசிய பொருட்களை பரிசளித்த பிறகு.*

சமூகத்திலுள்ள ஏழை மாணவர்களை எட்டும்வகையில், நாக்பூரிலும் அதைச் சுற்றியும் உள்ள 23 ஜில்லா பரிஷத், 5 நகர்ப்புறப் பள்ளி மாணவர்களுக்கு 6,000 புத்தகங்கள், 300 பள்ளிப் பைகள், 500 நீர்ப் புட்டிகள், 300 மதிய உணவுப் பெட்டிகள், 300 வடிவியல் பெட்டிகள், 175 சீருடைகளைக் கொடையளித்தது RC நாக்பூர் சவுத் ஈஸ்ட், RID 3030.

"நாங்கள் கிராமப்புற மாணவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவந்தோம், அவர்களைக் கற்க ஊக்குவித்தோம், ரோட்டரியின் மந்திரத்தைப் பரப்பினோம்" என்றார் சங்கத் தலைவர் விஜய் பஜாரெ. "இந்தக் குழந்தைகள் வறுமையின் விலங்கை உடைத்து விடுதலை பெறவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். அத்துடன், பள்ளிப் பொருட்களைப் பெற்ற குழந்தைகளுக்குத் தாங்கள் முதன்மையானவர்கள், அன்பு, ஆதரவுக்கு உரியவர்கள் என்று நாங்கள் நினைவூட்டினோம்."■




*இடமிருந்து: AG பிரசன்னா கஜ்கிவாலே, DGE சுதீர் லதுரே, சங்க உறுப்பினர் சுசீலா மோடக், திட்ட ஒருங்கிணைப்பாளர் பிந்து ஷிர்சாத் மற்றும் சங்க தலைவர் ஸ்வீட்டி பஞ்சாபி ஆகியோர் இரவுப் பள்ளி மாணவர்கள் மற்றும் அவர்களின் ஆசிரியருடன்.*

Rotary PEOPLE OF ACTION

# இரவு பள்ளி மாணவர்களை மேம்படுத்தும் ரோட்டரி E சங்கம்

ஜெய்ஸ்ரீ

ரோட்டரி இ கிளப் ஆஃப் எம்பவரிங் யூத், RID 3132, ஆகஸ்ட் மாதத்தில் எழுத்தறிவு முயற்சி களை மேற்கொண்டது, இது அகமத்நகரில் உள்ள 25 இரவுப் பள்ளிகளுக்கு பயனளிக்கும் வகையில் அமைந்தது. நிதிக் கட்டுப்பாடுகள் இருந்தும், தங்களைத் தாங்களே ஆதரிப்பதற்காகப் பணி புரிந்துக்கொண்டு கல்வியைத் தொடர உறுதியுடன் இருக்கும் இளைஞர்களுக்கு இரவுப் பள்ளிகள் ஒரு முக்கிய ஆதாரமாகச் செயல்படுகின்றன. சுமார் 25–28 வயதுடைய மாணவர்கள், பகல்நேர உழைப்புக்கும் இரவு நேரக் கற்றலுக்கும் இடையே ஒரு நுட்பமான சமநிலையை நிர்வகிக்கிறார்கள் என்று திட்ட ஒருங்கிணைப்பாளர் பிந்து ஷிர்சாத் கூறுகிறார். இந்த பள்ளிகள் பொதுவாக ஒவ்வொரு மாலையும் இரண்டு மணி நேரம் செயல்படும், ஒவ்வொன்றும் சுமார் 100 மாணவர்களை கொண்டிருக்கும்.

இந்த வயது வந்தோருக்கு ஆதரவாக, ரோட்டரி E சங்கம் ஒரு SSC ஆய்வு செயலியை வழங்கியது, இச்செயலி தங்கள் போர்டு தேர்வுகளுக்குத் தயாராகி வரும் 10-ம் வகுப்பு மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒன்று. “இச்செயலியை அவர்களின் மொபைல் போன்கள் அல்லது மடிக் கணினிகளில் நிறுவலாம், இது நேரமின்மையால் பாதிக்கப்படும் மாணவர்களுக்கு ஒரு வசதியான ஆய்வுக்கருவியாக இருக்கிறது” என்கிறார் பிந்து. செயலியில் பயிற்சி தேர்வுகள் மற்றும் வினாத்தாள் தொகுப்புகள் உள்ளன, இது மாணவர்களின் தேர்வு தயார் நிலையை மேம்படுத்த முக்கியமான ஆதாரங்களை வழங்குகிறது. DG சுரேஷ் சாபூ மற்றும் DGE சுதிர் லாதுர் ஆகியோர் மாணவர்களுக்கு சங்கத்தின் நிதியுதவியுடன் ஆய்வுப் பொருட்கள் மற்றும் எழுதுபொருள் கருவிகளை வழங்கினர்.

சங்கம் RC தானே கோட்பந்தர், RID 3142 உடன் இணைந்து ஆன்லைன் ஆலோசனை அமர்வு களை ஏற்பாடு செய்து, இந்த மாணவர்களில் பலர் எதிர்கொள்ளும் தேர்வு தொடர்பான மன அழுத்தத்தை நிவர்த்தி செய்தது. ரோட்டரி கிளப் ஆஃப் அடிக்ஷன் ப்ரிவென்ஷன், RID 3141 என்ற சங்கத்தின் வல்லு நர்கள், 15 இரவுப் பள்ளிகளின் மாணவர் களைச் சென்றடைந்த ஆன்லைன் திட்டத்தில், போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் டிஜிட்டல் அடிமைத்தனத்தின் தீய விளைவுகளை எடுத்துரைத்தனர்.

மாணவர்களுக்கு மேலும் உதவ, சங்கம் ஒரு திறன் மேம்பாட்டு கண்காட்சியை ஏற்பாடு செய்தது, இதில் பிளம்பர்கள், கார்பெண்டர்கள், எலக்ட்ரீஷியன்கள் மற்றும் விருந்தோம்பல் தொழில் வல்லுநர்கள் தங்கள் தொழில்களைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொண்டனர். ஆசிரியர் தினத்தன்று, சங்கம் ஒரு இரவுப்பள்ளி ஆசிரியருக்கு Nation Builder விருதை வழங்கி கௌரவித்தது.

அகமத்நகரில் உள்ள மூன்று ஆண்டு பழமையான இந்த E சங்கத்தில் மகாராஷ்டிரா முழுவதும் 12 உறுப்பினர்கள் உள்ளனர்; அவர்களில் இருவர் அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ளனர். பெயர் குறிப்பிடுவது போல, உறுப்பினர்கள் இளைஞர்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சேவை நடவடிக் கைகளில் ஈடுபடுகின்றனர். ■

# நீண்ட ஆயுளுக்கான முழுமையான ஆரோக்கியம்

பரத் - ஷலன் சவூர்



19-ம் நூற்றாண்டின் ஸ்வீடிஷ் வியர்வை நவீன கலிஸ்தெனிக்ஸ் மற்றும் இன்று மேற்கத்திய உடற்பயிற்சியின் முக்கிய ஆதாரமாக உள்ளது. ஸ்வீடிஷ் நிலப்பிரபுக்கள் குனிந்தும், தொய்வுற்றும் இருந்த விவசாயிகளின் தோள்களை வேலையில் பார்த்தபோது கோபமடைந்ததாக நம்பப்படுகிறது. நிலப்பிரபுக்கள் தங்கள் குடிமக்கள் பார்ப்பதற்கு சிப்பாய் போல இருக்க வேண்டும் என்று விரும்பினர். எனவே, இராணுவவாத வழிகளில் பயிற்சி களையும் இயக்கங்களையும் வகுத்தனர். நிமிர்ந்த முதுகெலும்புகள் மற்றும் சதுர தோள்கள் கலிஸ்தெனிக்ஸ் மூலம் தேடப்பட்டு கற்பிக்கப்பட்டன.

ஆனால், நிமிர்ந்த மார்பு, தோள்கள் மற்றும் தலை ஆகியவை இயற்கைக்கு மாறான அழுத்தம் காரணமாக முதுகுத்தண்டில் அடிக்கடி வலியை ஏற்படுத்துகிறது. நம் தோள்கள் இயற்கையாக வடிவமைக்கப்பட வேண்டியவை. எனவே இந்த வரைவு சிப்பாய் களோ அல்லது விளையாட்டு வீரர்களோ அல்லாத பெரும்பான்மை யினருக்கு தத்துவரீதியாக தாக்குதலாக இருக்கும் மற்றும் உடலியல் ரீதியாக தீங்கு விளைவிக்கும்.

20-ம் நூற்றாண்டு அழகான உடல் மேல் நம்பிக்கையை ஏற்படுத்தியது - இது பார்பி டால் மற்றும் GI ஜோவின் காலம். இந்த தயாரிப்புகளின் அறிவியல் மற்றும் சந்தைப்படுத்தல் அதன்மேல் ஒரு நேர்மறையான தோற்றத்தை உருவாக்கி, கேஷுவல் உடற்பயிற்சி ஆடைத் தொழிலைய வடிவமைத்து, இதில் பொருந்த விரும்புபவர்களை ஈர்த்தது. ஓய்வு மற்றும் விளையாட்டு பிராண்டுகள் சந்தைப்படுத்துதல் இவ்வளவு சுறுசுறுப்பாக எப்போதும் இருந்ததில்லை. அழகு என்பது மேற்பரப்பு நிலை மட்டுமே; உண்மையான ஆரோக்கியம் என்பது முழு மனிதனையும் கவனித்துக் கொள்வதாகும்.

இவை தொடர்புடையதாகத் தோன்றினாலும், இவற்றின் நோக்கங்கள் மிகவும் வேறுபட்டவை. சில பொதுவான நம்பிக்கைகளை-அவை பழையதா அல்லது புதியதா, உண்மையா அல்லது பொய்யா என்பதை தெளிவுபடுத்துவோம்.

### போலி தயாரிப்புகள்

இணையம் மற்றும் மொபைல் போன் போன்ற மாற்று ஊடகங்களின் வருகை மற்றும் பல இன்ஃப்ளுயன் சர்கள் போலிச் செய்திகளை உண்மை போல நமக்கு வழங்குகின்றனர். எடுத்துக்காட்டுகள்:

உடற்பயிற்சி செய்யும் போது நீர் அருந்தாதீர்கள், எல்லா பட்டியலிலும் முதலிடம் வகிக்கும் அறிவுரை. இது தவறானது, ஏனென்றால் உடல் செல்கள் ஆற்றலைப் பெறுவதற்கும் அதே நேரத்தில் உடலில் உள்ள கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கும் சுழற்சியை சார்ந்துள்ளது. திரவம் இல்லாமல், தசைகள் செயல்பட முடியாது. இதனால், இதயத்தில் அழுத்தம் ஏற்படும். எனவே, நீரிழப்பைத் தவிர்க்க உடற்பயிற்சி செய்வதற்கு முன்னும் பின்னும் தண்ணீர் அல்லது ஊட்டமளிக்கும் திரவத்தை குடிக்கவும். மேலும், ஒரு நாளைக்கு 2 அல்லது அதற்கு மேற்பட்ட லிட்டர்களை குடிக்கவும்.

உடற்பயிற்சிக்கு முன் உட்கொள்ளும் சர்க்கரை ஆற்றல் அளவை அதிகரிக்கிறது. இதுவும் தவறானது, சுருக்கமாக, மாரத்தான் ஓட்டப் பந்தயம், கோல்ஃப், டென்னிஸ் போன்ற ஒரு பெரிய நிகழ்வில் பங்கேற்ற பிறகு மட்டுமே உங்களுக்கு சர்க்கரை தேவைப்படும்.

உப்பு மாத்திரைகள் சோர்வைத் தடுக்கும். உப்பு மாத்திரை என்பது ப்ரைனின் ஒரு திடமான துண்டு. மேலும் இது வயிற்றின் சளி சவ்வு மீது குவியும்போது, அது குமட்டல் மற்றும் வாந்தியை ஏற்படுத்தும். அதற்கு பதிலாக, நீங்கள் உடற்பயிற்சி செய்வதற்கு முன் மற்றும்/அல்லது உங்கள் அமர்வுக்குப் பிறகு உங்கள் உணவில் சிறிது உப்பு சேர்க்கவும். ஆனால் அதை

மிகைப்படுத்தாதீர்கள். உங்கள் உடலால் உப்பை சேமிக்க முடியாது மற்றும் அதிகப்படியான அளவு தசை பிடிப்புகள் மற்றும் பலவீனத்தை ஏற்படுத்தும்.

இன்னும் பல அரை உண்மைகள் மற்றும் கட்டுக்கதைகள் உள்ளன.

### உடல் மொழி

மனித வடிவம் அடிப்படையில் மற்றும் பரந்த அளவில் மூன்று வகைகளாக பிரிக்கப்படுகிறது. மீசோமார்ப்ஸ், எக்டோமார்ப்ஸ் மற்றும் எண்டோமார்ப்ஸ். எளிய தமிழிலில், இது முறையே கட்டுடல், ஒல்லி மற்றும் இடையே உள்ளவர்கள் என்று சொல்லாம். மீசோமார்ப்ஸ் என்பது பெரிய எலும்புகள் மற்றும் தசைகள் கொண்ட தோழர்கள். வியர்வை அவர்களின் மைல்கல், போட்டி, வெற்றி, அவர்களின் கடவுள்! அவர்கள் உங்கள் உடற்பயிற்சி பயிற்சியாளர்களாகவும் உங்களின் உதாரணமாக மாறும்போது தான் சிக்கல் வருகிறது. நீங்கள் ஒரு மீசோமார்ப் இல்லை என்றால், உங்களுக்கு இரண்டு தேர்வுகள் உள்ளன: ஒன்று அவர்களை போல கடினமாக உழைக்கவும் அல்லது அவர்களுடன் போட்டியிட முயற்சிப்பதை முற்றிலும் நிறுத்தவும். உங்களுக்கு அவர்கள் உத்வேகம் அளித்தாலும் எத்தனை புஷ்-அப்களைச் செய்யலாம் என்பதைச் சோதிக்க ஒரு வரம்பு உள்ளது. உண்மையில், ஆரோக்கிய மான தசைகளை உருவாக்க எளிதான வழிகள் உள்ளன. தவிர, நாங்கள் தோற்றத்தை பற்றி பேசவில்லை. நாங்கள் இங்கு வாழ்கையை பற்றி பேசுகிறோம். அங்குதான் முழுமையான ஆரோக்கியம் ஒரு புதிய உள் பரிமாணத்தைப் பெறுகிறது.

"ஏரோபிக்" என்பது காற்றில் ஆக்ஸிஜன் இருக்கும்போது மட்டுமே வாழக்கூடிய ஒரு வகை நுண்ணுயிரிகளைக் குறிக்கிறது. ஆக்ஸிஜன் தேவைப்படும் செயல்பாடுகள் அல்லது செயல்முறைகளை விவரிக்க "ஏரோபிக்" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இது நம் உடலுக்கு தேவைப்படும் ஓசோன் மண்டலம். உடலையும் மூளையையும் ஆரோக்கியமான இணக்கத்துடன் இணைக்கும் சக்தி வாய்ந்த பாலம். எனவே, உங்கள் உடற்தகுதி அளவை சரிபார்க்க வேண்டியது அவசியம். அதன் பங்கு விளையாட்டுத் துறைக்கும் ஆயுதப்படைகளுக்கும் அப்பாற் பட்டது. உங்கள் நீண்ட ஆயுள் பெரும்பாலும் உங்கள் இதயத்தின் நிலையைப் பொறுத்தது. இரண்டு எளிய சோதனைகள் மூலம் உங்கள் உடற் ஆரோக்கிய நிலையை சரிபார்க்கவும்:

உங்கள் பிடி என்பது வாழ்க்கையில் மேல் இருக்கும் உங்கள் பிடிப்பு. இது கிட்டத்தட்ட ஒவ்வொரு செயல்பாட்டுத் துறையிலும் உதவும். உங்களை உயர்த்தி, உங்களால் முடிந்தவரை மேலே தொங்குங்கள். 0 முதல் 20 வினாடிகள் வரை தங்களை இடை நிறுத்திக் கொள்ளும் ஆண்களும் பெண்களும் தொடக்கநிலை யாளர்கள். 30 வினாடிகள் வரை தொங்கும் ஆண்கள், மற்றும் 20 வினாடிகள் தொங்கும் பெண்கள் இடைநிலையாளர்கள். மேம்பட்ட நிலை என்பது ஆண்களுக்கு 60-க்கும் மேற்பட்ட வினாடிகள் மற்றும் பெண்களுக்கு 40-க்கும் மேற்பட்ட வினாடிகள் ஆகும்.

உங்கள் உள்ளார்ந்த வலிமையைச் சரிபார்க்க ஒவ்வொரு கையிலும் சம எடையைத் தூக்கி, 90 வினாடிகள் நடக்கவும்.

### தளர்வாக இருங்கள், வலிமை பெறுங்கள்

உங்கள் கைகளை உங்களால் முடிந்தவரை உங்கள் தலைக்கு மேல் கொண்டு செல்லுங்கள் உங்கள் முழு உடலும் விரிவடைவதை உணருங்கள். பின்னர் கைகளை பக்கவாட்டாக நீட்டி, உங்கள் உடற்பகுதியை உங்களால் முடிந்தவரை இரு திசைகளிலும் திருப்பவும்.

### சுவர் முன்

உங்கள் கைகளை தோள்பட்டை மட்டத்தில் சுவரில் வைக்கவும். முன்னோக்கி சாயுங்கள். சுவரில் உங்கள் மார்பை தொட முயற்சி க்கவும். முதல் நிலைக்கு திரும்பவும். 15 அல்லது 20 முறை செய்யவும். இது ஒரு செட். இலக்கு 3 செட். உடல் மற்றும் கைகளுக்கு நன்மையான பயிற்சி.

### பிளான்க்

உங்கள் உடலை தரையை நோக்கி வைக்கவும். உங்கள் முழங்கைகளை உங்கள் தோள்களுக்குக் கீழே வைக்கவும். தரைக்கு இணையான நிலைக்கு உங்கள் கால்விரல்களால் உங்கள் உடலை உயர்த்தவும். இந்த நிலையில் 1 நிமிடம் தாக்குப் பிடிக்கவும். ஒரு நிமிடத்தை அடைந்த பிறகு, 2 முதல் 3 செட் மீண்டும் செய்யவும். வாரத்திற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முறை செய்யவும். இது ஒரு முழுமையான உடல் பயிற்சி. இது வயிற்றிலும் கட்டுடலை ஏற்படுத்துகிறது. நீங்கள் முன்னேறும் போது நீங்கள் அதிக செட்களை செய்யலாம் அல்லது தாக்குப்பிடிக்கும் நேரத்தை அதிகரிக்கலாம். மெலிந்த தோற்றம் வேண்டுமா? பிளான்க் செய்யுங்கள்.

நல்ல ஆரோக்கியத்திற்கான வெகுமதியின் பொறுப்பு இப்போது உங்கள் கைகளில் உள்ளது. இது உங்கள் உடலை வலுப்படுத்தும் நேரம்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.



# சங்கச் செய்திகள்













## RC சோலாப்பூர் — RID 3132

அரசுப் பள்ளியொன்றில் மாணவர்களுக்குப் பள்ளிச் சீருடைகள் வழங்கப்பட்டன. திட்டத் தலைவர் ஷாலினி சிங்கால் இதை ஒருங்கிணைத்தார்.

## RC மும்பை எலகன்ட் — RID 3141

“முன்னேறுவோம்” என்ற திட்டத்தின்கீழ், நித்திகா அரோரா, சங்கீதா ஜெயின், டாக்டர் நிதிகா பாஹ்ல் உதவியுடன், பகவான் மகாவீர் விக்லங் சஹாயதா சமித்தி-யில், கால் இழந்த 24 பேருக்கு ஜெய்ப்பூர் கால் (ரூ.1.2 லட்சம்) வழங்கப்பட்டது.




## RC பிவண்டி சென்ட்ரல் — RID 3142

அன்னபூர்ணா திவஸ் திட்டத்தின் கீழ், பிவண்டி வட்டம், ஒவாலி கிராமத்தில் 50 செங்கல் சூளைப் பணியாளர்களுக்கும் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

## RC குல்பர்கா சகி — RID 3160

அரசு மருத்துவமனையில், புதிதாகக் குழந்தை பெற்ற, கர்ப்பமாக உள்ள சுமார் 100 பெண்களுக்குக் கர்ப்பத்தின் போதும் குழந்தை பிறந்தபிறகும் பின்பற்றவேண்டிய பராமரிப்பு வழிமுறைகளைப்பற்றி டாக்டர் சசி கலா புஜாரி அறிவுறுத்தினார்.

## RC ஹொனாவர் — RID 3170

கர்வா கிராமத்தில் சித்திவினாயக் உயர்நிலைப் பள்ளியில் மணிப்பால் KMC மருத்துவமனை, சங்கம சேவா அறக்கட்டளையுடன் இணைந்து நடத்தப்பட்ட பல் மருத்துவ முகாமில் 240க்கும் மேற்பட்டவர்கள் பரிசோதிக்கப்பட்டார்கள்.













### RC கர்கலா — RID 3182

சனூரில் உள்ள வர்தமான் தொடக்கப் பள்ளியில், மாநில நலத்துறையுடன் இணைந்து, மாணவர்களுக்கு டெங்குவுக்கு எதிரான விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

### ரோட்டரி ஈ-கிளப் மெட்ரோடைனமிக்ஸ் — RID 3201

பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவர்கள் 250 பேருக்கு விண்வெளித் திட்டம் (ரூ.3.2 லட்சம்) என்ற தொலைநோக்கி செய்யும் பயிலகம் நடத்தப்பட்டது, இது அவர்களுடைய ஆர்வத்தைத் தூண்டிவிட்டது. இதுவரை இதன் மூலம் பலன் அடைந்தோர் எண்ணிக்கை 500ஐத் தாண்டிவிட்டது.




### RC நங்கநல்லூர் எலைட் — RID 3234

மீனம்பாக்கம் கேந்திரிய வித்யாலயா, நங்கநல்லூர் ராணுவ DGQAல் 100 மரக்கன்றுகள் நடப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன, 100 பனை மரக் கன்றுகள், 2,000 விதைப்பந்துகள் வழங்கப்பட்டன.

### RC ராய்பூர் க்வீன்ஸ் — RID 3261

ராய்பூர் டாக்டர் பீம் ராவ் அம்பேத்கர் நினைவு மருத்துவமனையில், புதிதாகக் குழந்தை பெற்ற தாய்மார்கள், அவர்களுடைய குழந்தைகளின் நலத்துக்கெனப் புரதத் துணைப்பொருட்கள் வழங்கப்பட்டன.

### RC ஜஜ்பூர் — RID 3262

ரோட்டரியன்களும் அவர்களுடைய நண்பர்களும் தேவையுள்ள குடும்பங்களுக்கென உருவாக்கிய குடியிருப்புப் பகுதியான ரோட்டரி நகரை IPDG ஜெய்ஸ்ரீ மொகந்தி, PDG அசோக் மொகபாத்ரா தொடங்கிவைத்தார்கள்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# இறந்தவர்களின் உடல் உறுப்பு தானம்

# தேவை விழிப்புணர்வு

**சந்தீப் சௌஹான்**

உறுப்பு தானம் என்பது எண்ணற்ற நபர்களின் வாழ்க்கையை மாற்றும் ஒரு உயிர்காக்கும் செயலாகும். இந்தியாவில், இறந்தவர்களின் உடல் உறுப்புதானம் பற்றிய விழிப்புணர்வு அதிகம் தேவை. மருத்துவத் தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் இருக்கும் அதே நேரத்தில் உறுப்பு மாற்று அறுவைச்சிகிச்சை செய்துகொள்ளும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. உடல் உறுப்புகளின் தேவைக்கும் அவை கிடைக்கும் எண்ணிக்கையிலும் நீண்ட இடைவெளி உள்ளது.

இந்தியாவில் கலாசார மற்றும் மத நம்பிக்கைகள், போதிய விழிப்புணர்வு இல்லாமை மற்றும் தவறான தகவல்களால் இறந்துபோனவர்களின் உடல் உறுப்புகளை தானம் செய்வதில் தயக்கம் காட்டி வருகின்றனர். பல குடும்பத்தினர் உறுப்பு தானத்தின் நடைமுறைகள் மற்றும் நன்மைகளை சரிவர அறிந்திருக்கவில்லை. எனவே இறந்து போனவர்களின் உடல் உறுப்புகளை நன்கொடையாகப் பெறுவது அல்லது தானமாக பெறும் விகிதம் குறைந்த விகிதத்திலேயே உள்ளது.

ஒரு நன்கொடையாளர், தனது இதயம், நுரையீரல், கல்லீரல், சிறுநீரகம், கணையம் மற்றும் குடல்களைத் தானம் செய்வதன் மூலம் 8 உயிர்களைக் காப்பாற்ற முடியும். கருவிழிகள், தோல் மற்றும் எலும்புகள் போன்ற திசுக்கள்  பெறுபவர்கள் பலரின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும். இந்த சாத்தியக் கூறுகள் பற்றி மக்களிடம் விரிவாக எடுத்துக் கூறுவதன் மூலம் உடல் உறுப்புகள் தேவைக்கும், விநியோகத்திற்கும் இடையிலான இடைவெளியை குறைக்க முடியும்.

இது விஷயத்தில் அரசின் முன்முயற்சிகள் முக்கியப் பங்குவகிக்கின்றன. NOTTO-National Organ and Tissue Transplant Organization கொள்கை ரீதியாகவும், பிரசாரங்கள் மூலமாகவும் உறுப்புதானத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. செயல்பட முன்வரவேண்டும். உடல் உறுப்பு தானத்தில் மக்களிடம் இருக்கும் தவறான எண்ணங்களை போக்க வேண்டும்.

நமது மாவட்டத்தைச் சேர்ந்த PDG பாக் சிங் பன்னூ சமீபத்தில் ஸ்ரீநகர், லே மற்றும் லடாக் பகுதிகளில் இதற்காக பிரசாரம் செய்ய முன்வந்தார். இறந்தவர்களின் உடல் உறுப்புகளை தானமாக பெறுவது குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் எங்களின் (RID 3090) முதன்மைத் திட்டமாகும். இதற்கான முயற்சியை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம் என்கிறார் அவர்.




கட்டுரையாளர்
RID 3090
மாவட்ட ஆளுநர்
மற்றும்
ஒரு நெப்ராலஜிஸ்ட்.

# District Wise TRF Contribution

Source: RI South Asia Office

Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund.
PolioPlus excludes Bill and Melinda Gates Foundation.

As on August, 2024

(in US Dollars)


| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| 2981 | 28,498 | 1,120 | 0 | 38 | 29,656 |
| 2982 | 21,987 | 3,247 | 100 | 9,487 | 34,820 |
| 3000 | 15,268 | 1,717 | 0 | 238,096 | 255,081 |
| 3011 | 19,959 | 3,847 | 1,000 | 100,602 | 125,408 |
| 3012 | 360 | 101 | 500 | 0 | 961 |
| 3020 | 17,752 | 4,481 | 10,000 | 2,738 | 34,971 |
| 3030 | 2,293 | 138 | 1,000 | 0 | 3,431 |
| 3040 | 1,283 | 88 | 0 | 13,574 | 14,946 |
| 3053 | 11,011 | 0 | 0 | 0 | 11,011 |
| 3055 | 10,762 | 42 | 1,000 | 9,048 | 20,852 |
| 3056 | 2,691 | 0 | 0 | 133 | 2,824 |
| 3060 | 85,975 | 1,000 | 299 | 36,985 | 124,259 |
| 3070 | 5,477 | 0 | 0 | 0 | 5,477 |
| 3080 | 7,974 | 3,502 | 10,241 | 3,609 | 25,326 |
| 3090 | 1,301 | 30 | 0 | 0 | 1,331 |
| 3100 | 7,189 | 1,543 | 0 | 3,265 | 11,997 |
| 3110 | 1,519 | 24 | 0 | 0 | 1,543 |
| 3120 | 7,864 | 100 | 8,337 | 0 | 16,302 |
| 3131 | 207,783 | 3,830 | 12,000 | 36,053 | 259,665 |
| 3132 | 24,526 | 200 | 0 | 4,569 | 29,294 |
| 3141 | 212,115 | 8,511 | 51,000 | 474,979 | 746,605 |
| 3142 | 173,534 | 9,601 | 0 | 33,805 | 216,940 |
| 3150 | 50,675 | 1,899 | 6,250 | 250,100 | 308,923 |
| 3160 | 2,670 | 1,071 | 0 | 3,287 | 7,028 |
| 3170 | 21,404 | 11,388 | 0 | 974 | 33,766 |
| 3181 | 14,925 | 2,173 | 0 | 0 | 17,098 |
| 3182 | 4,201 | 108 | 0 | 0 | 4,309 |
| 3191 | 12,349 | 1,564 | 0 | 0 | 13,913 |
| 3192 | 14,968 | 1,349 | 0 | 1,976 | 18,293 |
| 3201 | 27,983 | 2,571 | 0 | 27,290 | 57,844 |
| 3203 | 16,348 | 1,398 | 15,000 | 4,601 | 37,347 |
| 3204 | 3,390 | 224 | 0 | 0 | 3,614 |
| 3211 | 8,688 | 525 | 0 | 3,048 | 12,261 |
| 3212 | 99,891 | 7,285 | 0 | 43,875 | 151,052 |
| 3231 | 11,065 | 2,785 | 30,238 | 0 | 44,088 |
| 3233 | 5,999 | 1,589 | 0 | 5,383 | 12,971 |
| 3234 | 36,726 | 3,324 | 9,566 | 62,269 | 111,885 |
| 3240 | 56,797 | 3,113 | 35,000 | 7,437 | 102,346 |
| 3250 | 104,329 | 1,141 | 1,000 | 870 | 107,340 |
| 3261 | 985 | 0 | 0 | 5,205 | 6,190 |
| 3262 | 6,205 | 100 | 0 | 0 | 6,305 |
| 3291 | 46,338 | 2,181 | 15,000 | 6,514 | 70,033 |
| 3220 **Sri Lanka** | 25,383 | 37 | 0 | 3,775 | 29,195 |
| 3271 **Pakistan** | 4,685 | 0 | 0 | 6,300 | 10,985 |
| 3292 **Nepal** | 13,449 | 3,169 | 0 | 23,363 | 39,982 |
| 63 **(former 3272)** | 200 | 283 | 0 | 0 | 483 |
| 64 **(former 3281)** | 510 | 624 | 1,000 | 0 | 2,134 |
| 65 **(former 3282)** | 164 | 500 | 0 | 0 | 664 |

* Undistricted



# ஆடைகளுக்கான மோதல்

LBW



**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

வயதானவர்கள் புதிய ஆடைகளை அணிய வேண்டுமா? இந்த கேள்வியை நான் மிகவும் தீவிரமாகக் கேட்கிறேன், ஏனென்றால் கடந்த பத்து ஆண்டுகளாக நான் என் மனைவியுடன் இது தொடர்பாக சண்டையிடுவதில் ஈடுபட்டுள்ளேன். நான் பழைய ஆடைகளை விரும்புபவன். நான் என் வாழ்நாள் முழுவதும் அதைத்தான் செய்திருக்கிறேன். அது மட்டுமல்ல. நான் ஒரே வண்ணங்களை மட்டும் விரும்புபவன் – சாம்பல் அல்லது காக்கி கால்சட்டை மற்றும் வெள்ளை அல்லது சாம்பல் புஷ் சட்டை. இதிலிருந்து விலகமாட்டேன் என்ற எனது உறுதிப்பாடு சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பே வலுப்பெற்றது. நான் அரிதாக அணியும் ஒரு சிவப்பு சட்டை, யாரோ எனக்கு பரிசளித்தது. ஆனால் ஒரு நாள் நான் அதை அணிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஒருவரை அழைத்து வர ரயில் நிலையத்திற்கு செல்ல வேண்டியிருந்தது. அத்துடன் காக்கி ஷார்ட்ஸை அணிந்திருந்தேன்.

நான் ரயில் வருவதற்காகக் காத்திருந்தபோது, விரக்தியாக காணப்பட்ட ஒரு மனிதர், அவரது மனைவி மற்றும் சிறு மகனுடன் என்னிடம் வந்து தனது இரண்டு சூட்கேஸ்களை எடுத்துச் செல்லும்படி கேட்டார். என் காக்கி ஷார்ட்ஸ் மற்றும் சிவப்பு சட்டை வைத்து அவர் என்னை ஒரு போர்ட்டர் என்று தவறாக நினைத்துவிட்டார். ஏறக்குறைய அரை நிமிடம் நான் அவரின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் விளையாடினேன், ஆனால் நான் காத்திருந்த ரயில் அப்போது உள்ளே வந்துவிட்டது. எனவே நான் அவரிடம் ரூ.150 வசூலிப்பேன் என்று சொன்னேன், இது மூன்று தசாப்தங்களுக்கு முன்பு ஒரு மிகப்பெரிய தொகை. அந்த மனிதர் என்னை திட்டிவிட்டு அங்கிருந்து சென்றார்.

ஆனால் முதல் கேள்விக்கு திரும்புவோம், வயதானவர்கள் சமீபத்திய நாகரீகங்கள் அல்லது மிகவும் புதிய ஆடைகளை அணியும்போது மிகவும் கேலிக்குரியவர்களாக தெரிகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். இது எனது தனிப்பட்ட கருத்து, எனவே நீங்கள் புதிய ஆடைகளை விரும்பினால் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். அவற்றை உங்கள் இதயம் விரும்புவதற்கு ஏற்றவாறு அணியுங்கள். ஆனால் என்னை விட இரண்டு வயது மூத்த, அல்லது 75 வயதான, எப்போதும் மாடல் உடை அணிந்த ஒரு நண்பர் எனக்கு இருக்கிறார் என்பதையும் நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும். அவரால் எப்படி இந்த ஆடைகளை வாங்க முடிகிறது என்று தெரியவில்லை. நாங்கள் சந்திக்கும் ஒவ்வொரு முறையும் 1960களின் ஒரு பழைய பஞ்சாபி நாடகம் என் நினைவுக்கு வரும். இது "சாதி ஜவானி புத்தே நு" என்று அழைக்கப்பட்டது. 1970களில் இது ஒரு படமாக்கப்பட்டது. என்னைப் போலவே கதாநாயகனின் மனைவியும் எப்போதும் பழைய உடையில்தான் இருப்பார் என்பது சுவாரஸ்யமான விஷயம். அவர் எப்போதும் கண்ணியமாகவும் நேர்த்தியாகவும் தோற்றமளிக்கிறார், அதே சமயம் கதாநாயகன் அதற்கு எதிர்மாறாக இருப்பார்.

பழைய துணிகளின் மேல் எனக்கு இருக்கும் விருப்பம் மட்டுமல்ல (அவைகளை நான் இப்போது என் மகன்களுக்கு வாங்கும் புதிய ஆடைகளுக்கு ஈடாக அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்கிறேன்), எனக்கு வண்ணமயமான ஆடைகளும் பிடிக்காது. சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பு எனக்கு ஒரு காதலி இருந்தார், அவர் எனக்கு வண்ண புஷ் சட்டைகளைப் பெற முடிவு செய்தார். நாங்கள் ஒரு துணிக்கடைக்குச் சென்றோம், அதில் ஒரு தையல்காரரும் இருந்தார். என் காதலி இரண்டு உடைகளைத் தேர்ந்தெடுத்தார். ஒன்று மஞ்சள் நிறத்தில் கருப்பு நிற கோடுகளுடன் மற்றொன்று நீல நிறத்தில் கட்டத்துடன் இருந்தது.

தைக்கப்பட்ட ஆடைகள் வந்ததும், நான் மிகவும் அழகாக இருப்பதாக அவர் சொன்னார். ஆனால் நான் மோசமாக உணர்ந்தேன் என்று சொன்னேன், சில மாதங்களுக்குப் பிறகு நான் அணிந்திருந்த, சொன்ன அல்லது செய்த அனைத்தையும் அவர் ஏற்க மறுத்ததால் நாங்கள் பிரிந்தோம். நான் உடனடியாக அந்த ஆடைகளை ஒரு பிச்சைக்காரரிடம் கொடுத்தேன், அவர் வழக்கமான ஆசீர்வாதத்தை வழங்கினார்: என் காதலி எனக்கு மனைவியாக வேண்டும்! என்று. அதிர்ஷ்டவசமாக, நான் இறுதியில் திருமணம் செய்து கொண்டவர், தொடர்ந்து முணுமுணுத்தாலும், எனது ஆடை விருப்பங்களை மாற்ற வேண்டும் என்று ஒருபோதும் வலியுறுத்தவில்லை. ஒப்பந்தம் என்னவென்றால், அவர் என்ன உடுத்துகிறார் என்பதில் எனக்கு அக்கறை இல்லை என்பதால், நான் என்ன அணிந்தாலும் அவர் கவலைப்படக்கூடாது. என்னை நம்புங்கள், இந்த ஒப்பந்தம் சிறப்பாக வேலை செய்கிறது.

நிச்சயமாக, நான் வண்ணமயமான மற்றும் புதிய ஆடைகளை அணியும் சிறப்பு சந்தர்ப்பங்களும் உள்ளன. கடைசியாக என் மகன்களின் திருமணங்களின் போது வற்புறுத்தியதால் அணிந்தேன். புகைப்படங்கள் மிகவும் அழகாக இருந்தன என்பதை நான் ஒப்புக் கொள்ள வேண்டும். இருப்பினும், நான் அதற்கு பின் அந்த குர்தாக்களை அணியவில்லை, அவற்றை என் மகன்களிடம் ஒப்படைக்க காத்திருக்கிறேன். ஆடைகளைப் பொறுத்தவரை இருவரும் முற்றிலும் மோசமான சுவை கொண்டவர்கள். இந்த ஆடைகள் கிடைத்தால் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். ■



Rotary
District 3212



THE MAGIC OF ROTARY

## Rotary club of Virudhunagar

# VIGNANA RATHAM

## Science made easy

CROSSING OVER
**606**
PROGRAMS
ALL OVER TAMILNADU




## SUCCESSFUL JOURNEY OF SCIENCE ON WHEELS

As on 31.08.2024

Total No. of Schools Visited **590**

Total No. of Colleges Visited **16**

Total No.of Students Explored **1,73,499**

Total No. of Days Travelled **413**

Total No. of Teachers Participated **7,463**

Total No. of Kilometres Travelled **32,182**

The idea of Vignana Ratham is to kindle student's interest towards Science. It is to aid students in understanding the magic of Science through creative and fun-filled experiments. RID 3212 wondered how good it would be to take the best brains to institutions in all corners of Tamil Nadu. As a result, a tie-up was made with Parikshan Trust of an Indian Scientist, Dr. Pasupathy. Mr.Arivarasan, Mr. Naveen Kumar and Mr. Satheesh were assigned to travel in Vignana Ratham and meet students of various schools every day. Numerous students benefit out of this programme and we believe that we have seeded the fervor required to bring out a Scientist from every institution we visited.

### Science on Wheels Programs As on 31.08.2024

Within RID 3212 - 324 Programs

Beyond RID 3212 - 282 Programs

**Do you want** to have Vignana Ratham travelling to a school in your Town / City / District? We would love to partner with you in this mission.

**GET IN TOUCH WITH US**
**94422 48586**



Project Chairman Rtn. R.Vadivel

Project Concept Dr. Pasupathy

PARIKSHAN CHARITABLE TRUST
Empowering society through Science...

IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

LEKHA ads/Oct 24/ Rotary/BIW

ADVT.

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.




ADVT.